Registered as a News Paper
பக்கம் - 48

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்-15 | வெள்ளி-39 | 26-02 டிசம்பர் 2004




## 50 ஆவது அகவையில் தேசியத்தலைவர்

# மாவீரர் நினைவாக...!

முக்கணமும் மண்ணதனை
முத்தமிட்டே நின்றீர்
எக்கணமும் பகையழிக்க
எழுந்துகளம் சென்றீர்
அக்கணமே உயிரதனை
அர்ப்பனித்து வென்றீர்
இக்கணத்தே உமையெண்ணி
ஈகைச்சுடர் ஏற்றிடுவோம்.

விண்ணில் இருந்து மழைத்துளிகள்
விழுகின்ற கார்த்திகையில்
கண்ணிரண்டில் நீரும்பி
கன்னத்தே வழிந்தோட
மண்ணிருந்து பகைவிரட்டி
மடிந்தோரை எண்ணிடுவோம்.
கண்ணுறங்கிக் கிடக்குமவர்
கல்லறையிற் பூச்சொரிவோம்.

தாயகத்தை மீட்டெடுக்கும்
தமிழீழப் போரினிலே
தீயவரைக் கொன்றொழித்து
தேசமிதை விடுவித்த
தூயவரே மாவீரர்
துயிலுமில்லம் சென்றிடுவோம்
நாயகரின் விதைகுழியில்
நறுமலர்கள் தூவிடுவோம்.

எழிலான பொதுவாழ்வை
இளமையிலே துறந்து
அழியாத உறுதியோடு
அணிவகுத்துச் சென்று
இழிவான பகை வென்று
இன்னுயிரை ஈந்தே
விழிமூடித் துயில்கின்ற
வீரர்களை நினைப்போம்.

இற்றரையின் விடுதலைக்கு
இன்னுயிரை அர்ப்பணித்து
கற்பனையில் அடங்காத
காவியங்கள் படைத்திட்ட
அற்புதரின் நினைவாக
அஞ்சலிகள் செலுத்திடுவோம்
சொற்பகணம் மௌனித்தே
சுடரேற்றி வைத்திடுவோம்.

மாயன்



# காரசாரம்

## பாலையும் இறைச்சியையும் கவனித்தால் போதுமா...?

உற்பத்தியைப் பெருக்குவோம், உணவுப் பஞ்சத்தை ஒழிப்போம், ஒரு அங்குல நிலத்தைக்கூட வீணாக்காமல் பயிர்செய்வோம். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர். "மேழி பிடிக்குங்கை வேல் வேந்தர் நோக்குங்கை ஆழிசூழ் உலகுக்கே அருளுங்கை காராளர்கையே"

"விவசாயி சேற்றில இறங்கினாத்தான் மற்றவர்கள் சோற்றிலே கை வைக்கமுடியும்."

இன்னுமின்னும் ஏராளமான பொன்மொழிகள், பழமொழிகள் விவசாயிகளைப்பற்றியும், அவர்களது மேன்மைபற்றியும் உரைக்கப்பட்டாலும், அவை அத்தனையும் அவர்களது கால்நடைகளையும் உள்ளடக்கியே உள்ளது. இதை இனி வரும் நவீன காலமும் மறக்க முடியாது. மாடுகள் ஏர் இழுத்து, மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து, பகல் முழுவதும் வயலுக்குள் சேற்றிலும், தரிசிலும் உழைக்கின்றன. இவற்றுக்கான ஊதியம் என்ன, விளைகின்ற நெல்லை மனிதன் உண்கிறான். வைக்கோலை அதற்குப் போடுகிறான். குத்திவரும் அரிசியை மனிதன் தின்கிறான். தவிட்டை மாட்டுக்குக் கொடுக்கிறான். பசுவிலிருந்து பாலைக் கறந்து கொண்டு அதற்கும் உணவாக இவற்றையே கொடுக்கிறான். இறக்கும்வரை மனிதனுக்கு உதவும் பிராணி இறந்தபின்னும் தோலையும் எலும்பையுங்கூட மனிதனுக்கு விட்டு விடுகிறது. கால்நடை வளர்ப்பு என்பது ஒரு பெரும் தேசியவளம். இவற்றுக்கப்பால் அதன் உடலையும் கூட உணவாக, இறைச்சியாக எடுத்துக்கொள்கிறோம்.

சரி, இவ்வளவும் நன்மை செய்யும் இந்தக்கால்நடைகளைக் கட்டாமல் அலையவிட்டால், அது கட்டாக்காலி என அழைக்கப்படும். கட்டாக்காலிகளாக இவை திரிந்தால் எந்தப்பயிரும் செய்யமுடியாது. ஆகவேதான் பயிருக்கு வேலி தேவைப்படுகிறது. வேலியை துச்சமாக மதிக்கும் கால்நடைகளும் உண்டு. அதைவிட பொருளாதார ரீதியில் பெருமளவு நிலங்களுக்கு வேலியமைப்பது பெரும் செலவை ஏற்படுத்தும். ஆக கால்நடைகளைக் கட்டிப்பராமரிப்பதே நல்லவழி. அதிகக் கால்நடைகளை வைத்திருப்போர் காலைகளில் அடைத்து அதற்கென ஒரு காவலாள் வைத்துப் பராமரிக்க வேண்டும் என்பது பொதுவான விதி. பொதுவான விதிதான் ஏனெனில், இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இரவில் மட்டும் மாடுகட்ட வேண்டும். பகலில் பயிர்செய்பவர்களே பயிரைக் காக்கவேண்டும். ஆனால் நூற்றுக்கணக்கில் மாடுகளை வளர்ப்போர், அவற்றைக் கட்டுவதில்லை. குறித்தளவு நிலத்தைப் பட்டியாக அடைத்து, அதனுள் மாடுகளை விட்டுப் பூட்டிவிடுவர். உள்ளே ஒரு சிறுகொட்டில் இருக்கும். எல்லாப் பட்டிகளிலும் கொட்டில் இல்லை. மாடுகளை அதனுள் அடைத்தால் விடியவே திறப்பார்கள். வன்னியில் மாடுகள் காலைகளில் அடைக்கப் படுகிறதா? என்பதை கவனிக்க வேண்டும். கிராமமட்டத்தில் இவர்கள் கிராமிய உற்பத்திக்குழுக்களை ஏற்படுத்தி இதை அவர்கள் கண்காணிக்கிறார்கள். உற்பத்திக் குழு எனப்படுவது அவ்வவ்கிராம விவசாயிகளைக் கொண்டது. இந்த விவசாயிகளுக்கும் கால்நடைகள் உண்டு. எனவே இக்கால்நடைகளின் கட்டுப்பாடுகளை மீறுவோரும் இவர்களாகவே உள்ளனர். பொதுவாக மல்லாவி, துணுக்காய், கோட்டைகட்டி, பனங்காமம், கரிப்பட்டமுறிப்பு, நெடுங்கேணியில் பல கிராமங்கள், மாடுகள் வீதிகளையே வதிவிடமாகக் கொண்டுள்ளதைக்காணலாம். துணுக்காய் பாலியாற்றுப்பாலத்தருகே பெருமளவு மாடுகள் வீதியை நாசப்படுத்தியுள்ளதைக்காணலாம். வீதிகளில் சாணிநிறைந்து வாகனங்களை வழுக்கிவிடுவதுண்டு. காலையில் ஆடு மாடுகளை விலக்கி வாகனம் ஓடவேண்டிவருகிறது. இரவில் பயிர்வயல்களில் கூட்டங்கூட்டமாக மாடுகள் பாய்வதால் பகல் முழுதும் உழைக்கும் விவசாயி இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருக்க நேர்கிறது. இதைப்பற்றி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை பிடிக்கப்பட்ட மாடுகளுக்கும் "பொது மன்னிப்பு" வழங்கிவிடுகிறார். அத்தோடு நான் காலைக்குள்ள தானே மாடு விடுறன் என்பார். அப்போ, காலைக்குள்ளிருந்து மாடுகள் வெளியே பாய்கின்றன. ஏன் கால்நடைகளுக்காக அடைக்கப்பட்டுள்ள காலைகளின் சீர்கேடு வன்னிப் பகுதியெங்கும் சுழன்று பாருங்கள், எங்காவது சேறு புரளாத ஒரு மாட்டையாவது காணமுடிகிறதா, இரவும் பகலும் மழையில் நனையும் விலங்குகள் இரவில் சாணியும் சேறும் கலந்து கூழாகிக்கிடக்கும் காலைக்குள் முழங்கால்கள் வரை புதைந்துபோய் நிற்கின்றன. அவை படுக்க முடியாத அளவுக்கு நெருக்கமான பட்டிகள். எவ்வளவு வேதனையாக இருக்கும். உழைப்பையும் வருமானத்தையும் பெறும் மனிதர்களுக்கு "சீவகாருண்யம்" ஏன் இல்லை. உயிர்களிடம் ஏன் அன்பில்லை. உயிரேயில்லாத மோட்டார்சைக்கிளையோ, உழவுயந்திரத்தையோ, நீர்இறைக்கும் இயந்திரத்தையோ, இப்படி நனையவிட்டபின் சேற்றிலேயே விடுகிறோமா? இல்லையே. கண்டிப்பாக கால்நடை வளர்ப்பவர்கள் இப்படி விடுவதால்தான் மாரி காலங்களில் அநேக மாடு ஆடுகள் செத்துப்போகின்றன. புதுவகை நோய்களுக்கு ஆளாகின்றன.



உழவு முடிந்ததும் மாடுகளைக் குளிப்பாட்டி நல்லபட்டிகளில் கட்டி நுளம்பு கடிக்காதவாறு தீமூட்டம் போட்டுத் தொட்டிகட்டி அதில் வைக்கோலோ புல்லோ போட்டு அவை உழக்குப்படாமல் சாப்பிடச்செய்து பெரும் 'குரச்சி'களில் பிண்ணாக்கு கரைத்துக் கொடுத்துப் பராமரித்த எங்கள் பழங்காலவிவசாயிகளை நினைத்துப் பார்க்கும் போது தற்கால விவசாயிகள் உணர்ச்சியே இல்லாத இயந்திரங்களாகி விட்டார்களோ என நினைக்கத் தோன்றுகிறது.

"மாடு முக்கிவர வீடு நெக்குவிடும்."

என்று என் தந்தையார் சொல்வார். உயிருள்ள பிராணிக்கு உடல் வருத்தம் உண்டு. அவைகளை ஏன் கருணையோடு நடத்தக் கூடாது. ஒரு நாளைக்காவது [illegible]ல்லாமல், ஒரு வாரத்துக்காவது இறைச்சியில்லாமல், எம்மால் வாழ முடிகிறதா? எண்ணற்ற பயன்களை மனிதருக்கு வழங்கும் இந்தப் பிராணிகள் எங்கள் நாட்டின் வளமல்லவா? கால்நடைகள் கடந்தகாலங்களின் பொருளாதாரத் தடையுள் எங்களைக் காத்து நின்ற பெருவளமல்லவா? மீண்டும் ஒரு மிடுக்குடன் நாம் நிமிரவைத்த அந்த விலங்குகளைப் பாதுகாக்க ஒரு சட்டமே கொண்டுவரலாம். விலங்குகளிலிருந்து பரவும் நோய்களைக் கூட நாம் விலக்கலாம், மாடு வளர்ப்போர் கண்டிப்பாக அதற்கென நல்ல பட்டிகளை வைத்திருக்க வேண்டும். அவற்றுக்கான மேய்ச்சல் தரவைகள் ஒதுக்கப்படவேண்டும். தரமானமுறையில் பராமரிக்கத் தவறுவோருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். முக்கியமாக இவற்றில் பாலைப் பரிசோதிக்கவும், இறைச்சியைப் பரிசோதிக்கவும் மட்டுமே நாங்கள் முயல்கிறோம். ஆனால் கரைந்தோடும் மாட்டுத் தொழுவங்களால் ஏற்படும் பிரச்சினைகள் கவனிக்கப்படவில்லை.

வீதிகளில் இறந்து கிடக்கும் கால்நடைகளை அவை ஊதிப்பெருக்கும்வரை அதிலேயே விட்டு வைப்பதைக்காண்கிறோம்.

ஒட்டுமொத்தமாக நாம் சுயநலவாதிகளாக மாறியது எப்போது. விவசாயிகளின் பயிரை இரவில் கால்நடைகள் மேய்வதற்கும் பட்டிகளில் அவை தங்க மறுப்பதற்கும், அவைகள் ஒழுங்கான பாங்கான இடம் இருந்தால்தானே. பாவம், மேடான வீதிகளில் போய்க் காலாற நிற்கின்றன. வீதிகளில் பயணஞ் செய்பவர்களையோ வாகனங்களையோ கூட அலட்சியம் செய்வதில்லை. அதுவும் இப்போது பெரும் மாரிபொழிகிறது. கால்நடைகளின் துயரம் பற்றி கொஞ்சம் கருணையோடு யோசியுங்கள் காலைகளை ஒரு ஒழுங்கான இடங்களில் அமைத்து ஒரு கூரைபோட்டுவையுங்கள். இல்லையேல் அவைகளைச் சுதந்திரமாக விட்டுவிடுங்கள். பயிர்ச்செய்கை இல்லாவிட்டால் என்ன? நிவாரணந் தருவார்கள், கப்பல்வரும், வெளிநாட்டுக்காசுவரும், ஹாயாக உட்கார்ந்து சாப்பிடலாம், தேசம், சுபீட்சம், அபிவிருத்தி - வளமான வாழ்வு - எல்லாம் எதற்கு? சும்மாயிருக்கச் சுகமொன்றுவருகுது என்ற பட்டினத்தார்போல, கோவணம் மிஞ்சும்.

மாயா

# விண்தொட நிமிரும் வீரன் இன்னும் பல்லாண்டு வாழ்க!



அம்பதாய் அகவை காணும்
அய்யனே நின்தன் வாழ்வில்
மங்கலம் பொலியும்; வாகை
மாலைகள் குவியும்; வெற்றிச்
சங்கதின் பாடல் கேட்டுச்
சரித்திரம் எமக்கென் றாகும்
கங்குலிங் கிலையென் றாகக்
கதிரொளி நிலமீ தாகும்.

கோபுர மணிகள் ஆர்க்க
குலமகள் குரவை சேர்க்க
தாமிர விளக்கு தீபம்
தாங்கிட மண்ணில் வந்து
நாகர அழகுத் தேராய்
நாயகன் பிறந்த நாளில்
மாபுரம் வல்வை முத்து
மாரியே மழையென் றானாள்.

தூயன சுடரும் தீபம்
துணிவுடை நடையின் வேகம்
காயன பழுக்கும் பார்வை
கழுத்தினில் வெற்றி மாலை
தேய்வன அறியாச் செம்மைச்
செல்வனின் பிறந்த நாளில்
தாயென வாழ்த்துப் பாடத்
தமிழவள் வந்தாள் வாசல்.

பூவென மலர்ந்த பிள்ளை
புயலென நடந்த தென்றல்
பாவென இனிக்கும் செம்மை
பகலெனப்பரவும் வெம்மை
கூவெனத் தமிழர் வாயைக்
கூவிடச்செய்த காலம்
தீவெனச் சிதறிப் போனோர்
சேர்ந்திட இணைத்த பாலம்.

அஞ்சிடல் அறியாத் தேனீ
அரசியல் படியா ஞானி
வெஞ்சமர் களங்கள் யாவும்
வென்றிடப்பெருகும் ஊற்று
வஞ்சகம் எழுந்து வந்து
வாசலில் நின்ற நாளில்
பஞ்செனு அதனை ஊதிப்
பறந்திடச் செய்த காற்று.

பன்னெடுங் காலம் வாழும்
பாக்கியம் நினக்குண் டாகும்
விண்தொட நிமிரும் வீர
வெற்றிகள் பலவுண் டாகும்
கண்படா துன்னைச் சுற்றிக்
காப்பவர் துணையுண் டாகும்
மண்ணிடை நெடுநாள் வாழும்
மனிதனாய் இருப்பாய் வாழி.

-புதுவை இரத்தினதுரை-

# நறுக்கென...

## பரிதாபத்துக்குரியவர் சந்திரிகாவா அநுராவா?



கடைசியில் ஜே.வி.பியினர் தமது திட்டத்தை பகிரங்கப்படுத்தியேவிட்டனர். 'மிகவிரைவில் தங்கள் கட்சி யினர் ஆட்சியைப் பிடிப்பார்கள்' என அவர்கள் ரோகணவிஜே வீரவின் 15 ஆவது நினைவு நாள் அஞ்சலிப் பேரணிக் கூட்ட நிகழ்வில் பிரகடனம்செய்துவிட்டனர்.

பிரகடனம் செய்தவர் கட்சியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வாவேதான் தமது கட்சி வெற்றிப் பாதையில் நடைபோடுவதாகவும் விரைவில் மக்கள் ஆதரவுடன் அது ஆட்சியைப் பிடிக்கும் எனவும் அவர் அங்கு உரத்துக் கூறியிருப்பதை வைத்துப் பார்க்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஐக்கியம் ஆட்டம் காணத்தொடங்கிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா...!

ஐக்கியம் என்று ஒன்று இருந்தால்தானே ஆட்டம் காண்பதற்கு என்கிறீர்களா? அதுவும் சரிதான்....

ஏற்கெனவே அடுத்த சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி தனித்துப் போட்டியிடும் என்று விமல் வீரவன்ச கூறியுள்ள நிலையில் இப்போது டில்வின் சில்வா இப்படி ஆட்சியைப் பிடிப் போம் என்று அறிக்கைவிடுத்துள்ளார்.

அதிகார அம்மணிக்கு அடிவயிற்றில் புளி கரைக்கும் வேலையை ஜே.வி.பியினர் தொடங்கிவிட்டனர். அதாவது அடுத்த தேர்தல் பேரத்திற்கு முன்னோடி நடவடிக்கையில் ஜே.வி.பி யினர் இறங்கிவிட்டனர். இப்படி மேற்குறிப்பிட்டவாறு ஏதாவது 'மிரட்டல்'களை தொடர்ந்து அறிக்கைகளாக விடுத்துக்கொண்டேயிருந்தால் அம்மணிக்கு குழப்பத்தை ஏற்படுத்திவிடலாம், அதன் மூலம் சனாதிபதியை தம் இஷ்டப்படி ஆட்டிப்படைத்துக்கொள்ளமுடியும் என்று ஜே.வி.பியினர் நினைத்துள்ளனர் போலும்...

இப்போது ஜே.வி.பியை தொடர்ந்தும் சேர்த்து உறவாடவோ அல்லது விலத்தி பகையாடவோ முடியாத நிலையில் அம்மணி தவிக்கிறார் என்றால் அவரது சகோதரரும் சனாதிபதிக்கனவில் மிதந்துகொண்டிருந்தவருமான அநுராவுக்கு ஜே.வி.பியினர் தன்னை ஏமாற்றி விட்டனர் அல்லது ஏமாளியாக்கிவிட்டனர் என்ற கோபமும் சோகமும் அதிகமாகிவிட்டது.

அவரை சனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதாகக் கூறியபடியால் ஜே.வி.பியை சுதந்திரக் கட்சியுடன் கூட்டுவைத்துக்கொள்வதற்கு அம்மணி அக்காவுடன் வாதாடியவர் அநுராதான்.

இப்போது அநுராவுக்கு எதிராக சனாதிபதித் தேர்தலில் தனியாக போட்டியிடப் போவதாக மட்டுமல்ல, ஆட்சியையும் கைப்பற்றப் போவதாக அச்சுறுத்தியுள்ள ஜே.வி.பியினர் மீது அநுரா தான் கொண்டுள்ள கோபத்தை வெளிப்படுத்தமுடியாதவராகவே உள்ளார்.

அக்காவையே ஐம்பது சதத்திற்கும் பெறுமதியில்லாத நிலையில் இருந்தவர் என்று சொன்னவர்கள் தன்னை ஐந்து சதப் பெறுமதிக்குக் கணிக்கப்போவதில்லை என்பதை அநுரா உணர்ந்தே இருப்பார்....

என்ன செய்வது?
கூடாத கூட்டங்களுடன் கூடினால்
கேட்காத பெயரையெல்லாம் கேட்கத்தான் வேண்டும்...

## பிச்சைக்காரருக்குப் பூசிய பவுடரும் விமல் வீரவன்சவின் பெருமையும்



சொத்துக்கு பங்குபோடும் குடும்பங்களைப்பற்றித்தெரியும் அதேநேரம் அரசாங்கத்துக்கு பங்குபோடும் ஜே.வி.பி யையும் தெரியும்.

நிலைமை இப்படியிருக்க ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத்திட்டத்தை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இந்த வரவு செலவுத்திட்டத்தில் தாம் எதிர்பார்க்கும் விடயங்கள் இல்லாதுவிட்டால் எதிர்ப்போம், போராட்டம் நடத்துவோம் என்றெல்லாம் அறிக்கைகளை அள்ளி வீசிய ஜே.வி.பி காரர்கள் இப்போது இந்த வரவு செலவுத்திட்டத்தை பன்மையில் அதாவது எங்களது என்றல்லவா கூறியிருக்கிறார்கள்.

அந்தத் தாடிக்கார ஜே.வி.பி யின் பிரசார செயலர் விமல் வீரவன்ச வரவு செலவுத்திட்டம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது வரவு செலவுத்திட்டம் தொடர்பாக ஐக்கியதேசியக்கட்சியினால் இன்று சரியான விமர்சனத்தை செய்யமுடியாமல் இருக்கிறது. முன்னதாக ரோகித போகெல்லா கமேவ ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் உரையாற்ற இருந் தார். ஆனால் அவரும் அரசாங்கத்தில் இணைந்துகொண்டார். இன்று விவாதத்தை ஆரம்பிக்கக்கூட ஒருவர் ஐக்கியதேசியக் கட்சியில் இல்லை.

சர்வதேசம் இன்று உலகமயமாக்கலுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் அவற்றை சமாளித்து நேர்மையான வரவு செலவுத்திட்டத்தை 'நாம்' சமர்ப்பித்துள்ளோம் என்றுள்ளார்.

இது என்னய்யா நாடு... இது என்னையா அரசாங்கம் அதுசரி. இந்த வரவு செலவுத் திட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சி பிச்சைக்காரனுக்கு பவுடர் பூசியிருப்பதைப்போன்றது என்றல்லவா கிண்டலடித்திருக்கிறது.

விமல் வீரவன்ச என்னவென்றால் செய்ய முடியாத காரியம் ஒன்றை செய்திருப்பது போல வம்புக்கிழுத்திருக்கிறார் ஐக்கிய தேசியக்கட்சியை.

எப்படியோ சபைக்கு வரவு செலவுத்திட்டத்தைக் கொண்டு வந்தாச்சு நாலரை மணியோடு விசிலடித்தபடி வீட்டுக்குச் சென்ற அரசாங்க ஊழியரெல்லாம் ஐந்தரை மட்டும் இருந்து அழுதுவடியும் படியாகவும் செய்தாகிவிட்டது.

இந்த நிலையில் அரசாங்க ஊழியர்களுக்கு கூட்டப்பட்ட சம்பளத்தில் இந்த ஒரு மணித்தியாலத்தை மேலதிக வேலைநேரமாகக்கொண்டு சம்பளம் வழங்கினால் வழங்கப்போவதாகக் கூறப்படும் சம்பள உயர்வு எவ்வளவு என்பது யாரோ கேட்பது காதில் கேட்கத்தான் செய்கிறது.

## காலக்கெடு விதிக்கும் காலாவதியாகும் அம்மணி



யுத்தமா? சமாதானமா? இது அந்த கிழட்டு நரி ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஒரு காலத்தில் தமிழ் மக்களை நோக்கிக் கேட்ட வார்த்தைகளாகும்.

யுத்தத்தை பிரகடனம்செய்துகொண்டே அவர் விடுத்த அந்த வெறித்தனமான சவாலுக்கு தமிழ்மக்கள் அவர் சாத்தான்களுடன் கூட்டுச் சேருமளவுக்கு தகுந்த பதிலடியைக் கொடுத்தார்கள்.

இப்போது பேச்சுக்கு வருவீர்களா...? வரமாட்டீர்களா? என்றும் ஒருமாதத்திற்குள் பதில் கூறுங்கள் என மிரட்டியுள்ளார் சமாதானத் திற்கான யுத்தம் என்ற தத்துவத்தின் 'மாதா' வான சந்திரிகா.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்,
அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாடு,
பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்கள் இறக்குமதி,
சீனாவிலிருந்து ஆயுத தளபாடக்கொள்வனவு என யுத்தத்தயாரிப்புகளை தீவிரமாக மேற்கொண்டபடி காலக்கெடுவிதிக்க முயன்றுள்ளார் அம்மணியார்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள்தான் சமாதானத்தை முன்னெடுக்க அரசு மேற் கொண்டுள்ள ஏற்பாடுகளா?

யுத்தத்திற்கு தயார்... சமாதானத்திற்கு வருகிறீர்களா இல்லையா, என்று அம்மணி சவால்விடுவது போலல்லவா உள்ளது?

புரிந்துணர்வு உடன்பாட்டின் ஒரு முக்கிய விதியான இராணுவச் சமநிலை பேணப்படுதல் என்ற முக்கிய அம்சத்தை மீறிக்கொண்டே சமாதானம் பேசத் தயாராவதாகக் கூறுவது என்ன நியாயம்?

சமாதான எதிர்ப்பாளர்களை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு அமைதி பாட்டுப் பாடும் அம்மணியின் நகர்வுகள் யாவும் மீண்டும் ஓர் இருண்ட யுத்தயுகத்தை நோக்கி இலங்கையை அவர் இழுத்துச் செல்கின்றார் என்றே உறுதியாக எண்ணத்தோன்றுகிறது.

போர் நிறுத்தம் செய்து சமாதானத்திற்கும் தயார் என்று ஒருபாரிய இராணுவ வெற்றி நிலையில் நின்று கொண்டு நல்லெண்ணச் சமிக்ஞையை வெளியிட்டு சர்வதேச சமூகத்தின் ஆதரவு அனுசரணையுடன் இன்றுவரை தொடரும் மூன்றாண்டு கால அமைதி நிலையை உருவாக்கியவர்கள் விடுதலைப்புலிகள் தான்.

அதனை ஆரம்பம் முதலே எதிர்த்து, இடையில் அதிகார பலத்தைப் பயன்படுத்தி சர்வாதிகார நோக்கில், சமாதான முயற்சிகளை முற்றாகக் குழப்பும் நயவஞ்சக சதியொன்றை அரசியல் யாப்பின் பலவீனத்தைப் பயன்படுத்தி ஐ.தே.முன்னணி ஆட்சியைக் கலைத்தவரும் அவர்தான்.

இப்போது காலக்கெடு விதிக்கிறாராம் காலக்கெடு!

சமாதானப் பேச்சுக்களை நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்த தயார் என உத்தரவாதம் கொடுத்து பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டியநிலையிலுள்ள அம்மணி இப்படிக் கூறியிருப்பார்.



எந்தப் பிரச்சினை குறித்தும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவுதான் சொன்னாலும், அவர்கள் ஒடுக்கப்படும் இனத்தவரை சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்கள் சொல்வது அனைத்தும் உண்மை யாக இருந்தாலும்கூட, எவரும் அக்கறை காட்டப்போவதில்லை.

மேலாதிக்க சக்திகள் ஆதிக்க சக்திகளை மட்டுமே அங்கீகரிப் பார்கள். அது அவர்களின் சுபாவம்.

அடக்கியாளும் இனத்தவரிடையே இருந்தும் சிலவேளைகளில் சில மனிதர்களில் சில நியாயமான கருத்துகளை கூறிவிடுவதுமுண்டு.

## ஏழைச் சொல் என்ன அம்பலமா ஏறப்போகிறது

அதற்கு இது ஒரு உதாரணம்.

"விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்."

இவ்வாறு சொல்லியிருப்பவர் கலாநிதி குமார் ரூபசிங்க என்ற சிங்களவரேதான்! அதிர்ச்சியாக இருக்கிறதா? அதிரவேண்டாம்!

விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளில் உருவாக்கி இயக்கி வரும் நிர்வாகக் கட்டமைப்புகளை ஆட்சியாளர் அங்கீகரிக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர், இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்கட்சிகளிடையேயான அரசியல் பகையுணர்வே தேசிய நலனுக்கு இன்று பெரும் ஆபத்தாகியுள்ளது என்றும் பிரதான இரு கட்சிகளும் தேசிய அக்கறையுடன் முக்கிய பிரச்சினைகளில் ஒருமித்து சரியான முடிவை எடுக்கத் தயங்குகின்றன எனவும் கூறியுள்ளதுடன் வரலாற்று ரீதியாகவே இந்த இரு கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதில் தான் அக்கறையுடன் செயற்படுகின்றன என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

அது மட்டுமல்ல முதலாளித்துவ சிந்தனை கொண்ட ஆட்சியாளர்களே தமிழர்களை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கவே விரும்பினர் என்றும் கூறும் குமார் ரூபசிங்க, சிங்கள முதலாளித்துவம் இன்றும் கூட தமிழ்மக்களை ஒரு தனியான தேசிய இனம் என ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றனர் என்றும் அவர் வலியுறுத்திக்கூறியுள்ளார்.

இதன் மூலம் இரு விடயங்களை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஒன்று தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது.

அடுத்தது விடுதலைப் புலிகளின் நிர்வாகக்கட்டமைப்புகள் அரசால் அங்கீகரிக்கப்பட வேண்டிய வலுவும் தகுதியும் கொண்டவை என்பது....

நன்றி ரூபசிங்க....

நீங்களும் ஒருகாலத்தில் பண்டாரநாயக்க குடும்பத்தில் முக்கியமான நபராக இருந்தவர். சந்திரிகாவின் அக்கா சுனேத்திராவின் முதல் கணவராக இருந்தவர். அநுராவின் ஒரு காலத்தைய மச்சினன்... பண்டா குடும்ப உள்விவகாரங்கள் உங்களுக்கு அத்துப்படி... அதனால்தான் உண்மையைக் கூற முயன்றுள்ளீர்கள்.

ஆனாலும் ஏறவேண்டியவர் காதுகளில் ஏறவேண்டும்...!

உங்கள் முன்னாள் மைத்துனியின் (சந்திரிகாவின்) காதில் இதை ஓங்கிக் கூறினாலென்ன? ஏழைசொல் அம்பலம் ஏறாது என்கிறீர்களா? அதுவும் சரிதான்!

**செங்குட்டுவன்**

# மழையும் மாவீரர் நாள் நினைவுகளும்



சமாதானத்தின் கதவுகள் திறக்கப்பட்டதோ இல்லையோ இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுவிட்டன. வெள்ளம் இம்முறை வன்னியை தீவுகளாக்கி விட்டிருக்கிறது. கோடையில் புழுதி எழும்பிப்பறந்த சாலைகள் யாவும் இப்பொழுது மாரியில் அறுத்தோடிகளாக மாறிவிட்டிருக்கின்றன. குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் திருவையாறு, வட்டக்கச்சி இராமநாதபுரம் போன்ற பகுதிகள் தீவுகளாகிவிட்டன. கந்தபுரம் உருத்திரபுரம் போன்ற பகுதிகள் வெள்ளத்தால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன. இம்முறை புதுக்குடியிருப்பும் தப்பவில்லை.

சமாதானம் என்று சொல்லப்படுவது இந்த மக்களுக்கு எதையாவது கொண்டுவந்ததோ இல்லையோ வெள்ளம்மட்டும் அனர்த்தங்களை கொண்டுவந்திருக்கிறது. இது இப்படியே போனால் விவசாயிகள் தலையில் கையைவைக்க வேண்டியதுதான். திருவையாறிலிருந்து காக்காகடைச்சந்திக்குவர சுமார் மூன்றுகிலோமீற்றர்கள் பயணம் செய்வதற்குப் பதிலாக சுற்றி வளைத்து கிளிநொச்சி நகரத்திற்கு வர சுமார் பதின்னான்கு கிலோமீற்றர்கள் பயணம் செய்யவேண்டியிருக்கிறது.

திருவையாறிலிருந்து வரும் ஒரு பல்கலைக்கழக புகுமுக மாணவனிடம் கேட்டேன். வாழ்க்கை முழுவதும் ஒவ்வொரு மாரிகாலத்திலும் இப்படித்தான் திருவையாறு தீவாகிவிடுகிறது. இது ஒரு பிரச்சினையாக உங்களுக்குத் தோன்றவில்லையா? என்று... அதற்கு அவர் சொன்னார் "இங்கேயுள்ள மாணவர்கள் பெரும்பாலும் அருகில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கே போகிறார்கள். அரச ஊழியர்களைப்பொறுத்தவரையில் அவர்களின் தொகை ஒப்பீட்டளவில் குறைவு. விவசாயிகளை பொறுத்தவரையில் அவர்கள் சாரத்தை மடித்து சண்டிக்கட்டுக் கட்டிக்கொண்டு வெள்ளத்தைக் கடக்கத் தயார் என்று" அதாவது நீளக்காற்சட்டை அணிந்த நடுத்தர வர்க்கத்திற்குத்தான் வெள்ளம் ஒரு பிரச்சினை; புழுதியும் ஒரு பிரச்சினை; போக்குவரத்தும் ஒரு பிரச்சினை; தொலைத்தொடர்பும் ஒரு பிரச்சினை.

ஒரு ஓய்வுபெற்ற அதிபரிடம் கேட்டேன் வெள்ளத்தால் உங்களுடைய வாழ்க்கை துண்டிக்கப்படுவது ஒரு பிரச்சினையாகத் தோன்றவில்லையா? என்று அவர் சொன்னார் "சில நாட்களுக்குத்தான் வெள்ளம் மேவிப்பாயும் அந்த நாட்களைச் சாமாளித்தால் சரி" என்று.

பொதுவாக வெள்ளத்தை ஒரு பிரச்சினையாகப் பார்ப்பதை விடவும் அதை "விதியே" என்று ஏற்றுக்கொள்ளும் ஒரு மனோநிலைதான் பரவலாகக்காணப்படுகின்றது. சுமார் முப்பது மாதகால யுத்தநிறுத்தத்தின் பின்னரும் இதே மனோநிலைதான் தொடர்ந்தும் இருக்கிறது. யுத்தகாலத்தில்தான் கஷ்டப்பட்டோம் யுத்த நிறுத்த காலத்திலும் ஏன் கஷ்டப்பட வேண்டும்? என்று கேட்க ஏன் யாருக்குமே தோன்றவில்லை? யுத்தத்தைப் போலவே கையாலாகாத சமாதானத்தையும் விதியே என்று சகித்துக் கொள்வதாலா இதெல்லாம்?

இது மிக ஆபத்தானது. எல்லாவற்றையும் விதியே என்று சகித்துக்கொள்ளும் ஒரு மக்கள் கூட்டம் பகைவனின் ஆக்கிரமிப்பையும் எதிர்ப்பு எதுவுமின்றி விதியே என்று சகித்துக்கொள்ளத் தயாராகிவிடும். இந்த இடத்தில் பாரதியாரின் பாடல்வரி ஒன்றை சுட்டிக்காட்டலாம் "கஞ்சிகுடிப்பதற்கு இலார் அதன் காரணம் ஏதுவெனும் அறிவுமிலார்." அதாவது கஞ்சிதான் கிடைக்கிறது எனினும் அதை விசாரணைகள் எதுவுமின்றி விதியே என்று ஏற்றுக்கொள்ளும் ஒரு மனோநிலை.

இப்படி வாழ்க்கையை விதியே என்று ஏற்றுக்கொண்டிருந்தால் சுமார் பதினேழாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் தமது உயிர்களை கொடுத்திருந்திருக்கமாட்டார்கள். அவர்கள் வாழ்க்கையை விதியே என்று ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக விதியை மாற்றி எழுத என்று போராடப் போனார்கள்.

தமிழர்கள் விதியை அதிகம் நம்பும் ஒரு மக்கள் கூட்டம். மதம் புராணம் ஐதீகம் என்பவற்றுக்கு ஊடாகவும் தமிழ்ச் சினிமாவுக்கு ஊடாகவும் விதியை ஏற்றுக்கொள்ளும் ஒரு மனோநிலை வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்மனம் எனப்படுவது இத்தகைய விதிபற்றிய நம்பிக்கைகளால் வனையப்பட்ட ஒரு மனம்தான். இதில் விதிவிலக்காக தோன்றியதே விடுதலைப்புலிகள் இயக்கம்.

நிலாந்தன்

புலிகள் எந்த ஒரு விதிக்குள்ளும் அடங்கி நின்றதில்லை. புலி உளவியல் எனப்படுவது எந்த ஒரு பாடப்புத்தகத்திற்குள்ளேயும் ஏற்கனவே சொல்லப்பட்டிராத ஒரு விசயம். புலிவீரம் எனப்படுவதும் எந்தவொரு படைத்துறைப் பாடப் புத்தகத்துள்ளும் ஏற்கனவே கோட்பாடாக கூறப்பட்டிராத ஒரு விவகாரம் தான் என்பதால்தான் அதனை ''இந்து''ராம் Single minded - ஏகசிந்தனையுடையவர்கள் என்றார். நாராயணசுவாமி elusive என்றார். அதாவது எளிதில் பிடிபடாதது என்று அர்த்தம்.

மெய்யாக புலிகள் ஏக சிந்தனையுடையவர்கள்தானா? மெய்யாகவே புலிமனம் எனப்படுவது எளிதில் பிடிபடாததுதானா? இல்லை, நிச்சயமாக இல்லை. புலிகளை அவர்களால் சரியாகப் புரிந்து கொள்ளமுடியவில்லை. அல்லது அவர்கள் புலிகளைப் புரிந்துகொள்ள விரும்பவில்லை என்பதே சரி. அவர்கள் எப்பொழுதுமே தங்களுக்குத் தெரிந்த கோட்பாடுகள், தங்களுக்கு சார்பான நியாயங்கள், தங்களுடைய முற்கற்பிதங்கள் போன்றவற்றுக்கு ஊடாகவே புலிகளைப் பார்க்கிறார்கள். அல்லது பிரிட்டிஷ் கடற்படைத்தளபதி நெல்சனைப்போல பிடிக்காததை பார்க்க மறுக்கிறார்கள்.

தளபதி நெல்சனுக்கு ஒரு கண் இல்லை. தொலைத்தொடர்புகள் அதிகம் வளர்ச்சியடைந்திராத அந்த நாட்களில் சண்டை நடக்கும்போது தரையில் இருந்து பார்க்கக் கூடிய விதத்தில் சமிக்ஞைகள் அனுப்பப்படும். தளபதி நெல்சன் கள நில வரங்களுக்கேற்ப சிலவேளைகளில் தன் முடிவின்படி சண்டையை நடத்த விரும்பும்போதெல்லாம் தன்னுடைய பார்வை இழந்த கண்ணை கடற்கரைப்பக்கம் வைத்துக்கொள்வாராம். அதாவது சமிக்ஞைகள் எனக்கு தெரியவில்லை என்ற அர்த்தப்பட.

இந்த நெல்சோனியன் வியூ - நெல்சனின் நோக்கு நிலைதான் புலிமனத்தை ஏக சிந்தனையுடையது என்றும் எளிதில் பிடிபடாதது என்றும் கூறக்காரணமாக இருக்கிறது. இந்த நெல்சனின் நோக்குப் பற்றி கொழும்பில் நடந்த "ஹிரு" கலைக் கூடலில் நான் கதைத்தபோது ஒரு சிங்கள புத்திஜீவி என்னிடம் கேட்டார். "தமிழர்களை புரிந்து கொள்வது என்பதை எங்கிருந்து தொடங்கவேண்டும்?" என்று. நான் சொன்னேன் "சிங்களவர்கள் தங்களுடைய சிங்களமனம் என்பதை புரிந்துகொள்வதிலிருந்து" என்று. அவர் திரும்பக்கேட்டார் "சிங்கள மனமென்றால் என்ன?" என்று. நான் அவருக்குச் சொன்னேன் இச்சிறுதீவில் தமிழர்களுக்கு உரிய பங்கை ஒப்புக் கொள்ளத்தடையாக இருக்கும் மனம் தான் அது என்று.

இந்த சிங்கள மனத்தைப் போன்றதே இந்தியமனமும். அண்மையில் கொழும்பிலிருந்துவந்த ஒரு மூத்த எழுத்தாளரைச் சந்தித்தேன். கவிஞரும் முன்பு பத்திரிகை ஆசிரியராக இருந்தவருமான அவர் என்னிடம் சொன்னார். சுவாமி அரவிந்தரை இந்திய தேசியவாதிகள் சுதந்திரப் போராட்டவீரர் என்று சொல்கிறார்கள். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நீதித்துறையோ அவரை அரிப்பூர் கொலைவழக்கில் குற்றம் சாட்டப் பட்டவராகக் கூறுகிறது. சுவாமி அரவிந்தர் அரிப்பூர் கொலைவழக்கில் கைதாகி பல மாதங்கள் சிறைவைக் கப்பட்டு பின் விடுதலையானவர். சிறையிலிருந்த நாட்களில் ஆன்மீகத்தில் ஈடுபாடு உண்டாகி விடுவிக்கப்பட்டதும் அப்படியே பாண்டிச்சேரிக்கு வந்து துறவுபூண்டு அங்கேயே ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்தவர். இந்திய தேசியவாதிகள் அவரை விடுதலைப்போராளி என்கிறார்கள். ஆனால் பிரிட்டிஷ் நீதித்துறையோ அவரைக் கொலைக் குற்றவாளியாக பார்க்கிறது.

ஒரு நபரை ஒரு நாட்டினர் குற்றவாளியாகப் பார்க்க இன்னொரு நாட்டினர் அவரை போராளியாகப் பார்க்கிறார்கள். இந்தியர்கள் இந்த யதார்த்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று மேற்படி எழுத்தாளர் இந்தியாவிலுள்ள ஒரு பிரபல சிறு சஞ்சிகை ஆசிரியரிடம் சொன்னபோது, அவருடைய இந்திய மனம் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாம்.

இதுதான் பிரச்சினை. இந்திய மனம் என்ற நோக்கு நிலையிலிருந்து அல்லது சிங்களமனம் அல்லது அமெரிக்கமனம்போன்ற நோக்குநிலைகளிலிருந்து புலிமனம் என்பதை புரிந்துகொள்ள முற்படும் போதெல்லாம் அவர்களுக்கு நெல்சனின் பார்வைக்கோளாறு வந்து விடுகிறது.

புலிமனதை புரிந்துகொள்வதென்றால் அது புலிகள் தோன்றக் காரணமாயிருந்த அகப்புற நிலைமைகளுக்கு ஊடாக புரிந்துகொண்டால்தான் உண்டு. அப்படி புலி மனதை புரிந்துகொண்டால்தான் ஏன் இந்த சமாதானம் அசாதாரணமாக முப்பது மாதங்களுக்கு மேல் நீடித்திருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ளலாம். அது மட்டுமல்ல இந்த சமாதானம் எதிர்காலத்தில் உடையுமா இல்லையா என்பதையும் புரிந்து கொள்ளலாம். அதோடு முக்கியமாக நாளை வரப்போகும் மாவீரர் நாள் உரையின் உள்ளடக்கத்தையும் சரியாகப் புரிந்துகொள்ளலாம். ●




ஐம்பதாவது அகவை நிறைவில்
தலைவனுக்கு எங்கள்
வாழ்த்துக்கள்!
"தலைவா உங்கள் எதிர்பார்ப்பின் வழியில்
ஆசிரியர்கள் நாம்..."
-தமிழர் ஆசிரியர் சங்கம்
(சி-10782)


50 வது அகவை காணும்
தங்கத்தலைவனே! வாழி! வாழி!
தேசத்தின் தென்றலாய்
கால் பதித்த வரிப்புலியே!
கலங்காத விழி கொண்டு
பூகம்பப்புயலான புதல்வனே!
கடலென்ன தரையென்ன
வான் வரை பதில் கூறி
நிமிர்ந்தவனே!
தென்றலென நாமும்
வீறுகொண்ட
சூரியப்புதல்வனை
வாழ்த்தி நிற்கின்றோம்.
லலிதா ரேடிங் கொம்பனி
பரவிப்பாஞ்சான் வீதி, கிளிநொச்சி.
(சி-10783)

# தமிழர் பலத்தின் அகவை ஐம்பது



உலக வரலாற்றில் மாபெரும் முத்திரை பதித்த தலைவர்களுக்குள் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் ஒருவராவார்.

இருபத்தியோராம் நூற்றாண்டில் உலகத் தமிழர் தலைவர்களுக்குள் அவரே மாபெரும் தேசியத்தலைவராக விளங்குகின்றார். இன்று அவருக்கு அகவை ஐம்பது.

அவருக்கு சிறுவயதிலேயே ஒரு தெளிவு இருந்தது. அதாவது தமிழின வரலாற்றின்படி தமிழருக்குரிய தாயகம் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்தும் விடுதலை பெற்றிடவேண்டும் என்பதாகும்.

அவர் தன் மனதில் தாயக விடுதலைக்கான இலட்சியத்தை உறுதியாக அமைத்துக்கொண்டு அதற்காக தன் உயிரை அர்ப்பணிக்கவும் தயாரானார்.

அக்காலத்தில் தமிழர் தம் கௌரவங்களை, உரிமைகளை, தன்மானங்களை, சுதந்திரங்களை சிங்கள ஆட்சியாளர்களிடம் இழந்து, இனித் தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வா கூறுமளவிற்கு இருந்த நிலையில், ஏதாவது வழி கிடைக்காதா? என்று தமிழர்கள் துவண்டு போயிருந்தனர்.

இந்த வரலாற்று ஆபத்து மிக்க காலகட்டத்தில்தான் அவர் தமிழரை ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டப் பாதைக்கு அழைத்துச் சென்று, தாயக இலட்சியத்தை அடைவதற்கான பெரும் பொறுப்பை சிறுவயதில் ஏற்றார். இது தமிழர் வரலாற்றில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்திய பெரும் முக்கியத்துவம் வாய்ந்த கட்டமாகும்.

அவர் தமிழர்மீது கொண்ட இரக்கத்தினால் ஆயுதப் போராட்டத்திற்கு அவரைத் தலைமை தாங்க வழி கோலியது. அவர் எப்போதும் பலவீனமானவர்களின் நியாயத்திற்காக இரக்கம் காட்டும் இரக்க சுபாவமுள்ளவர். அதேசமயம் விடுதலைப் போராட்டப் பாதைக்கு தடைக்கற்களாக நிற்பவர்களையும், சமூகத்திற்கு அநீதி இழைப்பவர்களையும் தண்டிப்பதில் அவர் பின்நின்றதில்லை. இவ்விடயத்தில் யார் சம்பந்தப்பட்டிருப்பினும் நீதியின் பக்கமே அவர் இருப்பார்.

அவர் பழகும் அனைவரிடமும் அன்பாகவும், தாராள மனப்பான்மையுடனும் பழகுகின்ற சுபாவமுடையவர். அவர் எந்தத்துன்பத்திலும் இடிந்துபோகாத உள்ளம் படைத்தவர். அதாவது, தன்னம்பிக்கைமீது அசையாத நம்பிக்கைகொண்டவர்.

அவரின் அந்தத் தன்நம்பிக்கையை இயக்கும் மூலகாரண சக்தியாக மனோபலம் இருந்து வருகின்றது. அந்த "மனோபலம்" அவர்கொண்டுள்ள நற்பண்பான "சீலம்" என்கின்ற பண்பினால் வந்ததாகும்.

அவரிடமுள்ள "சீலம்" தான் அவரை தர்மத்திற்காக போர் புரிய வைத்தது. அந்த "தர்மம்" தான் அவரை சத்தியத்தின் பால் நிற்கச் செய்தது. அந்த சத்தியம் தான் அவரை ஒழுக்கமுள்ளவராக ஆக்கியது. இவைகள் யாவும் மொத்தத்தில் அவரை மனோபலம்மிக்க தேசியத் தலைவராக ஆக்கியுள்ளது. அந்த மனோபலம்தான் அவரை சுயமாக துப்பாக்கிகளை திறம்பட கையாளுவதற்கும், புதியவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கும், பகைவர்களுக்கும் துரோகிகளுக்கும் எதிரான தாக்குதல்களை அவரே முன்னின்று மேற்கொள்வதற்கும், ஆற்றல் வாய்ந்த பல தளபதிகளை வளர்த்து எடுப்பதற்கும் ஆதிகாரணமாக இருந்துள்ளது.

இதுபோன்ற அவரின் தன்னம்பிக்கையான உழைப்பிலிருந்துதான் இத்தமிழீழ விடுதலைப் புலிகள் என்கின்ற ஆலமரம் பல்வேறு விழுதுகளை விட்டுத்தளைத்து செழித்து இன்று பலமாகியுள்ளது. அதுவே தமிழரின் மாபெரும் பலமாக விளங்குகின்றது.

தேசியத்தலைவர் தனது ஆரம்பப்போராட்ட காலங்களில் சிறிய கைத்துப்பாக்கி ஏந்திய விடுதலை வீரனாக இருந்து, பிற்காலத்தில் பன்முக ஆற்றலுள்ள ஆயுதங்கள் தாங்கிய புலிப்படைக்கு தளபதியாகவும் தலைவராகவும் செயலாற்றியவர். தற்போது அதி உயர் நவீன போர்த் தளபாடங்களைக்கொண்ட தமிழர் பெரும் படைக்கு தளபதியாகவும், தேசியத்தலைவராகவும், இருந்து வருகின்றார். இப்படியாக பகைவர்களை எதிர்த்து அயராது பல ஆண்டுகள் போராடிவருகின்றார்.

அவர் தனது ஐம்பதாவது வயதில் தமிழர் படையை நவீன தகுதிகள் படைத்த பெரும்படையாக கட்டியெழுப்பி தமிழரை பலமாக்கியுள்ளார். அவர் எப்போதும் தமிழர் பலம் உயர்ந்திடவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றார்.

பலமுள்ள இனம்தான் வெற்றிபெறும் எனவும், பலம் இல்லையென்றால் அந்த இனம் தனது அடிப்படைகள் அனைத்தினையும் இழந்து அழிந்துவிடும், அதி உச்சத்திலிருக்கும் பலம்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என்பதிலும் தலைவர் நம்பிக்கை உடையவர்.

உலகில் பலமில்லாமல் வாழ்ந்த பல நூறு பூர்வீகக் குடிகள் அழிந்துபோன வரலாறுகள் சரித்திரங்களாக பதிவாகியுள்ளன. அவற்றில் தென் அமெரிக்காவிலுள்ள பெருநாட்டில் வாழ்ந்த "இங்கா" பூர்வீக மக்கள் அழிந்துபோன வரலாற்றை நோக்குவோம்.

பெருநாட்டில் வாழ்ந்த பூர்வீக "இங்கா" கறுப்பின மக்களும், அம்மக்களின் சக்கரவர்த்தி அட்வால்பாவும், அவரின் ஒரு லட்ச போர் வீரர்களும் வெறுமனே 168 ஸ்பானிய படையாட்களால் கட்டம் கட்டமாக அழித்தொழிக்கப்பட்டார்கள்.

"இங்கா" இன மக்கள் வில் அம்புகளோடு அணிவகுத்து போர் புரியும் பழைய போரியல்முறையில் நின்று போர் புரிந்தனர். ஆனால் 168 ஸ்பானிய படையாட்களோ நவீன துப்பாக்கிகளைத்தாங்கிய நவீன போரியல் முறையில் யுத்தம் செய்தனர். ஆதலால் பலமில்லாத "இங்கா" பூர்வீக மக்கள் தம்மையும் இழந்து, தம் பூர்வீக தாயகத்தையும் இழந்தனர்.

இந்த உண்மையான வரலாற்றுச் சம்பவம், பலமில்லாமல் இருக்கும் இனம் அழிய வேண்டியிருக்கும் என்கின்ற பாடத்தை புகட்டியுள்ளது.

எமது தேசியத் தலைவர் தன்னுடைய காலத்திற்கு முந்திய சிந்தனாவாதியாகவும், வருங்காலத்தை சரியாக கணிப்பீடுசெய்து அதற்கேற்ப நவீன போர் வியூகங்களையும் திட்டங்களையும் வகுக்கின்ற தீர்க்கதரிசனம் மிக்கவராகவும் விளங்குகின்றார்.

**—— இ.கபிலன் ——**

சிங்களப் பெரும்படை தமிழர் படையைவிட பலமடங்கு ஆளணியினரை, நவீன போர்த்தளபாடங்களைக் கொண்டதாகவும், இப்பெரும் படையை வழிநடாத்தும் தளபதிகள் உலக இராணுவக் கல்லூரிகளில் கற்றவர்களாகவும் உள்ளனர். அவர்கள் உலக வல்லரசுகளின் போரியல் நிபுணத்துவத்தையும், அதி உயர்தொழில்நுட்பத்தையும், பெருமளவு நிதிஉதவியையும் பெற்று படைப்பலத்தை விரிவாக்கம் செய்கின்றனர்.

தேசியத்தலைவர் எந்த ஒரு நாட்டினதும் உதவிகளை எதிர்பார்த்தோ நம்பியிருந்தோ காத்திருக்காது தமிழ்த் தேசிய ஆதரவை பெற்று பகைவர்களது நவீன போரியல் நுட்பங்களுக்கேற்ப தகுந்த பதிலடிகளை கொடுக்கவல்ல நவீன போர்த் தளபாடங்களை தமது சொந்த முயற்சியில் பெற்று தமிழரது படையை நவீனமயப்படுத்தியுள்ளார்.

இது ஒரு புறமிருக்க, மறுபுறம் அவர் தனது போர்புரியும் வல்லமையால் சிங்களப்படைத் துறையின் ஆயுதக் களஞ்சியங்களிலிருந்தும் தாராளமான நவீன போர்த்தளபாடங்களைப் பெற்றுள்ளார். இவ்வாறு ஆயுத பலம்பெற்ற அவரின் புலிப்படை சிங்களத்தின் பெரும் படையெடுப்புக்கள் பலவற்றை முறியடித்து வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

இருப்பினும் அவர் பின்னடைவுகள், பாரிய இழப்புக்கள், நம்பிக்கைத் துரோகங்கள் எனப் பல எண்ணற்ற தடைகளைச் சந்தித்தார். இதன்போதெல்லாம் அவர் அஞ்சாது தடைகளை முறியடித்து தமிழரை பலமான இனமாக ஆக்குவதில் மகத்தான வெற்றியைப்பெற்றார்.

அவர் சமர்க்களங்களில் பகைவர்களோடு சமர்செய்து தனது பல ஆயிரம் வீரர்கள், பல அனுபவம் மிக்க தளபதிகளை இழந்த காலத்திலும், சிறிதும் தளராது வீரத்தோடு கடமையுணர்ந்து கடைசிவரையிலும் சமர்செய்து மடியும் புலிவீரர்களையும், புதிய தளபதிகளையும் உருவாக்கும் இராணுவ சிற்பியாக விளங்குகின்றார்.



அவர் சிங்கள காவற்படை, உளவுப்படை, தரைப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் தமிழர் ஒட்டுப்படை போன்றவற்றின் சவால்களை படிமுறைகளாக எதிர்கொண்டு, இந்தியப் பெரும்படையின் சவால்களை எதிர்கொண்டபோதும் தமிழர் விடுதலைப்போரைக் காத்து வெற்றிகரமாக முன்நோக்கி நகர்த்தும் போரியல் வல்லுனராகவுள்ளார்.

தலைவர் மணலாற்றுக் காட்டில் முகாமிட்டு இருக்கும் காலத்தில் இந்தியப் பெரும் படையால் அப்பகுதி முற்றுகைக்குள்ளாகியது. முற்றுகை மேலும் மிக இறுக்கத்தினுள் கொண்டு வருவதற்காக பல பெயர்களில் பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேசமயம் இந்திய விமானங்கள், பீரங்கிகள் அதி சக்தி வாய்ந்த குண்டுகளை மழையாகப் பொழிந்தன. இந்த இராணுவ அழுத்தங்களால் கிரமமாக, உண்ணாத நாட்களாக பல மாதங்கள் கழிந்தன.

அவர் இந்த உயிராபத்து மிக்க முற்றுகைக்குள் இருந்த போதிலும் உயிருக்கு அஞ்சாத நெஞ்சுறுதி கொண்ட தளபதியாக சுறுசுறுப்பாக இயங்கினார். ஆபத்து மிக அண்மையில் இருக்கும் சமயங்களில் T56-2 ஆயுதம் தாங்கி போர்புரியவும் தன்னைத் தயாராக வைத்திருந்தார். அவரை அடிபணிய வைக்க முயன்ற போதும், அவர் தமிழரின் உரிமைப் போரை இந்தியாவிற்கு அடகு வைக்காத மனச்சுத்தியுள்ள தேசியத் தலைவராக இருந்தார்.

அவர் இந்திய இராணுவ அழுத்தங்களுக்குள் வாழ்ந்த போதும் தமது தளபதிகளுடன் கதைக்கும் சமயங்களில் "பிரபாகரன் மணலாறு காட்டில் வீரத்தோடு சாவானேயன்றி தமிழரின் உரிமைப்போரை எந்த சக்திகளிடமும் கையளிக்கமாட்டான்" என்று உறுதிபடக் கூறினார்.

தலைவரின் இலட்சிய உறுதியைத் தோற்கடிக்க முடியாது இந்தியப் படை தோல்வியுடன் இந்தியாவுக்குத் திரும்பியது. இந்திய ஜெனரல் சுந்தர்ஜி பேட்டி ஒன்றில் பின்வருமாறு விபரிக்கின்றார்., அதாவது புலிகளிடமுள்ள ஆளணி, ஆயுத பலம் பற்றிய தகவல்களை தாங்கள் அறிந்து வைத்திருந்தபோதும் புலிகளிட முள்ள 'மனப்பலத்தை' அறியா ததினால் தோற்றுப்போனோம் என்றார்.

இந்த வரலாற்றுத் திருப்புமுனைக்குப் பின்னர் தென்கிழக்காசியாவில் மனப்பலமுள்ள தலைவர் ஒருவர் தோன்றியுள்ளார் என்னும் தகவல்கள் அகிலமெங்கிலும் பரவத்தொடங்கின. அவற்றைப்பற்றி உலக அரசியல், இராணுவ நிபுணத்துவம் வாய்ந்த ஆய்வாளர்கள் ஆராய்ச்சிகளில் ஈடுபடத்தொடங்கினர்.

இன்னமும் அந்த ஆராய்ச்சிகள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. அதாவது உலக வல்லரசுகளின்

([illegible]ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 26 . 11. 2004
மின் அஞ்சல : weekly@eezhanatham.com

## ஐம்பதாவது அகவைகாணும் தேசியத்தலைவர்

இன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் ஐம்பதாவது பிறந்த தினம்.

தனது ஐம்பது வருடகாலத்தில் ஏறத்தாழ முப்பத்திரண்டு வருடங்களுக்கு மேல் தமிழீழ மக்களின் புரட்சிகர அரசியல் விடுதலைக்கான பயணத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வருகிறார்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை பறிகொடுத்து அரசியல் ரீதியாக மிகவும் பலவீனப்பட்டுப் போயிருந்த சூழ்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளை மீட்கும் மீட்பராக உருப்பெற்றார்.

கல்வியில் தரைப்படுத்தல், வேலைவாய்ப்பில் பாராபட்சம், விவசாயக் குடியேற்றங்கள் என்ற பெயரில் தமிழர்களின் நிலங்கள் அபகரிப்பு, தமிழ் மக்கள் மீது இன வன்முறை என்று ஒரு கொடிய கொலைக் கலாசாரத்தை சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்கள் மீது அரங்கேற்றிய போது தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் மக்களிற்கான அரசியல் விடுதலைக்காகப் போராட திடசங்கற்பம் பூண்டார்.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கு கட்சிப் போராட்டமும், வாக்கு வேட்டையும் அகிம்சை வழியும் சிங்களப் பேரினவாத சக்திகளிடமிருந்து தமிழ் மக்களுக்கு எந்த விமோசனத்தையும் பெற்றுத்தரப் போவதில்லை என்பதை முற்கணிப்புச் செய்து தமிழ் மக்கள் அரசியல் ரீதியான விடுதலை பெறவேண்டுமாயின் தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக வலுப் பெறுவதற்கு முதல் ஆயுத ரீதியாகப் பலம் பெறவேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு களத்தில் நேரடியாகத் தானே இறங்கி போராட்டத்தை ஆரம்பித்து வைத்தவர்.

இன்று இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு மேசையில் சம அந்தஸ்துப் பெற்ற பலம் பொருந்திய சக்தியாக தமிழர் தரப்பை சர்வதேச சமூகத்தின் முன் கொண்டு சென்றுள்ளார் என்றால் இந்தப் பெருமை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களையே சாரும்.

தமிழ் மக்களின்விடுதலைக்காகப் போராடுவதாக பாசாங்கு காட்டி அதிகார சக்திகளின் அற்ப சொற்ப சலுகைகளுக்குள் போராடும் எண்ணத்தையும் போராட வேண்டிய இலட்சியத்தையும் பறிகொடுத்த தமிழ் தலைவர்களுக்குள் இருந்து ஒரு வித்தியாசமான தமிழ் மக்கள் மீது அலாதியான பற்றுக் கொண்ட செயல் வீரனாக தோன்றினார்.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலை என்பது தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமையை பெற்றுக் கொள்வதே முதல் படி என்பதில் தளராத உறுதி கொண்டவராக இன்றும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் இன்று உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி ஒடுக்குமுறை சக்திகளுக்கு எதிராகப் போராடி வரும் விடுதலை அமைப்புகளுக்கும், மக்களுக் கும் வழிகாட்டியாகவும் முன் உதாரணமாகவும் திகழ்ந்து வருகின்றார் என்றால் மிகையில்லை.

பொறி நிறைந்த இந்த இராசதந்திர உலகிற்குள் பொருளாதார பலம் பொருந்திய சக்திகளின் வியூகத்திற்குள் சறுக்கி விழுந்து போன எத்தனையோ உலகத் தலைவர்கள் மத்தியில் இன்றும் நிதானம் தளராத உறுதிகுலையாத வீழ்த்த முடியாத தலைவராகவே செயற்படுகிறார்.

தேச விடுதலைக்காகப்போராடும் இந்த மாபெரும் தலைவர் இன்று ஐம்பதாவது அகவையில் காலடிபதிக்கும் நாளில் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு எமது வாசகர்கள் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் நாமும் பெருமையடைகிறோம்.

# மாவீரர் நாள் -2004

இன அழிப்பிற்கும் அடக்குமுறைக்குமெதிராக ஆயுத மேந்திப்போராடத் தொடங்கிய தமிழர்ப்படையின் முதல் மாவீரர் லெப்.சங்கர் இந்த மண்ணை முத்தமிட்ட நாளை தமிழீழ மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு 1989ஆம் ஆண்டுமுதல் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றது.யுத்தகாலப் பகுதியில் கார்த்திகை மாதம் பிறந்தால் எதிரிக்கும் எதிரித் தலைமைக்கும் ஒரு பயங்ரமான மாதமாக இந்த கார்த்திகைமாதம் இருந்ததை




மறக்க முடியாது.

அந்தவகையில் இவ்வாண்டு மாவீரர்நாள் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற இந்த நாளில் அதனைக் குழப்பும் முகமாக தென்தமிழீழத்திலும் சரி யாழ்.குடாநாடு உட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மாவீரர் நாள் செயற்பாடுகளை குழப்பும் நோக்குடன் இராணுவத்தினர் செயற்பட்டு வருகின்றனர். இதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு பகுதியில் கருணா குழு எனும் பெயரில் மாவீரர் நாளுக்குகெதிரான துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்துள்ளதும். மன்னாரில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுக்கு ஏற்றப்பட்ட தேசியக்கொடியினை இறக்கி மக்களின் எதிர்ப்பின் காரணமாக மீண்டும் கொண்டு சென்று மன்னிப்புக்கோரி ஒப்படைத்துள்ளதையும் குறிப்பிடலாம்.

மாவீரர்கள் இந்தத் தேசத்தின் காவலர்கள் இந்த தேசம் விடிவுபெறவேண்டும் என்பதற்காக எமது மக்கள் சுபீட்சமாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதற்காகவும் தங்கள் உயிர்களை களப்பலியாக்கியவர்கள். இவர்களின் மரணத்தின் ஊடாகவே இன்று சர்வதேசம் எமைத்தேடி வந்து சமரசம் செய்ய தளைப்பட்டுள்ளது. அதை விட இனஅழிப்பை மேற்கொண்ட இலங்கை அரசுக்கு தமிழர்கள் ஒன்றும் அற்பபதர்கள் அல்ல. அவர்கள் வீரத்தின் விளைநிலங்கள் என முழங்கி நின்றவர்களும் இந்த மாவீரர்களே. இன்று மலர்ந்துள்ள யுத்தமற்றநிலைமைக்கு வித்திட்டவர்களும் மாவீரகள் தான்

இவர்களுக்கான நாள் தமிழர் திருநாள். இந்த நாளை குழப்பி மக்களை இந்நிகழ்வில் இருந்து பிரித்துவிட சிறிலங்கா புனாய்வுப் பிரிவினரும் படையினரும் இணைந்து செயற்பட்டு வருவது யாரும் புரிந்துகொள்ளாத விடயமல்ல.

ஆனால் இந்த வன்முறையாளர்கள் புரிந்து கொள்ளாத செய்தியுண்டு மக்களுக்காக தங்கள் உயிர்களை ஆகுதியாக்கி கல்லறைகளில் கண்துயிலும் வீரர்களைக் காண விரையும் மக்களை தடுத்து விட முடியாதென்பதும் ஆயுத முனையிலும் அராஜக நடவடிக்கையினாலும் அடக்கிவிட முடியாதென்பதும். தங்களின் பிள்ளைகளை இந்த மண் மீட்புப்போருக்கு அர்ப்பணித்து இந்த விடுதலை வரலாற்றுப் போரில் தடம்பதித்து நிற்கும் மாவீரர்களின் பெற்றோர்களையும் இந்நாளில் நாம் ஒரு கணம் நினைவு கூற வேண்டும். இந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு மாவட்ட, பிரதேச மட்டத்தில் நிகழ்த்தப் பட்டுள்ளது. இந்த மண்ணுக்கு மைந்தர்களை உவந்தளித்து அவர்கள் துயில்கின்ற கல்லறைகளில் விளக்கேற்ற மாவீரர்களின் பெற்றோர்கள் காத்திருக்கின்றார்கள்.

உலக விடுதலை வரலாற்றில் விடுதலைப்போரில் உயிர்நீத்த இராணுவ வீரர்ளுக்கு கொடுக்கப்படாத அளவு மரியாதையை தமிழீழ விடுதலைப் போரில் கொடுக்கப்படுகிறது. விடுதலைப் போரில் பங்கெடுத்து உயிர்நீத்த வீரர்களின் பெற்றோர்களை கௌரவித்த வரலாறு இல்லை. இன்று கூட சில இராணுவ வீரர்கள் இறந்துபோனசெய்தி அவர்களின் வீடுகளுக்கு தெரியாமல் இருட்டடிப்புசெய்துள்ளது சிறிலங்காஅரசு.

எமது போராட்டம் வித்தியாசமானது போராளிகளின் தியாகங்கள் வித்தியாசமானது அந்த வகையில் இந்த மாவீரர் நாள் உலகின் கவனத்தை ஈத்துள்ளதொன்றும் வியப்பிற்குரியதல்ல.

இதுவரை காலமும் நடந்த மண்மீட்பு போரில் இந்தமண்ணில் 17780 பேர் மாவீரர்களாகியுள்ளார்கள். இதில் 263பேர்கரும்புலிகளாக தங்கள் உடல், உயிரை இந்த மண்ணுக்கு ஈர்ந்துள் ளார்கள். ஒவ்வொரு வருடமும் மாவீரர் நாளுடன் தமிழரின் விடுதலைப் போராட்டம் புது உத்வேகத்துடன் நடை போட்டுள்ளது அந்த வகையில் இம்முறை நடை பெறவுள்ள மாவீரர்கள் நாள்நிகழ்வுடன் தமிழர் விடுதலைப் போர் புதிய பரிணாமத்துடன் வேகமெடுக்கும் என்பது திண்ணம்.



அருள்

எமது மண் பல்வேறு புதிய பரிமாணங்களை ஏற்று புதிய சமுதாயக் கட்டமைப்பை நோக்கி நடக்கின்ற வாழ்வுச் சூழல் கவிந்துள்ளது. இதில் வாழும் மனிதர்கள் புதிய கட்டொழுங்கிலான மானுடவிழுமியங்களை தமக்கென ஏற்கவேண்டியவர்களாகவும் வாழ்வுக்குள் கடைப்பிடிப்பவர்களாகவும் ஒரு பாரம்பரியத்திலிருந்து விடுபட்டு ஒரு நவீனத்துள் தம்மை ஈடுபடுத்துபவர்களாகவும் இருக்கவேண்டியுள்ளது.

கல்வியென்பது நடத்தையில் ஏற்படும் மாற்றம் என்பர். அதுபோலவே மனிதவாழ்வும் தமக்குள் தம்மையறியாமலே புதுப்புது விழுமியங்களை உள்வாங்கிக்கொள்கின்றது.

கையெழுத்தைக் கூடத் தமிழில் தாய்மொழியில் இடுவதற்கு முன்வராமை ஒருவகை அடிமையின் மோகத்துள் இருப்பதனை எடுத்துக்காட்டுகிறது. அரசு அரச அல்லாத கட்டமைப்புகளில் பணி புரிவோர் தனது நேரத்தை இந்த நாட்டின் நேரம் எனவோ, தனது உழைப்பை இந்த மண்ணுக்கான உழைப்பு என்றோ அதனை வீணாக்கக் கூடாது என்றோ இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

சில அரச அலுவலகங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்களைப் பார்த்தால் சும்மாவிருந்து அரட்டையடித்துக்கொண்டிருப்பதை தினமும் காணமுடிகிறது. அலுவலகங்களில் கூட்டுப் பொறுப்புக்கான மனப்பாங்கு வளர்த்தெடுக்கப்படாமை காணப்படுகிறது. அதா

கேள்வி எழுகிறது.

எமது கல்வியே எமது சமூகத்தின் அடித்தளம் என்பது இன்னும் விசாலமாக உணரப்படவில்லை. இல்லையேல் 50% ஆசிரியர் பற்றாக்குறை, குறைவான அடைவுகள், துறைசார் சாதனை இன்மை, கட்டொழுங்குப் புரள்வு என்பனபற்றி எமது கல்விச் சமூகம் அல்லாத எவரும் கவலைப்படுவதாகத் தெரிவில்லை. ஏன் கல்விச் சமூகத்திலேயே ஒரு பகுதியினர் இதுபற்றி எதுவித மன எழுச்சியையும் காட்டாது இருப்பதும் கசப்பான உண்மையே.

பிரான்சியப் புரட்சிக்குப் பிறகு மேலைப் புலத்திலே அறிமுகப் படுத்தப்பட்ட பணிக்குழு ஆட்சிமுறை, ஆங்கிலேயர்

வினை திறனுடையவையாக எமது பணிக்குழு அமைப்பில் காணப்படுகிறதா காணப்படவில்லை என்பது அவதானிகளின் கருத்து.

இன்று தமிழர்களின் கல்வித் துறை அரசாங்கத்தால் மறைமுகமாக நசுக்கப்பட்டு வருகின்றதுறை. ஏழைச்சிறுவர், குழந்தைகள் முகட்டை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு தனக்கு ஆசிரியர் இல்லை எனப்பாடசாலைகளில் ஏங்கிக்கொண்டிருக்க இங்கு கற்பித்துக் கொண்டிருந்தவர்கள் வேறு துறைகளுக்கு உள்வாங்கப்பட்டு இருக்கிற நிலை எமது சமூக விழிப்பின்மையின் வெளிப்பாடு என்றால் மிகையில்லை. இதில் ஊதியம், அல்லது வேதனம் பற்றிய பிரச்சினை இருக்கின்றது.

# விடுதலையை அவாவுதலில்...

ஒரு விடுதலைக்கான சமுதாயமாக, எமது மக்கள் இன்று காணப்படுகின்றனர். அவர்களின் ஒவ்வொருவரது அசைவும் விடுதலைக்கு வளம் சேர்ப்பதாக அமையும்.

தனிமனித நடத்தைகளின் தொகுப்பே சமுதாயத்தின் அசைவு இயக்கமாகிறது என்பது கண்கூடு. எனவே இங்குவாழும் தனிமனிதர் ஒவ்வொருவரும் தமது மூச்சை இச்சமூகத்தின் சுபீட்சத்துக்கானதாக மாற்றுகின்ற காலம் இது.

பொறுப்பற்றவன் எனச்சொல்லும் ஒவ்வொருவனிடமும் பொறுப்பு உள்ளது என்பதே உண்மை.

தலைசிறந்த உளவியலாளரான சிக்மன் றொய்ட் மனித உளத்தைப் பகுத்தாய்ந்து ஒவ்வொருமனமும் மூன்று நிலைகளில் செயற்படுகின்றது எனக் குறிப்பிடுகிறார்.

Id இட் எனப்படும் இன்பக் கொள்கையுடைய மனம், Ego- ஈகோ எனப்படும் உண்மைக்கொள்கை உடைய மனம் Super Ego- எனப்படும் நீதிக்கொள்கையுடைய மனம் என்கின்றார். இதில் எமது மண்ணில் வாழ்பவர்கள் Super Ego எனப்பட்ட ஒருவகை பகுத்தறிவு மிக்கவர்களாக செயற்படுத்தல் அவசியமாகியுள்ளது. 'ஆனால்'

சுயநலம் மிக்க Id இன்பக்கொள்கையை வரித்துக்கொண்டவர்களாகத்தானும், தனது இன்பமும் என்கின்ற குட்டிவாழ்வு வாதத்துக்குள் தம்வாழ்நாளை வீணாக்குபவர்களாகக் காணப்படுகின்ற நிலைமை இருக்கின்றது.

பாமரன் தொட்டு, படித்த கல்விமான்கள்வரை இந்நிலை மாறாது காணப்படுகின்றமை ஒரு சித்தாந்த அரசியலுடைய முன்னேறும் சமூகத்துக்கு ஒவ்வாத நிலை எனக்



அவர்களைப் பாடசாலையில் இருக்கவிட்டு அவர்களுக்கான ஊக்குவித்தல் கொடுப்பனவொன்றை வழங்குதல் மிகவும் அவசியமானது. அதனை இத்தகு நிறுவனங்கள் நன்கொடையாக வழங்க முன் வருவதும் அவசிய மானதே.

இச்சிந்தனை தேசம் எமதே என்ற பரோமகார தேசாபிமான சிந்தனையால் மட்டுமே மேலெழும் என்பது மட்டுமே உண்மை.

எமது மண் பசுமை பெறவும் நொந்து போயுள்ள எமது மக்கள் நவீனவாழ்வின் அடிப்படை வளங்களை அனுபவிக்கவும் இவ்விடுதலை, சமூகத்தினர் அனைவரதும் உழைப்பாக இருக்க வேண்டும்.

எனவே இந்த மண்ணில் அசைகின்ற ஒவ்வொருவரும் இந்த சமூகத்தின் விடுதலை, சுபீட்சத்துக்காக சோம்பல் துறந்து, புறக்கணிப்பின்றி, பொறுப்புணர்வு, அக்கறை, கருணை, மனிதாபிமானம், பிறர்மீது மதிப்பு கௌரவம் என்ற விழுமியங்களை தமதாக்கிக் கொள்வதிலேயே எமது சமூகத்தின் எதிர்காலக்

# நீங்களும் நாங்களும்

வது அலுவலகங்களில் ஒரு சில பணியாளர்கள் கண்ணுக்கு முன்னால் ஓய்வின்றித் தமது கடமைகளை நெருக்கடிக்குள் செய்து கொண்டிருக்க இன்னொரு சாரார் அதனைப் பார்த்தும் பாராமலும் பொழுதைப் போக்கிக்கொண்டு இருப்பர்.

பாடசாலைகளில் இதே நிலை ஒரு ஆசிரியர் வராவிட்டால் அந்த ஆசிரியரின்

> *இந்த மண்ணில் அசைகின்ற ஒவ்வொருவரும் இந்த சமூகத்தின் விடுதலை, சுபீட்சத்துக்காக சோம்பல் துறந்து, புறக்கணிப்பின்றி, பொறுப்புணர்வு, அக்கறை, கருணை, மனிதாபிமானம், பிறர் மீது மதிப்பு, கௌரவம் என்ற விழுமியங்களை தமதாக்கிக்கொள்வதிலேயே எமது சமூகத்தின் எதிர்காலக் கனவு நனவாகும்.*
>
> *இவ்வருடம் வருகின்ற மாவீரர் நாளிலேயாயினும் ஓயாது உழைப்போம் என ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.*

குறிப்பிடலாம்.

இதனை மறுபக்கமாகக் கூறும்போது எமது சமூகம் நல்ல விழுமியங்களை உடையனவாக கட்டி எழுப்பப்படவேண்டும்.

இங்கே ஓய்வும் உழைப்பும் பற்றிய ஒரு சுயநலமற்ற போக்கும் சிந்தனையும் அவசியம். ஜப்பானியர்கள் அழிந்துவிட்ட தமது நாட்டைக் கட்டி எழுப்பினார்கள். பல ஆண்டுகளாக ஜப்பானியரின் ஆக்கிரமிப்பிலிருந்த சீனாவை மாவோசேதுங் கட்டினார், வழிநடாத்தினார். இந்தியாவின் முதலாவது பிரதமமந்திரி தமது நாட்டின் காலனித்துவத்திற்கு பிற்பட்டகால பொருளாதாரத்திட்டமிடல்களை உருப்படியாக அமைத்துக் கொடுத்தார். ஒவ்வொரு இந்தியனும் தனது மதத்தை, மொழியை அன்றி தனது தேசத்தைவைத்து தன்னை அடையாளப்படுத்தினான்.

தமிழீழத்தில் கடமையாற்றும் லட்சக்கணக்கான அரச ஊழியர்கள் தமது

வகுப்புக்குப் போய் மாணவர்கட்கு ஒரு "Insidentiol teaching" மாற்றீடான கற்பித்தல் முறையை மேற்கொள்ள சிக்மன் ப்றொய்டின் நீதிக்கொள்கை என்ற உள நிலைமையை எமது சூழலில் வாழ்வோர் ஏற்படுத்த வேண்டும். ஒருகைதட்டி ஓசை இல்லை என்பதை புரியாமல் இருத்தல் ஒரு விடுதலையை அவாவுகின்ற சமூகத்துக்குரிய பண்பாகாது. சுயநிர்ணயம் என்பதன் ஆழமான அர்த்தமும் இதுவாகவே இருக்கமுடியும்.

சுயநிர்ணயத்துக்காக எத்தனையோ இளம் உயிர்களை மண்ணுக்குள் புதைத்து விட்ட நாம், களைக்கக் களைக்க எத்தனைநாள் இந்த மண்ணில் வாழும் மனிதர்களின் சுபீட்சத்துக்கான சிந்தனையோடு துயில் எழுகிறோம்? இந்திய மக்கள் வந்தேமாதரம் எனத் தமது தாய்நாட்டை விளிப்பதுபோன்ற எமது நாட்டின் தேசபக்தன் ஒவ்வொருவனும் தமிழ் ஈழமாதாவை விளித்துக்கொள்கிறானா? எனவும்

பணிக்குழு ஆட்சி செய்ததிலிருந்து கீழைத் தேயங்களுக்கும் வந்து சேர்ந்தது நவீனமனித வாழ்வில் பல்வேறுபட்ட தேவை காரணமாக பரந்துபட்ட உலக சமூகத்தில் வடிவங்களில் வேறுபட்ட தாயிருப்பினும் பணிக்குழு ஆட்சி முறை நடைமுறைக்குள்ளாகி விட்டது. எமது சுயம் பற்றிய சிந்தனை முனைப்படைந்து வருகின்ற எமது நாட்டில் தமிழர்கள் தமக்கென ஒரு வகை பணிக்குழு முறையைக் கையாண்டு வருகின்றனர். இது பலப்படுத்தப் படுதலும், வினைத்திறனுடையதாகவும் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே இப்பத்தியின் அடிநாதம்.

பணிக்குழு அல்லது பொதுநிர்வாகம் என்பதை வரைவிலக்கணப்படுத்தினால் "குறிக்கோள்களை எளிதில் எட்டுவதற்குச் செய்யப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு" என்று பொருள் கொள்ளலாம்.

**பெருமாள் கணேசன்**

இங்கு எமது நிறுவனங்களில் பல நூறு அல்லது ஆயிரம் பணியாளர்கள் வேலைசெய்கிறார்கள். இந்த பணியாளர்கள் எத்தகுவேலை "அலகு" "Unit of works" அடிப்படையில் நியமிக்கப்பட்டார்கள்? என்ற கேள்வி எழுகிறது. (Cadre position)

ஒவ்வொரு துறைசார்ந்தவர்களும் தத்தமது விருப்புக்கு ஏற்ப பணியாளர்களை உள்வாங்கி இருக்கிறார்களேயொழிய அதற்கான ஒரு திட்டமிட்ட regulator ஒழுங்கமைப்பு பிரமாணம் இல்லாதிருப்பது அதிக வீண் செலவுக்கும் அதிக வரி ஈட்டலுக்கும் கால்கோளாகிறது என்பது தெட்டத்தெளிவு.

பொதுச் சேவை ஆணைக்குழுவைப் போல எமது பணிக்குழு முறைமையிலும் ஒருவரண் முறையைப் பேணுதல் அவசியம் என்பதை அவதானிக்க முடிகின்றது.

"ஒவ்வொருவரது ஆற்றலுக்கு ஏற்ப பணிகளைப்பிரித்து அவர்களது செயற்பாடுகளூடாக திறமையான பெறுபேறுகளை சிறப்பான முறையிலே பெறுதல்" "Bureaucracy is an organizational model rationally designed perform complex tasks efficiently" என வரையறுக்கின்றார். Max Weber என்ற சிந்தனையாளர்.

எனவே முழுமையான பணிகள்

கனவு நனவாகும்.

இவ்வருடம் வருகின்ற மாவீரர் நாளிலேயா யினும் ஓயாது உழைப்போம் என ஒவ்வொரு வரும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

ஜப்பானியர்கள் நாட்டைத்தமது கடுமையான உழைப்பினாலேயே இத்தகு விரைவில் வளப்படுத்தினார்கள். அவர்கள் தமது வேலை நிறுத்தத்தைக்கூட தமது நாட்டுப் பொருளாதாரம் சீரழியக்கூடாது என நினைத்து நடுநிசியான 12 மணிதொட்டு 12.05 நிமிடங்கள் மாத்திரமே மேற்கொண்டார்கள் என வரலாறு சொல்கிறது.

எமது தேசத்தின் பல நிறுவனங்களிலும் "கீழ் உழைப்பு" அதிகமாகக் காணப்படுகின்றது. நிறுவனங்களை வழிநடாத்தும் தலைவர்கள் தமது உழைப்பாளிகளின் நாட்டுக்கான உழைப்புப் பற்றிய உத்வேகத்துக்கும் சிந்தனைக்கும் இடமளித்தல் அவர்களது உழைப்பை வினைத்திறனுடையதாக்கும். தலைமைகளின் ஒத்துழையாமை, தலைமைகள் தமது உழைப்பாளிகள் மீது பொறாமைப்படல், ஊக்குவிக்காமை அவனவனது உரிமையை, வாய்ப்பை வழங்காது விடல், பொருத்தமானவர்களுக்கு அந்தந்த வாய்ப்பை வழங்கமறுத்தல், பொருத்தமில்லாதவர்களுக்கு தகைமை இல்லாதவர்களுக்கு சார்ந்து போதல் என்கின்ற பிற்போக்கான நிலையும்.

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், தனது அதிகாரத்தையும் வாய்ப்பையும் இன்னொருவரின் அழிவிற்கும் துன்பத்திற்கும் பிரயோகித்தல். இவ்வாறான நிலைமை தொடர்வது என்பது ஒரு கூட்டுப் பொறுப்புள்ள சமூகத்தின் விடிதலுக்கான செயற் பாடு அல்ல.

எனவே விடுதலை அவாவுவோம் என்ற எண்ணக்கரு பரந்துபட்டதாக ஆழமானதாக உண்மைசார்ந்ததாக உழைப்பு சார்ந்ததாக பிறரை மதிக்கும். நேசிக்கும் அடிப்படை அம்சங்கள் உடையனவாக இருக்கட்டும். தலைவரை உதாரணப்படுத்தினால் அவர் இந்த மண்ணில் வாழும் தமிழர்களின் உரிமை புறந்தள்ளப்பட்டதால் அவர் தான்சார்ந்த சமூகத்தை நேசித்ததால், மதித்ததால் தான் ஒரு விடுதலைப் போராளியாக தன்னை ஆக்கிக்கொண்டார் என்ற வெளிப்படையான உதாரணம் போதுமானது.

# தமிழனாய்த் தமிழன் வாழத் - தலைவன் தடம் பதித்த பாதையில்.....











வானத்தின்
எல்லை
போதவில்லை
உன்
வீரத்தின்
எல்லை
சொல்ல.

பூக்களின்
மென்மை
போதவில்லை
மன ஈரத்தின்
தன்மை
சொல்ல.





வானமுள்ளமட்டும் நீயே எமை ஆழ்க
மானமுள்ளவராய் நாம் வாழ...



உனைவெல்லும் திறனின்றி பகைமெல்லப் பணிந்தது
உலகத்தின் திசையெல்லாம் உனைநாடி வந்தது















எத்தனை வல்லுனர் வந்திங்கு போனாலும்
எங்களின் வல்லவன் கொள்கைகள் மாறாது

நாற்றிசை நடப்பு

# காஷ்மீரை தக்கவைப்பதற்கான மன்மோகன் சிங்கின் உபாயம்

இந்தியப் பொருளாதாரப் பிரதமர் மன்மோகன் சிங் அரசியல் விஜயத்தை இந்திய மாநிலங்கள் பலவற்றில் மேற்கொண்டார். அவரது விஜயத்தில் முக்கியத்துவமும் தனித்துவமும் வேறு எங்கு இல்லாது விட்டாலும் காஷ்மீர் மாநிலத்தில் கண்டுகொள்ள முடிந்தது. காஷ்மீர் மக்களுக்கு பிரதமரைக் கண்ட மகிழ்ச்சி ஒரு புறமும் பொருளாதார வாதியான பிரதமர் இந்தியாவுடன் காஷ்மீரை தக்கவைக்க போட்ட திட்டங்களுமே மீதியாகக் கிடைத்தது. அவரது அரசியல் பயணம் அங்கீகாரத்தை உடனடியாக சாத்தியப்படுத்தாது விட்டாலும் மிக நீண்டகாலத்தில் ஏற்படுத்தக் கூடியதாகவே உள்ளது. இக்கட்டுரை மன்மோகன்சிங்கின் காஷ்மீர் மாநிலம் தொடர்பான உபாயத்தை பரிசீலிப்பதாகவே அமைந்துள்ளது.

இந்தியப் பிரதமரின் காஷ்மீர் மாநில விஜயமும் இந்தியா-பாகிஸ்தானிய உறவுகளான அரசியலும் ஒன்றாகவே அமைந்து காஷ்மீருக்கு பிரதமர் பயணம் செய்து கொண்டிருக்கும் போது காஷ்மீர்-பாகிஸ்தான் எல்லையோரங்களிலிருந்து படைகளைக் குறைக்கப் போவதாகப் பிரதமர் அறிவித்தது படையினர் வெளியேறும் காட்சிகளும் உலகம் முழுவதும் பரப்பப்பட்டன. அவர் தற்போது அமைதிக்கும், சுமூகத்தன்மைக்கும் இந்தியா தயாராக இருப்பதோடு படைக்குறைப்பை மேற்கொண்டு பாகிஸ்தான் பக்கம் நிலைமையை கைமாற்றியிருந்தார். இது மன்மோகன் சிங் அரசாங்கத்திற்கான இராஜதந்திர வழியை வழிதேடியுள்ளார்.

மன்மோகன் சிங் பிரதானமான அரசியல் தந்திரம் காஷ்மீர் மாநிலம் பொறுத்ததாகவே அமைந்திருந்தது. காஷ்மீர் மக்களின் வாழ்வையும், வாழ்க்கைத்தரத்தையும் நிமிர்வடையச் செய்வதற்கான முயற்சியில் அவர் அதிகம் கவனம் செலுத்தினார். வன்முறையும், தாக்குதலும், ஊடுருவலும் குறையுமாயின் படிப்படியாகக் காஷ்மீரை வளமான பிரதேசமாக மாற்றமுடியுமென உரையாற்றும்போது தெரிவித்தார். மிகத்தெளிவாக மத்திய அரசு காஷ்மீரியருக்கு வேலைவாய்ப்பு தொடர்பாக விதித்த தடைகளை அகற்றுவதாகவும் சூளுரைத்தார்.

மேலும் பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை இனங்காண்பதுடன் முழுமையான பாதுகாப்புடனான பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் எனக் கூறி பிரதமர் வெகுவிரைவில் தமது அரசாங்கம் அத்தகைய நடவடிக்கைகளில் விடுவார்களென ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். இதனால் ஒடுக்கப்பட்ட மக்களிடம் பொருளாதார அபிவிருத்திக்கான உபாயங்களை இனங்காண்பதும் அதனூடாக தீர்வுகளை மேற்கொள்ள முயல்வதும் சாதாரண அம்சமாகும்.

ஆனால் ஆட்சியாளர்கள் எவருமே அவ்வாறு அடக்கப்பட்டதிற்கான திட்டமிடல்களை முழுமையாக பின்பற்றாததுடன் போலியான பொருளாதார திட்டமிடல்களை முதன்மைப்படுத்தி சாதகமற்ற சூழலை ஏற்படுத்தி அவர்களின் அடிப்படை உரிமைகளையும் மறைக்கச் செய்து பொருளாதார அபிவிருத்தியையும் அதற்குத் தீர்வுகாணமுயன்று இறுதியில் அத்தகைய மக்களின் உரிமைகளையே அழித்துவிடுகின்றனர்.

ஒரு தேசத்தில் நிகழும் இனவிடுதலைப்போராட்டத்தை முறியடிப்பதற்கு ஆக்கிரமிப்புச் சக்திகள் பின்பற்றிவரும் ஒரு பாரிய உபாயம் பொருளாதார அபிவிருத்தியேயாகும். பொருளாதார சுபீட்சத்தை காட்டுகின்றபோது மக்கள் தமது உணர்வுகளிலிருந்து குறிப்பிடத்தக்க காலம் குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற்படுத்துவார்கள். அத்தகைய மன்மோகன் சிங்கின் காஷ்மீர் பயணமும் உரையும் காஷ்மீர் மக்களை அவர்கள் மேற்கொள்ளும் உரிமைப் போரைக்கைவிட்டு பொருளாதார போட்டியில் இணைத்துக் கொள்ள விரும்புகிறார். இது வெற்றியளிக்குமாயின் காஷ்மீர் இந்திய மத்தியமயவாக்கத்துக்கும் உதவுவதாகவே அமையும் என்பது அவரது எதிர்பார்க்கையாகும். அதனையே பிரதமர் ஏற்படுத்த விரும்பினார். தனது விஜயத்தின் மூலமாக.

மேலும் இந்த விஜயத்தின் மூலம் காஷ்மீரிய மக்களை இந்தியாவுடன் இணைப்பதற்கு அதிக பிரயத்தனம் எடுத்துள்ளார். அவ்வகை முயற்சியானது இறுதிவரைக்கும்



சில பணிகள் காண்பிக்கப்பட்டன.

அவற்றுக்குப் பின்னால் ஓர் அரசியல் நோக்கமும் மறைந்திருந்ததாக மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் கூறியிருந்தனர். அதாவது பிரதமரின் விஜயத்தின் சுமூகத்தன்மையையும், அமைதியையும் பேணுவதற்கே பிரதமரின் படைக்குறைப்புப்பற்றிய செய்தி முதன்மைப்படுத்தப்பட்டதென கூறப்பட்டது. அது மட்டுமன்றி காஷ்மீரின் எல்லைப்பகுதியில் முக்கியமற்ற பிரதேசத்திலிருந்து படைகளை வெளியேற்றி விட்டு பாகிஸ்தான் தரப்பிற்கு படைக்குறைப்பை மேற்கொள்வதே அடுத்தகட்ட அமைதிக்கும் படைக்குறைப்புக்கும் வழியென இந்தியா தெரிவித்திருந்தமை அரசியல் நோக்கத்தை மேலும் வெளிப்படுத்தியிருந்தது. இவ்வகையான அரசியல் நோக்கங்களுடனேயே காஷ்மீர் விஜயத்தை பிரதமர் மேற்கொண்டார். அக்கறை செலுத்தும் எனவும் குறிப்பிட்டார்.

காஷ்மீர் மீது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதாரத்தையும் உயர்த்தவேண்டுமாயின் அவர்களது தொழில் முயற்சிகளையும், உற்பத்திக்கான பங்களிப்புகளையும் கூட்டவேண்டும் என்றார்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தியை முதன்மைப்படுத்திய பொருளாதார நிபுணத்துவ பிரதமர் காஷ்மீரில் நிலவும் போராட்டத்தையும் அதன் பிரதிபலிப்புக்களையும் பொருளாதார அபிவிருத்தியால் தீர்த்துவிடலாமெனக் கருதுகின்றார். இது மன்மோகன் மட்டுமல்ல கீழைத்தேச, மேலைத்தேச வேறுபாடின்றி எல்லா ஆட்சியாளர்களும் இதனையே மேற்கொள்ள விரும்புகின்றனர். அடக்கப்பட்ட மக்களது உரிமைகளுக்கு பதில் சலுகைகள் அளிக்கப்படும் போது உரிமைகளை மறந்து சாத்தியப்படாது செய்துவிடுகின்றன.

ஆனால் மேற்குலக ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை தமது நாடுகளில் மக்களை அதிக பொருளாதார சௌகரியத்துடனும் , அதிக உரிமைகளோடும் பராமரிக்க விரும்புவதனால் அவர்களது

**ஐங்கரன்**

அரசியல், பொருளாதாரம், சமூகம் சார்ந்த பிரச்சினைகளை தீர்க்கப்பட்டுவிடுகின்றன. இதனால் பாதுகாப்பற்ற நிலைமை எதுவும் அங்கு இடம் பெறாததுடன் மக்களின் பாதுகாப்பை அந்த ஆட்சியாளர்களே நிறைவேற்றி விடுகின்றனர். இந்த நிலைமை கீழைத்தேச அரசியல் தலைமைகளை நோக்கின் கீழைத்தேச மக்கள் மீது அவ்வாறு நடந்து கொள்வதில்லை. மாறாக மக்களின் பொருளாதார உரிமைகளை முன்நிறுத்தி மாறுதல்கள் படிப்படியாக அவ்வினத்தின் அடிப்படையை பாதித்து இறுதியில் தேசவிடுதலைப் போர் முடிவுக்கு வரும்.

குறிப்பாக மிக அண்மைக் காலத்தில் பிரபலமாகப் பேசப்படும் உலக மயப்படுதலும் இவ்வாறான ஓர் உபாயமாகவே உள்ளது. பொருளாதாரத்தை தொழில் நுட்ப அடிப்படையில் இணைத்துக் கொண்டு மக்களை அரசுகளின் பொருளாதார மையங்களோடு இணைப்பதே நோக்கமாக உள்ளது. மக்களை தனியாகவோ,கூட்டகவோ ஒன்றிணைய விடாது தடுப்பதுடன் உலகத்தில் ஒரு சாரார் உருவாக்குவதை நுகர்வதையும் தரிசிப்பதையுமே நோக்கமாகக் கொண்டு மக்கள் இருக்க வேண்டுமெனக் கருதுகின்றது. உலகமயப்படுத்தல் என்பது புதிய பொருளாதார உபாயம்.

இவ்வகையில் பார்த்தால் இந்தியாவின் ஆட்சிப்பலத்தையும் மத்தியமயப்படுத்தலையும் பாதுகாக்குமே அன்றி காஷ்மீர் மக்களின் உரிமைகளையோ, நலன்களையோ-பாதுகாப்பதாக அமையாது. காஷ்மீர் மக்களின் உரிமைகளைப்பற்றி எதனையும் பேசாத பிரதமர் காஷ்மீரியரை இந்தியாவுடன் இணைத்துக் கொள்வதற்கான உரையாகவே அவரது உரை அமைந்திருந்தது.

எனவே காஷ்மீர் மட்டுமன்றி பிரதமர் எந்த மாநிலத்திற்கு சென்றபோதும் அவரது ஒரே இலக்கு இந்திய ஆட்சியையும், மத்திய ஆட்சியையும் பலப்படுத்துவதாகவே அமைந்திருந்தது. காஷ்மீரிய மக்களின் உரிமைகளைவிட இந்திய ஆட்சியின் முக்கியத்துவமே பிரதமரின்அரசியல் விஜயத்தின் முக்கியத்துவமாக அமைந்திருந்தது. ●

---

# காலத்தை வென்று நிற்கும் காவியத்தலைவனே நீ வாழ்க



*நேற்றுப் பிறந்த தமிழீழத்தாயின் மகன் பிரபாவின் அகவை*
*ஊற்றெனப் பாய்ந்து சாதித்து ஐம்பதென்றான தென ஆன்றோர்*
*சாற்று நூற் சான்றாதார வாழ்த்திடு முறைகள் தம்மை*
*ஏற்றுத்தான் ஆகவேண்டும் ஏற்றங்கள் ஏராளந்தந்து*
*கூற்றெனவந்த கொற்றம் தன்னையே அடக்கி எம்மண்ணில்*
*வேற்றினத்தாரை வைத்து வேடிக்கை பார்த்த வாடிக்கைதமை*
*எல்லாம்*

*ஆற்றலால் அகற்றி வைத்தெம் இனமதை ஆற்றுகை செய்து*
*மாற்றான் சிந்தையிலும் சிறைப்பட்ட சிறப்பினால் வந்தார் -*
*போனார் புரிந்து*

*ஏற்றனர் உன்மனத்தின் ஏற்றங்கள் மக்களிற்காம் மாண்புகள் கண்டதாலே*
*சாற்றிய சமாதானம் தழைத்திடவைப்போமென்றே தலைவரின் அடி தொடர*

*பெற்றிமைபேறாய்ப்பெற்றாய் பெரியனும் - பிரியனும்*
*மக்களுளத்துறை*
*தலைவனும் நீயே என்றெம் தகைமைசால் மாவீரர்*
*தம்தேசம் கூறும்*
*மலையெனும் அரணும்நீயே தமிழர் காப்பரணான*
*உன்னை*
*குன்றாத இளமையும் குலையாதமதியோடாற்றல்*
*யாவும்*
*குன்றென நிமிர்ந்த வாழ்வும் மாவீரர் தம்*
*முன் குடையெனப்பணியும் பண்பும்*
*நன்றெனும் மாண்பொடு சால்புசான்றாண்மை*
*யாவும் பெற்று*
*விண்ணினை இறைத்து நிற்கும் விரிபுகழ்*
*சொத்தாய்ப் பெற்று*
*மண்ணிதன் தலைவனாகத் தமிழர் தலைவனே*
*நீதானென்று வாழ்க!*
*காலத்தை வென்று நிற்கும் காவியத் தலைவனே நீ*
*வாழ்க வாழ்க.*

**- வளவை வளவன் -**

# இருபதாம் நூற்றாண்டின் செயல் வீரன் பிரபாகரன்



கடந்த சில நூற்றாண்டுகளில் தமிழினம் கண்டும் கேட்டுமிராத ஒரு செயல்வீரனை இந்த நூற்றாண்டின் தமிழீழம் பெற்றிருக்கிறது, பெருமைகொண்டிருக்கிறது.

பட்டம் பெற்றவர்களும் சட்டம் படித்தவர்களும் தங்கள் நாவன்மையாலும் சட்ட நுணுக்கத்திறமையாலும் தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைகளை நிலைநாட்டவும் பாதுகாப்புப் பெற்றுத்தரவும் செய்தமுயற்சிகள் எவையும் வெற்றிஈட்டிக் கொடுத்ததில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும், சுயநிர்ணய உரிமைகளை நிலை நாட்டவும் காந்திய வழியில் தமிழ்த் தலைவர்கள் சாத்வீக வழிமுறையில் நடத்திய போராட்டங்களும் தோல்வியடைந்தன.

சனநாயக வழியும் சாத்வீகப் போராட்டங்களும் சிங்களப் பேரினவாதத்தின் தமிழ் இன ஒழிப்புக்கே பயன்பட்டன.

தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் விவசாயவிருத்தி என்ற பெயரில் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தாயக மண் ஆக்கிரமிப்புக்குள்ளானது. நாட்டின் பாதுகாப்பு என்று சொல்லி தமிழ் இன ஒழிப்பு முடுக்கிவிடப்பட்டது.

தமிழர் தாயகமண்ணைக் காக்கவும் தமிழ் இனஒழிப்பைத்தடுத்து தமிழ் மக்களைக் காப்பாற்றவும் இனி வேறு வழியில்லை என்ற நிலையில் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி வல்லரசுகள் உதவியுடன் அழித்தொழிக்க முனைந்தது சிங்களப் பேரினவாதம்.

இந்தச் சதித்திட்டங்கள் யாவற்றையும் தவிடுபொடியாக்கி போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து சமாதானப் பாதைக்கு வழிகாட்டி பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தர சமாதானத்துக்கு சிங்களத் தலைமைக்கு அழைப்பு விடுத்துக் காத்திருக்கிறார் தலைவர் பிரபாகரன்.

மாவீரன் அலெக்சாந்தர், மாவீரன் நெப்போலியன் போன்றவர்கள் பற்றிப் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களிலும் வரலாற்றுப் பாடங்களாக இடம்பெற்றிருக்கின்றன. அந்த மாவீரர்கள் பற்றிப் படித்துத்தான் அறிந்துகொள்கின்றார்கள்.

நவீன போர்ச்சாதனங்களும் போர்க்கருவிகளும் மலிந்துள்ள இந்த விஞ்ஞான யுகத்தில் இந்த நூற்றாண்டில் பல்வேறு நாடுகளின் உதவியுடன் போர் புரிந்த சிறிலங்காவின் முப்படைகளையும் எதிர்த்து தமிழர் தாயகத்தின் பெரும்பகுதியை மீட்டு தமிழீழ விடுதலைக்கு வித்திட்டிருக்கும் மாவீரன் பிரபாகரன் அவர்களை மக்கள் நேரடியாகவே பார்த்து அறிந்து போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வடதுருவம் தென்துருவம் என இன்று விரிந்துகிடக்கும் தமிழ கூறும் நல்லுலகில் மட்டுமல்லாது அகில உலகிலுமே இன்று வரலாற்று நாயகனாக தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் விளங்குகின்றார்கள்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் மீது தமிழ் மக்கள் எத்தகைய பாசத்தையும் பக்தியையும் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இவ்வருடம் யூன்மாதம் நான்காம் திகதி நான் கிளிநொச்சிக்கு அழைக்கப்பட்டேன். எனது ஐம்பதாண்டு காலப்பத்திரிகைப் பணியையும் அதன் மூலம் தமிழ்த்தேசியத்துக்கு நான் அளித்துள்ள பங்களிப்பையும் பாராட்டி தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் எனக்கு சிறப்பு விருது வழங்கி விருந்தும் அளித்துக் கௌரவித்தார்.

தேசியத் தலைவரிடம் கௌரவம்பெற்று மறு நாள் யாழ் நகர் சென்றிருந்தேன். நகரில் இதுவரைநான் பலதடவைகளிலும் சந்திப்பவர்கள் கூட அன்று என்னைப் பார்த்து மரியாதைசெலுத்தியது என்னை வியப்படையச்செய்தது.

மறுநாள் 6ஆம் திகதி காலை பெருமாள் கோவிலுக்கு வழமைபோல் சுவாமி தரிசனம்செய்யச்சென்றேன். தரிசனம்முடிந்து வெளியே வந்ததும் ஆஞ்சநேயர் கோவில் வாசலுக்கு நேரே கோபுரவாசலுக்கு வெளியே ஒரு நண்பர் நின்று "உங்களைப்பார்க்கத்தான் காத்து நிற்கின்றேன்" என்றார்.

நான் நின்றதும் என்னை நோக்கி வந்த அந்த அன்பர் "எனது கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார். நான் அதிர்ச்சியடைந்து நீங்கள் யார்? ஏன் எனது கைகளைப் பிடிக்கின்றீர்கள்?" என்று கேட்டேன்.

**எஸ்.எம்.கோபாலரத்தினம்**

அந்தக் காலத்தில் காசிக்கு யாத்திரை போய் வருபவர்களைச் சென்று பலரும் தரிசிப்பார்கள். அப்படிச்செய்வது காசிக்குப் போய்த் தரிசித்த பயனைத்தரும் என்று சொல்வார்கள். "நீங்கள் எங்கள் தலைவரைத் தரிசித்து அவர் கைகளால் விருது பெற்று வந்திருக்கிறீர்கள். தலைவர் கரங்களால் விருதுபெற்ற பாக்கியம் உங்களுக்கு இருக்கிறது. அந்தப்புண்ணியம் எனக்கும் கொஞ்சம் கிடைக்கவேண்டும் என்பதற்காக உங்கள் கைபற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டேன்" என்று அந்த அன்பர் கூறியதும் நான் மெய்சிலிர்த்து சிறிது நேரம் அசையாமல் நின்றேன்.

ஒழுக்கமும், கட்டுப்பாடும், வீரமும், விவேகமும், நேர்மையும், அஞ்சா நெஞ்சமும்கொண்ட தன்னலமற்ற ஒரு தலைவன்தான் ஓர் இனத்தின் விடுதலைக்குத் தலைமைதாங்கி வெற்றி நடைபோட முடியுமென்பதை நிருபித்திருக்கிறார் மாவீரன் பிரபாகரன்.

இன்று தமிழ் மக்கள் தரணியில் தலை நிமிர்ந்து நடப்பதற்குத் தலைவர் பிரபாகரனே காரணம் என்பதை உணர்ந்துள்ள தமிழ் மக்கள், வாராது வந்துள்ள மாமணியாம் தலைவர் பிரபாகரன் மீது அளவுகடந்த பாசமும், நேசமும்பக்தியும், விசுவாசமும் செலுத்தி நிற்கின்றனர். அவர் நீடூழி வாழபிரார்த்திக்கின்றனர்: வாழ்த்திகின்றனர்.

## மாற்றார்க்கு விலைபோகா தமிழ் மகனே! நீடூழி வாழி!

அலைமோதும் கடலருகே பிறந்த முத்தே
அன்புத்தமிழ் பேசி வளர்த்த வித்தே
தலையாகி எமக்கு அரண் தந்த சித்தே
தமிழர்களின் மேலான சொத்தே வாழி.

தமிழ் காக்க வந்துதித்த தலைவா வாழி
தண்டமிழர் தலைநிமிர வைத்தோய் வாழி
அமிழ்தான தாயகத்தை காத்தே எம்
அடிமை விலங்கொடிக்க வெனப் பிறந்தாய் வாழி.

மறத்தமிழர் படையணியின் தலைமகனே
மாற்றார்க்கு விலைபோகாத் தமிழ் மகனே
அறப்போர் நடத்திப் பலவெற்றி கண்ட
அகிலத்தோர் வியந்து போற்றும்வீரா வாழி.

போர்க்கலைக்கு புதுவடிவம் கொடுத்து நின்றாய்
போராடும் வலுவதனை தமிழர்க்கு தந்தாய்
பாரதத்து படையை வென்று புதுப்பரணி படைத்த
பைந்தமிழின் காவலனே நீடூ வாழி.

தாயகத்து விடிவிற்காய் வந்துதித்த சூரியனே
தமிழர் துயர் தீர்க்கவென வந்த கரிகாலனே
தீந்தமிழை வளர்த்திடவே தாயாக உழைப்பவனே
திக்கெட்டும் உன் புகழோங்க நீடூழி வாழியவே.

ஐயம் நீங்கி நாம் வாழ வழி வகுத்தாய்
ஐம்பது அகவைதனை நீ அடைந்தாய்
ஐயமில்லை 'தமிழீழம் மலரும்' அந்தக்
காலமதைக் கடந்தும் பல்லாண்டு வாழி.

*நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்.*






# வைகறை



டாண்...டாண்....டாண்... சிலாவத்தை காயாமோட்டைப் பிள்ளையார் கோவிலின் மணியோசை காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. நித்திரை விட்டெழுந்த கமலம் அக்கா வீட்டின் வாசலுக்கு வந்தாள். இரவு பெய்த மழையில் முற்றம் எல்லாம் ஈரமாக இருந்தது. வீட்டின் முன்னால் உள்ள பூமரங்கள் குரோட்டன்கள் எல்லாம் இரவு பெய்த மழையால் குளிர்ச்சியுடன் நின்றன. பூ மரங்களின் இலைகளின் மேல் சிறிய வட்டம் வட்டமாக நீர்த்தி வலைகள் கிடந்தன. கிணற்றடிக்கு சென்று தண்ணீர் அள்ளி முகத்தை கழுவிக் கொண்டு, வீட்டின் முன்னால் உள்ள நந்தியாவட்டைப் பூக்களை பிடுங்கினாள். ஒவ்வொரு வெண்ணிறப்பூக்களையும் பிடுங்கும் போதும் இலைகளின் மேற்பரப்பில் நின்ற தண்ணீர்த் துளிகள் கீழே சிந்திக் கொண்டிருந்தன. பூக்களுடன் வீட்டிற்குள் வந்த கமலம் அக்கா மேலே நிமிர்ந்து சுவரில் தொங்கும் கணவன் சதாசிவத்தின் படத்தைப் பார்த்தாள். மேவி இழுத்த கருமையான முடி, மீசை மழிக்கப்பட்ட சிரித்த முகம், கட்டம் போட்ட சேட் அணிந்திருந்தார். அவரது பெயரின் கீழே பிறப்பு இறப்பு எழுதப் பட்டிருந்தது.

சதாசிவம் அண்ணர் ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞர். சிலாவத்தை அம்மன் கோவில் முன்றலில் நடக்கும் கோவலன் கூத்தில் மாதவிக்கும், காளிக்கும் நடிப்பார். நடிப்பார் என்று சொல்வதைவிட அந்தப் பாத்திரமாகவே மாறிவிடுவார் என்று சொல்வதுதான் பொருந்தும். கோவிலின் முன்னால் வட்டமாகத் தடியை நட்டு கயிறு கட்டியிருப்பார்கள். ஒவ்வொரு தடியிலும் ரியூப் லைற் ஒளிரும். மேலே வெள்ளை கட்டிச் சோடனை செய்திருப்பார்கள். உடுப்புப்போட்டு வெளிக்கிடும் இடம் நாகதம்பிரான் கோவில் உள்ள ஆலமரத்துக்குக் கிட்ட இருக்கும். அங்கிருந்து வந்து வட்டக் கொட்டகைக்கு முன்பாக நின்று. "தெய்ய தீங்கு தலாங்கு தரிகிட தச்சச்சும்'' என்று சுழன்று ஒருமுறை துள்ளி உள்ளே போய் ஆடுவார்கள். சதாசிவம் அண்ணை மாதவிக்கு வரும் போது பச்சை நிற சாறி கட்டியிருப்பார். மீசை மழிக்கப்பட்ட கூரான முகம், அலங்காரங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு பெண் ஆடுவது போலவே இருக்கும். கமலம் அக்கா தனது பிள்ளைகளுடன் பாயில் இருந்து கணவரின் ஆட்டத்தை சிரித்த முகத்துடன் ரசிப்பார். கோவலன் கூத்தின் இறுதியில் வரும் காளி பாத்திரத்திலும் சதாசிவம் அண்ணர் மிகவும் நன்றாக ஆடுவார். கமலம் அக்காவுக்கு சதாசிவம் அண்ணருடன் நீண்ட நாள் இருப்பதற்கு கொடுத்து வைக்கவில்லை. தொண்ணூறாம் ஆண்டு இடம்பெயர்ந்து ஒட்டு சுட்டானில் இருக்கும் போது சுகயீனமுற்று இறந்துவிட்டார். பிள்ளைகளையும் கட்டிக் கொண்டு கணவரின் மார்பில் விழுந்து அழுதது இப்பவும் நினைவுக்கு வரும்போது கண்கள் பனிக்கின்றன. கண்களை துடைத்துக் கொண்டு கணவரின் படத்திற்கு பூக்களை வைத்துவிட்டு பக்கத்தில் உள்ள மகள் ஆனந்தியின் படத்தை பார்த்தாள்.

கட்டையாக வெட்டப்பட்ட முடியுடன் தீர்க்கமான பார்வையுடன், வரிப்புலி சேட் அணிந்திருந்த ஆனந்தியின் படத்திற்குக் கீழே தாய் மடியில மகளாக, தாய் மண்ணில் மாவீரராக என்று எழுதி காலங்களும் எழுதப் பட்டிருந்தன. கப்டன் திலீபனா என்று பெரிய எழுத்தில் எழுதி கீழே சதாசிவம் சதானந்தி என்று சிறிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. 1991 ஆம் ஆண்டு காலப்பகுதி எமது மண்ணின் விடுதலைக்காக இளைஞர், யுவதிகள் பெருமளவில் இணைந்து கொண்டிருந்தார்கள். கமலம் அக்காவின் மூன்று பெண் பிள்ளைகளும் தாங்களும் இப்போராட்டத்தில் இணைந்து இந்த மண்ணுக்காக போராட வேண்டுமென்று எழுந்தார்கள், ஆனால் ஆனந்தி ''நான் போராளியாகிறேன். நீங்கள் இருவரும் அம்மாவிற்கும், தம்பிக்கும் துணையாக இருங்கள்'' என்று கூறியபோது அவர்களிருவரும் இது போலவே கூறினார்கள். அதனால் குலுக்கல் முறையில் பெயர் எடுத்து போராட்டத்தில் இணைவது என்று முடிவாகி அதன்படி செய்தபோது ஆனந்தியின் பெயரே வந்தது. களங்கள் பல கண்டு காவியங்கள் பல படைத்த திலீபனா மருத்துவப் போராளியாக இருக்கும் போது 1999இல் ஒரு மழைக்காலத்தில் அம்பகாமத்தில் நடந்த எதிரியுடனான சண்டையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். மகளின் படத்திற்கு பூக்களை வைத்து வணங்கும் போது படலை திறக்கும் சத்தம் கேட்டது. கமலம் அக்கா கண்களைத் துடைத்துக் கொண்டே எட்டிப்பார்த்தார். மகள் நந்தினி பின்னிய முடியை மடித்துக் கட்டியிருந்தாள். வரிப்புலி சீருடை அணிந்திருந்தாள். தோளில் நீளம் குறைந்த துப்பாக்கி தொங்கியது. கம்பீர நடையுடன் தாயை நோக்கி வந்தாள். நீண்ட நாட்களின் பின் மகளைப்பார்த்த சந்தோஷத்தில் ஓடிச் சென்று கட்டி முத்தமிட்டார். தாயின் கண்கள் கலங்கவே நந்தினி துடைத்துவிட்டாள். தாய் கொடுத்த தேநீரை சுடச்சுட குடித்துவிட்டு போவதற்கு ஆயத்தமானாள்.

"ஏன்புள்ள அவசரப் படுகிறாய் நிண்டு சாப்பிட்டிட்டு பின்னேரமாய் போகலாம்தானே?''

''இல்லையம்மா நான் அவசரமாய் போகவேணும். பதின் நாலாம் திகதி தங்கச்சியின்ர நினைவு நாளுக்கு வாறன்.''

சொல்லிக்கொண்டே விடுவிடுவென நடந்தாள். மகள் போவதையே பார்த்துக்கொண்டு வாசலிலேயே கமலம் அக்கா நின்றார். முன்பு ஆனந்தி வீட்டிற்கு வந்து விட்டுப் போகும் போதும் இப்படித்தான் பார்த்துக் கொண்டு நிற்பார். ஆனந்தி தோளில் கொழுவிக் கொண்டு போன துப்பாக்கிபோலவே இப்போது மகள் நந்தினியும் தோளில் தொங்கவிட்டு இருந்தாள். சின்னவள் ஆனந்தி போவது போலவே இருந்தது. திரும்பி வீட்டிற்குள் இருந்த மகளின் படத்தை பார்த்தார்.

"என்னம்மா பாக்கிறீங்கள். நான் தான் இந்த மன்னை முத்தமிட்டிட்டன். ஆனால் என்ர ஆயுதம் இன்னொரு பேராளியின் கையில இப்ப இருக்கும். அது நான் என்ன நோக்கத்துக்காகப் போராடினேனோ அதே நோக்கத்தோடு கனன்று கொண்டேயிருக்கும் என்று சொல்வதுபோல் இருந்தது.

கமலம் அக்கா மீண்டும் ஒரு முறை கண்களை துடைத்துக் கொண்டார்.

**முல்லை சதீஸ்**

---

# தேடும் மனம்



வானம் சரியாக வெளிக்கவில்லை மழை தூறிக்கொண்டேயிருந்தது. அது பரணியின் மனதில் சினத்தை ஏற்படுத்தியது.

"சீ... என்ன... மழை இண்டைக்கு நேரம்...6.20 இன்னும் பத்து நிமிடமேபாக்கி பூசைக்கு என்று மனதுக்குள் ஏக்கம் கொண்டவனாய் பரணி.

சிவப்பு ஆடையுடுத்தி மாலைகள் நடுவே கண்களில் தீ தெரிய கைகளில் வீரவாள் தாங்கி மகமாரியம்மன் கோவிலின் மூலஸ்தானத்தில் காட்சி தந்தாள்.

"அப்பா.. எல்லாம் ஆயத்தம் செய்தாச்சு வந்து பூசை செய்யுங்கோ'' பரணியின் குரல் "தம்பி... இண்டைக்கு நாங்கள் கெதியா பூசையை முடிச்சிட்டு போவம்... இண்டைக்கு எந்த ஊர் எரிஞ்சு போகப்போகுதோ... தெரியாது மகமாரித்தாயே... நீதான் துணை.''

என்றவாறு எழுந்து ''ஓம்... சாம்பவி... சந்திரமௌலி ரமணா, உமா, பார்வதி, காளி கைமவதி.. நவயுவன தபகரி'' என்ற வேதமந்திரம் வாயில் இருந்து காற்றில் கலந்து கோபுரவாசல் வரை கேட்டது.

பட...பட...பட.. என துப்பாக்கிச் சத்தம்... சன்னங்கள்... சரமாரியாக விழ 'றக்' வண்டி ஒன்று புழுதியைக்கிளப்பியபடி கோவில் முன் வந்து நின்றது.

"டேய்... ஒங்களுக்கு சொன்னது கேக்கல்லையா? பூசைபண்ண வேண்டாமென்று... பூசாரி... பூசாரி டேய் இங்க வா'' என அதட்டலோடு கொச்சைத் தமிழில் பேசியபடி சில சிங்களக் காடையர்கள் வந்தனர்.

கைகள் நடுங்க... பயந்தபடி பரணியை அணைத்தவாறு'' அது ஐயா... இண்டைக்கு கௌரிவிரதம்... என இழுத்தபோது.

பல றக் வண்டிகள் அந்த ஊர் மனைக்குள் புகுந்த வண்ணம் இருந்தன.

"ம்... போ... பூசாரி... இண்டைக்கு கடைசி மன்னிப்பு... இனிப்பூசை... பண்ணுறதில்லை. சரியா'' என தலையில் சிவப்பு நிற துணிகட்டிய குட்டியன் கோபத்தோடு கூறினான்.

ஓம்...என தலை அசைத்தபடி... நின்ற சுந்தரேஸ்வரக் குருக்களுக்கு அருகே வந்த குட்டியன். காலால் ஓங்கி சுந்தரேஸ்வரக் குருக்களுக்கு உதைத்து விட்டு றக்கில் ஏறி அமர்ந்தான் றக்விரைந்து போனது.

"இவனும்... தமிழனா... கதிர்காமத்தம்பியின்ர நல்ல குணத்திற்கு இந்த மூதேவி வந்து பிறந்திது.. துரோகி... சீ...''

என மனதுக்குள் திட்டியபடி... எழுந்த குருக்கள்... பரணி...வா...போவம் வீட்ட என்னபாடோ.

"மகமாரித்தாயே... வீட்ட புள்ள குட்டியள் ஆத்துக்காரி புனிதா... பவளம், கண்ணன் என்னபாடோ'' என சுந்தரேஸ்வரக் குருக்கள் மனதுக்குள் எண்ணிக் கலங்கியபடி நின்றார்.

கதவைப்பூட்டிவிட்டு மகனைக் கூட்டிக் கொண்டு தெருவில் நடந்தார். எங்கும் மனித உடல்கள்... எரிந்த நிலையிலும் எரியாத நிலையிலும்... வீதியில் கிடந்தது.

மகமாரித்தாயே... நீயே..துணை... என மனதில் எண்ணியவாறு பதட்டத்துடன் வீட்டை நோக்கி நடந்தார்.

"அப்பா... பயமாக்கிடக்கு... பரணியின் குரல்.

பயப்படாத... தம்பி... ஒண்டும் நடக்காது கெதியா வீட்ட போவம்.''

வீட்டு வாசலை அண்மித்த சுந்தரேஸ்வரக் குருக்களின் கண்கள் நிலைகுத்தி நின்றது... வீட்டு வாசலில் அவர் மனைவி தலைவிரிகோலமாக உயிர் பிரிந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தாள். அவர்கண்கள் அருகே நகர்ந்தபோது. அவர் மகன் கண்ணன் மகள் பவளம்.. அவர்களும் இரத்த வெள்ளத்தில் விழிகள் திறந்த நிலையில் வான் நோக்கி கிடந்தார்கள்.

பரணி தாயின் உயிர் அற்ற உடலின் மீது விழுந்து கதறி அழுதான்.

"அப்பா... என... கதறியபடி புனிதா தான் ஒளித்திருந்த இடத்திலிருந்து வந்து தந்தையை கட்டியணைத்து அழுதாள். மனம் எரிமலையாய் குமுறியது சிதைக்கப்பட்ட தன் குடும்பநிலையை எண்ணி.. எண்ணி... அழுதார் சுந்தரேஸ்வரக்குருக்கள். அக்குரல் வான் திசை கலந்தது.

''காளி அம்பாளே.. இது என்ன அக்கிரமம் பாவிகளே'' என அழுது .... அழுது... உருக்குலைந்த நிலையில் சுந்தரேஸ்வரக் குருக்கள்.

▲▲▲

"பரணி.. அந்தா... தெரியுதுபார்... தகரத்தால அடைச்ச வீடு... அதாத்தான் இருக்க வேணும் சரியாத் தெரியேல்ல... கண்ணும் மங்கிப்போச்சு''

என பரணிக்கு கூறியபடி நடந்தார் சுந்தரேஸ்வரக்குருக்கள்.

"என்ர... புனிதா... எங்க... நிக்கிறியோ என ஏக்கப் பெரு மூச்சுடன் முகாம் வாசலில் குருக்கள் முகம் வியர்த்தபடி நின்றார். பரணியும்... அவர் கூட நின்றான்.

அம் முகாமில் பெண்கள் பேச்சொலிகள் சிரிப்பொலிகள் அவர் முகத்தில் மகிழ் வைத்தந்து நின்றது. அக்குரலுக்குரியவர்கள் ஓடி ஆடி விளையாடும் காட்சியை அதன் அழகை ரசித்தபடி குருக்கள் நின்றார்.

அவரின் மனம் தனது மகள் புனிதாவின் முகத்தை காணும் ஆவல் மேலிட எட்டு வருடங்களுக்கு மேல் அவளின் முகத்தைப்பார்த்து என ஏக்கப் பெரு மூச்சு அவரிடமிருந்து வெளிப்பட்டது.

''ஐயா... ஆரைத் தேடுறியள்... வாங்கோ'' சிரித்த பூமுகத்துடன். பின்னலை கட்டியபடி வரிப்புலிஉடையில் வந்து நின்றாள்.

"புனிதா... என தன்னை மறந்து அழைத்தார்.

''அ... என்ன புள்ள என சுய நினைவிற்குத் திரும்பினார். பிள்ளை என்ர மகளை பாக்க வேணும் அதுதான்... இழுத்தார். என்ன பெயர்... மகளுக்கு அது பிள்ளை... வீட்டுப் பெயர்... புனிதா... இயக்கப்பெயர்... வடிவா.... தெரியேல்ல... ஆ...தமிழ்ச் செல்வி.... என்ற பெயர்தான் என யோசித்தவாறு கூறினார்..

வாங்கோ... இந்த கதிரையில இருங்கோ... என கூறியபடி உள்ளே சென்றாள்.

தம்பி... பரணி உன்ர அக்கா நிண்டால் எவ்வளவு சந்தோசம் என இருமலுடன் கூறினார்.

மீண்டும் அப் போராளிப் பெண்... ஐயா உங்கட மகள் இவவோ என வடிவாப் பாருங்கோ...'' எனக் கூற.

கதவுக்குப் பின்னால் இருந்து வெளியில் வந்தாள் அப்பெண் போராளி.

"அப்பா...அப்பா.. அக்கா அக்கா... இவதான் என பரணி துள்ளிக் குதித்தான்.

சுந்தரேஸ்வரக்குருக்கள் மனம் அந்தரத்தில் மிதந்தது. புனிதா... என அழைத்தபடி அப்பா என அழைத்தபடி ஓடி வந்த புனிதாவை கட்டியணைத்து முத்தமிட்டார்.

பரணியும் "அக்கா'' வென மகிழ்வு பொங்க அவள் கரங்களைப் பற்றினான்.

அந்த இதயங்கள் மகிழ்வில் திளைத்தன எல்லையிலா மகிழ்வில்.

**— பவித்திரா —**



## மண்ணின் மைந்தர்களின் கதை

# உறுதி குலையாதவன்

சடசடத்த வேட்டோசைகளால் பரந்தன் அதிர்ந்துகொண்டிருந்தது.

சடசடத்த ரவைகள் வானில் சீறீட்டுச் செல்வதும், ஆங்காங்கே மரங்களிலும், காவலரண் கூரைகளிலும் பட்டுத்தெறிக்கும், தெறிப்பொலியும், எதிரியின் ரவைக் குவியல்கள் எங்களின் காதோரம் கீச்சலிட்டுச்செல்லும். ரீங்....என்ற ரீங்கார ஒலியும் போர்க்களத்தில் ஒலித்துக்கொண்டே இருந்தன.

களத்திலே ஒலிக்கும் ரவைகளின் சீறலும், எறிகணைகளின் ஓசையும் தனிரகமானது என்பது பல போர்க்களங்கள் சென்று திரும்பிய களத்தின் நாயகர்களுக்கே நன்றாகத்தெரியும்.

ஒரு மூன்று மணித்தியால சினிமாப்பட கற்பனை கதைக்கே இந்தளவு அலை மோதல் என்றால், ஒரு நாள் இரண்டு நாளென தொடங்கி ஒருமாதம், இருமாதம் என்பதையும் கடந்து, ஒன்றரை வருடம் ஜெயசிக்குறு எனும் உண்மைச் சண்டை நடந்த காட்சியை என்னவென்று கூறுவது.

இப்படியாக அதிர்ச்சியூட்டும், திகில் நிறைந்த சண்டைப்பட காட்சியைப்போல்தான் பட்டப்பகலில் பகைவன் விழித்திருக்க அவனது இரும்பிலான இருப்பிடத்தை உடைத்தெறிந்து உள்ளே புகுந்தோம்.

எதிரிக்கு சவால்விட்டு பகலிலேயே எதிரியை எதிர்க்கத் துணிந்து வெற்றிகொண்ட அந்த வீரமிகு சமர்க்களத்திலேயே அந்த அற்புதமான போராளிக்கு பக்கத்திலிருந்து அவனது சண்டைகளை பார்த்து வியந்து இருக்கிறோம்.

எதிரி கிட்டவந்து விட்டான் என்றதும் எந்தவித பதற்றமோ படபடப்போ இல்லாமல் நன்கு குறிபார்த்து பல எதிரிகளை வீழ்த்தியதை என்னவென்று எழுதுவது.

அந்த நாட்கள் எங்கள் மனதில் என்றுமே நீங்காத இடம் பிடித்துவிட்டன. பரந்தன் படைத்தள பகல் நேரச் சண்டையில் மழை வெள்ளத்தில், குருதி சொட்டச் சொட்ட, தசைகள் பிரிந்து தண்ணீரில் கொட்டக்கொட்ட, உயிர் விடும்வேளையிலும், உயிர்போக எஞ்சி இருந்த ஒரு சில மணித்துளிகளிலும் எதிரியை கொன்றவாறே உயிர்தந்து உன்னதவெற்றியைப் பெற்றுத்தந்த பல மாவீரர்களின் வரிசையில் லெப்: ஈழச்செழியனும் இணைந்துகொண்டு பரந்தன் வெற்றியின் மகிழ்வில் கலந்து சங்கமிக்கிறான்.

மாவீரன் லெப்: ஈழச்செழியன் (சண்முகநாதன் சுரேஸ்) சிறுவயதிலிருந்தே போராட்டத்தை நேசித்தவன். புதுக்குடியிருப்பில் அவனது வீட்டிற்குப்பக்கத்தில் போராளிகளின் முகாம் ஒன்றிருந்தது. சிறுவயதிலேயே அந்த முகாம் போராளிகளிடமும், ஏனைய சில போராளிகளிடமும் பழகி போராட்ட வரலாறு தொடர்பாக சம்பந்தமாக கேட்டறிந்துகொண்டான்.

இவனது தொடரான எண்ணக்கிடக்கை என்பது இயக்கத்தில் இணையவேண்டும் என்பதாகும். அவனது எதிர்பார்ப்புப் போலவே தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொண்டு தமிழீழ தாயகத்தின் விடிவிற்காகப் போராடப் புறப்பட்டான்.

லெப்: ஈழச்செழியனின் விடிவுதேடிய பயணமதில், அவன் சந்தித்த வீரம்மிகுந்த சண்டைகள் ஏராளம்.

அந்த இளம் வீரன் இயல்பாகவே அமைதியானவன். புன்சிரிப்பு அவனுடனே ஒட்டிப்பிறந்திருந்தது. மெதுவாகவே நடந்துவரும் அவனது தோற்றமே மிகமிக ரசிக்கத்தக்கதாக இருக்கும்.

ஏதோவொரு சண்டையில் எதிரியிடமிருந்துதானே கைப்பற்றிய நெஞ்சு ரவைதாங்கியின் பச்சை நிறத்தில் அவனது இராணுவ உடல்வாகு அழகாகவே இருக்கும்.

லெப்: ஈழச்செழியன் எப்போதுமே தனது துப்பாக்கியை கைவிடாதவனாக வலம்வந்து கொண்டிருப்பான். எனவே எப்போதும் எதிரி தாக்குவானாயின் உடனே தாக்கக்கூடியவனாகவே இருப்பான். சுட்டதீவு காவலரணில் ஓர்நாள் அப்படி தாக்கியும் இருக்கிறான்.

லெப்: ஈழச்செழியனின் சண்டைகள் அனைத்திலும் ஏதோ ஒரு வீரவரலாறு இருக்கவே செய்தது. பல சண்டைகளில் சாதித்த அந்தவீரனின் வீரத்தை எத்தனை தடவை பார்த்திருக்கிறோம்.

பரந்தன் படைத்தள முகாம் அழிப்பிற்காக அணிகள் நகரத் தொடங்கின. பகல்வேளை மழையும் விடாது பெய்துகொண்டே இருந்தது. குளிர் போராளிகளின் உடலை உலுக்கியது. நீண்ட நேரம் நகர்ந்து கொண்டிருந்ததால் பசி குடலை அரித்தெடுத்தது. தாகத்தைமட்டும் மழைநீரில் தீர்க்கமுடிந்தவர்களாய் நகர்ந்துசென்று எதிரியின் தடை உடைத்து உள்நுழைந்து விட்டதும், எதிரி மூக்கு நுனி வியர்த்த கோபக்காரனாகியிருக்கவேண்டும். காரணம் தனது முழு பலத்தையும் வைத்து தாக்கிடச் செய்தான்.

எதிரியின் மிகமோசமான இராணுவ வக்கிரங்களையும் போராளிகள் வெற்றிகொண்டு சென்றபோது களத்திலே (கண்டிவீதி) முதலாவது அணியை வழிநடத்தி எதிரியின் காவலரண்களை கைப்பற்றிச் சென்றுகொண்டிருந்த மேஜர்: மஞ்சுதன் வீரச்சாவடைய நிலைமை மோசமானதாகிவிட்டது. அணித்தலைவர்களின் நடைபேசிகள் மழையில் நனைந்து செயலிழந்துவிட, தொடர்வுகள் அற்று எங்கு என்ன நடக்கிறது



என்று தெரியாத நிலை உருவாகிவிட்டது. நிலைமை என்னவென நாம் தடுமாறிக்கொண்டிருக்க ஈழச்செழியன் எம்மை நோக்கி ஓடிவந்தான்.

மழை வெள்ளத்தில் சதக்கென அவன் ஓடோடிவர எறிகணைகளும் அவனை பின்தொடர்ந்து தண்ணீரில் வீழ்ந்து வெடித்துக்கொண்டே இருந்தன. ரவைகள் தண்ணீரில் பட்டு பல குழிகளை ஏற்படுத்தி மறைந்தன.

அண்ணை மஞ்சுதண்ணை வீரச்சாவடைந்திட்டார். வோக்கியும் தண்ணியில் விழுந்திட்டுது. வேலை செய்யுதில்லை, எல்.எம்.ஜி வேலைசெய்யுதில்லை. வோக்கி இல்லாட்டியும் பரவாயில்லை. எல்.எம்.ஜி ஒன்று தாங்கோ என்று கேட்டு, எதிரியிடமிருந்து எடுத்த ஒரு இயந்திரத் துப்பாக்கியை கையிலெடுத்துக் கொண்டு திரும்பினான் ஈழச்செழியன்.

அவனைத் தொடர்ந்து நாங்களும் ஓடினோம் கள நிலைமை உண்மையில் மோசமாகவே இருந்தது. எதிரி எமது அணியினை நோக்கி முன்னேறத்தொடங்கி இருந்தான்.

நிலைமையை உணர்ந்த ஈழச்செழியன். எதிரியின் எல்.எம்.ஜியை இயக்கத்தொடங்கினான், பக்கத்தில் கப்டன் சம்பத்தும், மாலதி படையணிப் போராளி நர்மதாவும் தாக்கத்தொடங்கினர். அப்படி இருந்தும் எதிரி நாம் கைப்பற்றப்போகும் காவலரணை தனது கனரக இயந்திர துப்பாக்கியால் சல்லடைபோட்டான்.

அந்த இடத்தில் எதிரி ஒரு யுக்தியை கையாண்டான். நிலவனை காவலரண்களின் கூரைகளில் போடப்பட்டிருந்த ஓடுகளைநோக்கி விட்டு விட்டுச் சுட்டுக்கொண்டிருக்க, அது சிவத்த நிறமண்புகையோடு சிதறிக் கொண்டிருந்தது. இது ஒரு மனப் பயத்தை ஏற்படுத்தும் என எதிரி நம்பி இருக்கலாம்.

ஆனால் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தக்காவலரணை கைப்பற்றிவிட வேண்டும் என முனைப்புடன் செயற்பட்டோம்.

நகர்வரணிலிருந்த ஈழச்செழியன் வேகமாக செயற்பட ஆரம்பித்தான். எழுந்து நின்று தன் கையிலிருந்த இயந்திரத் துப்பாக்கியால் சுடத்தொடங்கினான். பதிலுக்கு நர்மதாவும் சுட்டு எமக்கான ஆதரவினை தந்த சிலவிநாடிகளில், நாம் வேகமாக செயற்பட்டு குறித்த காவலரணுக்குள் சென்று தாக்கத் தொடங்கினோம்.

அந்த இடைவெளிக்குள் ஈழத்செழியனும் உள்நுழைந்துவிட எமது தாக்குதல் உக்கிரமடைந்தது. எதிரியும் விடுவதாக இல்லை. இப்போது எதிரிக்கும் எமக்குமான இடைவெளி 75-100மீற்றரேயாகும். எமக்கு அடுத்த காவல்ரணில் எதிரி எம்மை நோக்கி சுட்டுக்கொண்டிருக்க, அதிலிருந்து பக்கவாட்டாகவே எதிரி எம்மை இடைவிடாது தாக்கிக் கொண்டிருந்தான். எதிரி வேக வேகமாக ஓடி ஏதேதோ செய்துகொண்டிருந்தான்.

**— க. மிரேசு —**

நிலைமை ஈழச்செழியனுக்கு விளங்கியிருக்கவேண்டும். நீங்கள் இரண்டு பொயின்ருக்கும் இடைவிடாது, சுடுங்கீ ... ன் வெளியில் போறன் என்று ... விட்டு காவலரண் வாசலில் ... ணைகள் இரண்டை எடுத்து ... ட்டு இன்னுமொன்றை உந் ... யில் பொருத்திக்கொண்டு வெளியேறினான். எறிகணைகள், எதிரியின் தொடர்சூடுகள் எதையுமே அவன் சிந்திக்காதவனாய் வெட்டவெளியில் நின்று எதிரியின் பக்கவாட்டு நிலையை நோக்கிச் சுட்டான். எதிரியின் நிலை புகையால் சூழ்ந்தது.

அடுத்த உந்துகணையை, அடுத்த காவலரணை நோக்கி சுட்டதும், மீண்டும் இரண்டிற்கும் ஒன்று ஒன்று என்று சுட்டான்.

எதிரியின் பக்கம் ஏதேதோ படபடப்பு சத்தங்கள் கேட்கத்தொடங்கின. மூவ் என ஈழச்செழியன் கத்தினான். நாங்களும் பெண்போராளிகளும், சுட்டுக்கொண்டே முன்னேறத்தொடங்கினோம். எல்லோரும் எதிரியை நோக்கி சுட்டுக்கொண்டேதான் நகர்ந்தோம். ஆனால் ஈழச்செழியன் நிலையெடுத்து அவதானமாக ஓடுகின்ற ஒவ்வொருவனையும் சுட்டுகொண்டே முன்னேறினான்.

அன்று மாலைக்குள் குறித்த எதிரியின் பிரதேசங்களை பிடித்துவிட்டோம். மழை வெள்ளம் என்றாலும் எமக்கேற்றவாறு, நிலைகளை தயார் செய்துகொண்டிருந்தபோது எமக்கு முன்னே ஏதோ குசு குசுப்பு கேட்டது.

அதையும் ஈழச்செழியனே செவிமடுத்தான். அவன்தான் காவலில் நின்றான். வரவர சத்தம் பெரிதாக சிங்களத்தில் கேட்டது. எம்மை சைகை செய்து சத்தம் போடாமல் இருக்கச்சொன்னான்.

கரும் இருட்டு என்பதனால் தூரத்தை கணிக்க முடியாவிட்டாலும் சத்தத்தை வைத்து கணித்ததில் 50-60 மீற்றரில் எதிரியின் நடமாட்டம் இருப்பதை அவதானித்து, 04 பேரை முன் அனுப்பதிட்டமிட்டோம். ஈழச்செழியன் முந்திக்கொண்டு நானும் போகிறேன் என்றான். என்னோடு இன்னுமொருவரை விடுங்கள் என்றதும் அவனோடு ஒரு போராளியை விட்டோம்.

அவர்கள் முன்சென்று சில நிமிடத்தின் பின் வேட்டுச்சத்தம் கேட்டது. எதிரியும் தாக்கத்தொடங்கினான். ஆனால் ஈழச்செழியனின் கையே ஓங்கியது. சொற்பநேரம் சண்டைசெய்த எதிரி தனது சகா ஒருவனின் உடலையும் விட்டுவிட்டு ஓட்டமெடுத்தான்.

இப்போது ஈழச்செழியன் முன்னே சென்று சுட்டுக்கொண்டிருக்க, அவனுடன் சென்றபோராளி வந்த எம்மை கூட்டிச்சென்றான். எமது நிலைமாற்றப்பட்டு, அவ்விடத்திலேயே இருந்தோம். அன்றிரவு அப்படியே எமது நிலையை தக்க வைத்தோம்.

அடுத்தநாள் காலை ரவைச் சத்தங்களுடனேயே விடிந்தது. சண்டை எல்லா இடங்களிலும் பரவலாக நடக்கத்தொடங்கியது. எதிரி முன்னேறமுற்பட்டு, தோல்வியடைந்தான். என்றாலும் அவனது தாக்குதல் குறையவில்லை.

ஆம் பக்கம் பார்க்க)






## மின்மினி

இரவில் சின்ன மின்குமிழ்போல்
எழுந்து நீந்தும் மின்மினி
திரியும் நிலவுத் துணிக்கை என்னச்
சில்லென்றுலவும் மின்மினி
புள்ளி போல அங்கும் இங்கும்
போகுஞ் சிட்டு மின்மினி
வெள்ளி மெல்ல இறங்கி வந்து
மிதப்ப தொக்கும் மின்மினி!
சூரியன்தன் வெய்யில் நேரம்
தோன்றிடாத மின்மினி
வீரம் என்றே இரவில் மட்டும்
வெளிச்சம் போடும் மின்மினி!

## எங்கள் கிளிகள்

கிளிகள் தொன்மைக் காலம் தொடக்கம் பேசப்படும் ஓர் இனமாகும். ஒவ்வொரு இனத்திற் கேற்ப இது வாழும் காலம் 40 தொடக்கம் 100 வருடங்கள்வரை நீள்கிறது. கிளிகளில் மொத்தம் 358 வரையிலான இனங்கள் காணப்படுகின்றனவாம். உலகிலேயே அவுஸ்திரேலியாவின் அமேசன் பகுதியில்தான் அதிக மான இனக்கிளிகள் வாழ்கின் றன.

400 வருடங்களுக்கு முன்பே மனிதன் கிளிகளை செல்லப்பிராணிகளாக வளர்க்கத் தொடங்கிவிட்டான். கிளிகளை முதலில் எகிப்தியர்கள்தான் வளர்த்துள்ளார்கள். இக்கிளிகள் மனிதனுடன் பேசும் ஆற்றல் கொண்டவை.

எமது பிரதேசத்தில் காணப்படும் பச்சைக்கிளிகள் இலண்டனில் தான் அதிகம் உள் ளன. கிளிகள் தாங்கள் உண்ணும் பழங்களில் விசம் உள்ளவையை உண்டுவிட்டால் அது ஆற்றங் கரையில் உள்ள களிமண்ணை உண்டு அதன் விசத்தை இல்லாமல் செய்துவிடுகிறதாம்.

பல இனக் கிளிகள் இன்று அழிந்து வருகின்றன மரப்பொந்துகளில் கூடு கட்டி குஞ்சு பொரிக்கும் இக்கிளிகள் ஒரு தடவையில் 3-4 முட்டை களை இடும்.

கிளிகளில் பெரிய கிளிகள் மகௌஸ்(Macows) எனப்படும் கிளி இனம் தான் தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக் காவிலும் அதிகமாகக் காணப்படும் இவைகள் சன நடமாட்டமற்ற காடுகளில் வாழ்கின்றன வாம்.



உலக கிளிகள் தினம் ஒவ்வொரு வருடமும் மே 31 ஆம் திகதி கடைப்பிடிக் கப்படுகின்றது. அழிந்து வரும் கிளி இனங் களை பாதுகாக்கும் நோக்குடன் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது. மேலைத்தேய நாடுகளில் கிளிகளை பிடித்து வேற்று நாடு களுக்கு விற்பனை செய்யும் முகவர்களும் உண்டாம். இதனாலும் கிளி இனங்கள் அழி கின்றன.

எமது பிரதேசத்தில் வாழும் பச்சைக் கிளிகளை சிலர் பிடித்து வீடுகளில் செல்லமாக வளர்ப்பது உண்டு. ஆனால் வீடுகளில் வளர்க்கும் கிளிகளுக்கு நாம் வளர்க்கும் நாய், அல்லது பூனையே எதிரியாக மாறி அதனைப்பிடித்துத் தின்று விடுகின் றன. இந்தக்கிளிகள் எமது விவசாயிகளுக்கு மாத்திரமல்ல உலகிலுள்ள பல விவசாயிகளுக்கும் சிம்மசொற்பனமாக உள்ளது. தோட்டங்களில் உள்ள கனிகளையும் காய்களையும் கொறித்துத் தின்று தீர்த்துவிடும். இதனால் எமது விவசாயிகள் இக்கிளிகளை எதிரி யாகப் பார்க்கிறார்கள். எமது பகுதியில் உள்ள கிளிகளுக்கு மிளகாய் ஒரு பிடித்தமான உணவு. இதற்கு ஒரு நகைச்சுவையான கதையுண்டு. ஒருவர் தன் நண்பரிடம் கேட்டாராம் மூன்று கிளிகள் ஒரு மிளகாய் தோட்டத்திற்கு மிளகாய் உண்பதற் காகச் சென்றனவாம். இதில் இரண்டு கிளிகள் மாத்திரம் மிளகாய் உண்ட னாம். ஒரு கிளி மிளகாய் உண்ண வில்லை. ஏன் என்று நண்பர் கேட்க அதற்கு மற்ற நண்பர் கூறினாராம் அந்த கிளிக்கு குடல் புண் நோய் (அல்சர்) என்று.

## சொற்சிலம்பம் - 63

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | கோ | ம | பி | ல | ட் | ற |
| ச | கு | நீ | த | ள் | ர் | ல் |
| மா | பா | ல் | கோ | ன் | ணி | ம் |
| ஒ | அ | ச் | ய | ச | ங் | மா |
| பெ | ட் | த | பா | ரா | வ | ர |
| தி | வ | கி | இ | ய் | ம் | தே |
| சி | பூ | ப் | ஓ | க | வி | லோ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -61 இன் விடைகள்

01. ஒஸ்லோ
02. சங்கர்

### சொற்சிலம்பம் - 61 இன் பரிசுக்குரியவர்

ப.ஸ்ரீஜனனி
தரம்-7A
கிளி/திருவையாறு,
மகா வித்தியாலயம்.

### சொற்சிலம்பம் - 61 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. சு.லயாசினி, இரத்தினபுரம், கிளிநொச்சி.
02. இ.சத்தியஜெயந்தி, கூழாவடி, ஆனைக்கோட்டை.
03. கோ.ர:ம்சியா, கிளி/பூநகரி ம.வி, பூநகரி.
04. சி.சுதாஸ், வண்ணாகுளம், அடம்பன்.
05. ம.நிறோஜினி, யா/தாளையடி றோமன், கத்தோலிக்க வித்தியாலயம்.
06. அ.றோஜிதா, தரம்-6, நட்டாங்கண்டல் அ.த.க, பாடசாலை.
07. வ.கிசோபன், வ/இறம்பைக்குளம் ம.வி, வவுனியா.
08. மு.இந்துஜன், யா/நெல்லியடி மெ.மி.த.க, பாடசாலை.

01. தமிழீழத்தின் முதல் பெண் மாவீரர்.
01) ......................................
02. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்.
01) ......................................
பெயர் :- ......................................
முகவரி :- ......................................

சொற்சிலம்பம்-63
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

## முயலாரின் வீடு

பகுதி-03






# ஆட்டோ கிராப் அல்லது மனங்கொத்தி

அநேகமாக எல்லோராலும் பார்க்கப்பட்ட படம். பார்த்தவர்களில் பெரும்பாலானவர்கள் பாராட்டிய படம். குறிப்பிடக்கூடிய விமர்சனங்களை எழுப்பிய படம். ஒருபக்கம் மிக உற்சாகமான வரவேற்புடன் கூடிய விமர்சனங்களும் புகழுரைகளும். மறுபக்கத்தில் கடுமையான தொனியில் கண்டனவுரைகளும் எதிர்விமர்சனங்களும். அதுவும் படத்தைப் பற்றிக் கோபத்துடன் எழுதப்பட்ட விமர்சனங்கள் ஒருபுறம். மறுபுறத்தில் இந்தப்படம் பற்றி எழுதப்பட்ட விமர்சனங்களுக்கான விமர்சனங்கள். புதிய கலாசாரம், தெரிதல் போன்றவற்றில் 'ஆட்டோ கிராப்' பை தாக்கியே எழுதப்பட்டிருந்தன. அதாவது சிறந்தபடம் என்று கொண்டாடப்படும் அளவுக்கு 'ஆட்டோ கிராப்' இல்லை என்பது அவற்றின் வாதம். ஆனால் வெகுசன மட்டத்திலும் சிற்றிதழ்களில் பலவற்றிலும் 'ஆட்டோ கிராப்'புக்கு வரவேற்புடன் கூடிய விமர்சனங்களே எழுதப்பட்டிருந்தன. இந்தப்



பின்னணியில் இங்கே இப்பொழுது 'ஆட்டோகிராப்' பற்றி மேலும் சிலவற்றைப் பார்க்கலாம்.

'ஆட்டோ கிராப்' எங்களுடைய உச்சரிப்பில் 'ஓட்டோகிராப்' என்றே கொள்ளப்படவேணும். ஆனால், படத்தின் பெயரை அப்படி எழுதிவைத்திருப்பதால் தவிர்க்க முடியாமல் நாமும் அவ்வாறே குறிப்பிடவேண்டியுள்ளது. 'ஆட்டோ கிராப்' சேரனின்படம். இதற்கு முதல் சேரன் பொற்காலம், பாண்டவர்பூமி, தேசியகீதம் ஆகிய படங்களைத் தந்திருந்தார். 'சொல்ல மறந்த கதை' என்ற தங்கர்பச்சானின் படத்தில் நடித்திருந்தார். இந்த அனுபவச் செழுமை, ஆட்டோ கிராப்பை கூடிய வரை நல்லபடமாகத் தர உதவியிருக்கிறது எனலாம்.

புதிய கலாசாரத்தின் பார்வையில், கிராமத்திலிருந்து நகருக்கு வெளியேறிப்போனவர்கள் அங்கிருந்து பார்க்கின்ற பார்வையை மட்டுமே ஆட்டோகிராப் தருகிறது. கிராமத்தின் பற்றாக்குறை வாழ்வை மாற்ற இந்தக் கிராமத்து இளைஞன் யோசிக்கவில்லையே. இப்படி பார்வையைத் திசை திருப்பி பார்வையாளரை ஏமாற்றுகிற வித்தையை தமிழ்ச்சினிமா செய்து வருகிறது. அதன் ஓரம்சமாகத்தான் ஆட்டோகிராப்பும் இருக்கிறது என்கிறது.

படத்தின் கதை வேறொரு கோணத்தில் வேறு நரம்புகளில் ஓடுகிறது. அதில் வேறு பிரச்சினைகளைப் பேசுவது படத்தைப் பல வீனப்படுத்திவிடும் என்று வாதிடுகிறார்கள் சிலர். அவர்கள் இதற்குக் குறிப்பிடும் உதாரணம் தங்கர் பச்சானின் தென்றல். அதில் கதையமைப்பை விடவும் கூடுதலாகத் துருத்திக்கொண்டிருப்பது தங்களின் கருத்துக்கள். தான் சொல்லவிரும்புகிற எல்லாவற்றையும் திணித்துவிட முனைகிற அந்தரத்தைப் படத்தில் பார்க்கலாம். ஆகையால் அதேபோல ஆட்டோகிராப் வரத்தேவையில்லை என்கின்றனர் அவர்கள்.

ஆட்டோ கிராப் இப்போது திரைப்பட விழாக்களுக்கும் திரைப்படப் போட்டிகளுக்கும் போயிருக்கிறது. அங்கே அது கவனிப்புகளைப் பெறக்கூடும் என்ற நம்பிக்கையும் பரவலாக உண்டு. நினைவுகளைச் சொல்வதில் எடுத்த அக்கறைக்காக அதுகவனம் பெறலாம் என்பதே முதல் நம்பிக்கை. ஞாபகங்களை மீட்டுப்பார்ப்பதில் இருக்கும் விருப்புநிலை தேர்வுக்கு இடமளிக்கும் என்பது பலருடைய எதிர்பார்ப்பு.

'ஆட்டோ கிராப்' பலருக்கும் பிடித்துப்போனதற்கான காரணத்தை தமிழ்ப்பண்பாட்டுச்சூழலிலும் வாழ்க்கையிலுமாக நாம் அடையாளம் காணலாம். எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லாத, சொல்ல விரும்பாத வாழ்க்கை நமது. பொத்தி வைத்திருத்தல், அமுக்கிவைத்திருத்தல், மறைத்து வைத்திருத்தல் என்பதாகவே எங்களின் உண்மைகள் பலவிருக்கின்றன. அதிலும் நமது காதலை நாம் யாருக்கும் சொல்வதில்லை. காதல்திருமணம் நடந்தா தவிர மற்றக் காதலெல்லாம் மறைக்கப்பட்டவை,அமுக்கப்பட்டவை, திரையிடப்பட்டவை. ஆனால், காதலிக்காதவர்கள் எவரும் இல்லை என்பது யதார்த்தம். யாராவது ஒருத்தரையேனும் காதலிக்காமல், விருப்புக்கொள்ளாமல் ஒருவர் இருந்ததென்பது மிக அபூர்வமானது. யாரோ ஒருவரேனும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலாவது மனதில் கொத்திவிட்டுத்தான் போகிறார். இந்த மனங்கொத்துதல் வெகு சுவாரஷ்யமானது. அது வெளிப்படையானதாக இருந்தாலும்தான், உள்ளூர ரகசியமாக இருந்தாலுமென்ன?

சேரன் இந்த உண்மையைக் கண்டுபிடித்துக் காண்பிக்கிறார். அமுக்கிவைத்திருந்தவர்களுக்கு, பொத்தி வைத்திருந்தவர்களுக்கு, மறைத்து வைத்திருந்தவர்களுக்கு அவர்களின் மனங்கொத்திகளை ஞாபகப்படுத்தி வைக்கிறார். உள்ளூர ஒவ்வொருவரும் ஆட்டோ கிராப்பை ரசித்தேயாகவேண்டும். அவர் எத்தகைய கடுமையான விமர்சனத்தை வைத்தாலும்கூட.

எங்களுடைய பண்பாட்டில் மனைவியின் மனதில் கணவனைத் தவிர வேறொருவரின் பதிவு அவளுக்கிருக்கும் அடையாளமில்லை. வாழ்விலும் அப்படித்தான். கணவனின் மனதில் இன்னொரு பெண்ணின் பதிவிருப்பதை மனைவியும் விரும்புவதில்லை. ஆனால் ஒவ்வொருவர் மனதிலும் வேறு பதிவுகள் இருக்கும். பெரும்பாலும் அப்படி இருப்பது உண்மை. அதுவொரு யதார்த்தம். அந்தப்பதிவு வாழ்வை நேரடியாக இடையீடு செய்யாதது. மனதில் ஒரு சிறு மச்சம்போல இருக்கலாம். இந்தப் பதிவு திருமணத்தின் முன்பாகவும் நிகழலாம். சிலருக்கு பின்புகூட ஏற்படலாம். பதிவு மட்டுமே.

இங்கே ஆட்டோ கிராப்பில் வருகிற இளைஞனின் (சேரனின்) மனதில் இருக்கிற பதிவுகள் முதன்மையாகின்றன. சேரனுடன் இணைந்திருந்த-பதிவுக்குக் காரணமான அந்தப் பெண்களின் மனதிலும் அதே மாதிரிப் பதிவுகள் இருப்பதையும் காணலாம். ஆனால் அவை துலக்கமாக முதன்மைப்படுத்தப்படவில்லை.

இந்த இளைஞன் தன் பருவங்களில் கடந்துசெல்கின்ற, சந்திக்கின்ற குதூகலங்களை நமக்கும் நினைவூட்டுகிறான். முதற்பெண் பள்ளிப்பருவத்தில் கிராமத்தில், பிறகு வெளியூரில் அவனது கல்லூரி நாட்களில்-பருவத்தில். அடுத்த பெண் வேலை செய்கின்ற சந்தர்ப்பத்தில் - ஒரு நிகழ்வின் மூலமாக.

யமுனா ராஜேந்திரன் குறிப்பிடுகிற மாதிரி நம் வாழ்வில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பெண்கள் சந்திக்கிறார்கள். அவர்களின் பதிவுகள் சிலவேளைகளில் மனதில் அழுத்தமாகப் பதிந்துவிடுகின்றன என்று. இதேபோல பெண்களின் மனதில் ஆண்களின் பதிவுகளுமிருக்கும். இதை வெளிப்படுத்த நமது பண்பாடு எவ்வளவுக்கு இடமளிக்கும் என்றொரு கேள்வியுமுண்டு. சேரன் ' ஆட்டோ கிராப்'பில் பெண்ணை மையப்படுத்தியிருந்தால் இப்போது கிடைத்த வரவேற்புக்குப் பதில் கடும் கண்டனத்தைக்கூட பெறவேண்டியிருந்திருக்கும்.

கடந்த காலம் என்பது ஒரு வகையில் இனிய நினைவாகிறது. இன்னொருவகையில் தீராவலியாகிறது. ஆட்டோ கிராப் இரண்டினதும் கலவை. நம் வாழ்வும் இந்த இரண்டு கலவைகளோடுதானிருக்கிறது. அதனால்தான் பொதுவாக ஆட்டோ கிராப்பை பலருக்கும் பிடித்தது.

## ஆரதி

ஆட்டோ கிராப் சொல்கிற சேதி, நாங்கள் விரும்புகிற வாழ்வை வாழமுடியாத சமூக அமைப்பைக் காட்டுவது ஒன்று. அவன் விரும்புகிற பெண்களில் ஒருவரைத்தானும் அவன் திருமணம் முடிக்க முடியவில்லை. அந்தப்பெண்களுக்கும் அவன் கிடைக்கவில்லை. இந்த யதார்த்தத்தைப்படம் வடிவாகச் சொல்கிறது.

இரண்டாவது, கிராமத்தின் அவலம். பள்ளி தொடக்கம் கிராம மக்களின் வாழ்க்கைவரையில் இப்படிததானிருக்கிறது கிராமங்கள். நகரவாசிகளே, படித்தவர்களே, பொறுப்பானவர்களே, அதிகாரிகளே, அரசே என காட்சிப்படுத்திச்சாட்சியாக வைப்பது.

இவ்வாறிருக்கும் கிராமத்தை கொஞ்சமேனும் வேறுதளத்துக்கு நகர்த்தவேண்டுமென்ற எண்ணம் வராதது ஒரு குறைபாடுதான். இதில் அந்த எண்ணம் வராததுக்குக் காரணம் மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதியாக அந்த இளைஞன் இருப்பதுதான். அதனால்தான் அவன் முதல் சந்தித்த பெண்களில் ஒருவரைக்கூட திருமணம் முடிக்கமுடியாமல்போக, விரும்பாத ஒருவரைத் தேர்வு செய்யவேண்டியேற்படுகிறது. சமூகப் பங்களிப்போ பங்கேற்போ இல்லாத வாழ்க்கையில், இப்படி அவலப்படுவது தவிர்க்கமுடியாதது.

அதனால் நினைவுகளில் வருந்தவேண்டியேற்படுகிறது. விரும்பியதைச் செய்யமுடியாமலும் விருப்பமில்லாததற்குச் சம்மதிக்கவேண்டியிருப்பதும் அவலமென்றபோதும் அதை ஏற்கும் வழியின்மை. இன்றைய சராசரி இளைஞர்களின் பெண்களின் மனவுலகும் வாழ்க்கையும் எப்படி இரண்டாக - இடைவெளி நிரம்பியதாக இருக்கிறது என்பதை சேரன்காண்பிக்கிறார். இந்த இடைவெளியில் முரண்களும் சோகங்களும் விம்மல்களும் நிரம்பிக்கிடக்கின்றன.

பார்வையாளர்களிற் பெரும்பாலானவர்கள் மேல் மத்தியதர வர்க்க மனோபாவத்தையுடையவர்கள் என்பதால் தமது கதைகளையும் சோகத்தையும் சொல்லுமென 'ஆட்டோ கிராப்'பை அடையாளம் கண்டார்கள்; தம்மை அதில் அவர்கள் பார்த்தார்கள் என்று சொல்வது இங்கே மிகச்சரியாக இருக்கும்.

கிராமங்களைப் பற்றிய இனிய நினைவுகள் நெஞ்சுநிரம் பக்கிடந்தாலும் நகரத்துக்குப் போகும் யதார்த்தமும் நகரவாழ்க்கையின் அவசியமும் தவிர்க்க முடியாதுள்ளது. இது 'அழகி'யிலும் வருகிறது. ஏனைய படங்களிலும் கதைகளிலும் இந்தப் பிரச்சினையைப் பலரும் சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களை முன்னேற்றாமலிருக்கும்வரை நகரத்துக்குச் சனங்கள் பெயர்வதை யாராலும் தடுக்கமுடியாது. நகரம் எவ்வளவுதான் நெருக்கடிமிக்கதாக இருந்தாலும், இயந்திரமயமாகி இருந்தாலும், சீரழிந்திருந்தாலும் அங்கே வசதிகளைப்பெறக்கூடியதாயிருக்கிறது என்பது மெய்தானே!

சேரன் பாண்டவர் பூமியில் வலியுறுத்தியது. கிராமிய வாழ்வை, சுயபொருளாதாரத்தை, இயல்பை, இவற்றில் வெளிப்படும் பண்பாட்டை, அமைதிக்காகத் தவிக்கும் மனத்தை.

ஆனால் பொற்காலத்தில் வேறு சேதியிருந்தது. உண்மையில் 'ஆட்டோ கிராப்' பின் தொடக்கம் பொற்காலத்திலிருந்துதான். அல்லது பொற்காலத்தின் மறுபதிப்புத்தான் 'ஆட்டோ கிராப்' என்று கூடச்சொல்லலாம். மறுபதிப்பு வேறுவடிவத்தில் தரப்பட்டுள்ளது அவ்வளவுதான்.

பொற்காலத்தில் அவரவர் விரும்புகிற வாழ்க்கையை வாழமுடியாமல் இருக்கிறதே என்று சொல்கிறார் சேரன். தங்கள் மனதுக்குப் பிடித்தமானவர்களுடன் இணைந்து வாழ்வதற்கு எவருக்கும் கிடைக்கவில்லை. யாருடையதோ நினைவுடன்-பதிவுடன் யாருடனோ வாழவேண்டிய நிர்ப்பந்தம். இந்தச் சமூக நிர்ப்பந்தத்தின் பின்னால் இயங்குவதென்ன? யதார்த்தத்தைக் கணக்கிலெடுக்க மறுக்கும் மேல் நோக்கிய சாத்தியக் குறைவான ஆசைதானே! இந்த ஆசை எதன் பிறப்பு? மேல் மத்திய வர்க்கத்தின் வெளிப்பாடு. இயலாது என்று தெரிந்தும் அந்த மாயக்கனவில் மிதந்து முள்ளில்- யதார்த்தத்தில் விழுகின்ற உண்மை - கொடுமை.

பொற்காலத்தின் இன்னொரு வடிவமான 'ஆட்டோகிராப்' வெற்றிபெற்றது அது காட்டிய யதார்த்த உலகத்தில்தான். சேரன் தன்னுடைய முதற்படங்களில் கவனத்துக்குரிய விடயங்களைப் பேசியிருந்தாலும் அவற்றில் யதார்த்த மிகை அதிகமாக இருந்தது. ஆட்டோ கிராப்'பில் யதார்த்தமிகை குறைவு.

யமுனா ராஜேந்திரன் குறிப்பிடுகிற மாதிரி வன்முறையற்ற மனிதன்-கதாநாயகன் காட்டப்படுகிறான். அவன் எதிர்கொள்ளுகிற பிரச்சினைகளில் எல்லாம் அவற்றைத் தூசியாக சமாளித்து வெற்றிகொள்ளுவான் என்ற எதிர்பார்ப்பை - பொய்யை- கனவை சேரன் ஒதுக்கிவிடுகிறார். நாங்கள் சாதாரணமாக தினமும் சந்திக்கிற பிரச்சினைகளை சேரன் காட்டுகிறார். எங்கள் வாழ்வில் நடந்தவற்றை, தோற்றுப்போன தருணங்களை, தோற்கடிக்கப்பட்ட கடந்தகாலத்தை சேரன் முன்னிலைப் படுத்துகிறார். தமிழ்ச்சினிமாவின் கதாநாயகத்தனத்தை அவர் ஒதுக்கிவிட்டிருக்கிறார். உண்மையில் வேறொரு கதாநாயகப்பண்பை உருவாக்கிவிடுகிறார்.

இப்படியான புதிய பண்பிலான படங்கள் முன்னமும் வந்திருக்கின்றன. இப்போது தமிழ்ச் சினிமா ரசனையில் மாற்றம் நிகழத் தொடங்கியுள்ளது. வெறும்புனைவுகளைக் கொண்ட படங்களை மெல்ல மெல்ல சனங்கள் ஒதுக்கிவருகிறார்கள். பதிலாக வாழ்க்கையை அதன் உண்மைத்தன்மையுடன் காட்டும் படங்களையே விரும்புகிறார்கள்.

ஆட்டோகிராப்பில் இணைக்கப்பட்டுள்ள பாடல் காட்சிகள் கூட யதார்த்தத்தைப் பார்க்கலாம். ஊருக்கு வரும் இளைஞனின் மனதில் பழைய ஞாபகங்கள் மேலே கிளம்பிவருகின்றன. பழைய கிராமத்தையும் புதிய கிராமத்தையும் ஒப்பிடுகின்றது மனம் 'ஞாபகம் வருகிறதே' என்ற பாடல் பொருந்திவருகிறது. இதே



போல படத்தில் வருகிற காதற்பாடற் காட்சிகூட எம்.ஜி.ஆர் பாணியிலானதாகவே அமைக்கப்பட்டுள்ளது. கற்பனை செய்கிறமனதில் எம்.ஜி.ஆரின் காதற்காட்சிப் படிமம் நிரம்பியுள்ளது. என்பதை அது காட்டுகிறது.

இதேபோல 'ஒவ்வொரு பூக்களுமே' என்ற பாடல் பார்வைப் புலனிழந்தோரின் நிகழ்வில் அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காகப் பாடுவதாக இருக்கிறது. படத்தின் சேதியில் பாதி இங்கேயும் இருக்கிறது. நம்பிக்கை தளரும் தருணங்களைப் பெருமளவாகக்கொண்ட ஒருவனிடம் எல்லாப்பிரச்சினைகளையும் வெற்றிகரமாகக் கடந்துவிடக்கூடிய துணிச்சலும் உறுதியும் கொண்ட பெண்ணின் அறிமுகத்தை இந்தப்பாடல் நிகழ்வு தருகிறது. பின்பு அவன்தான் அவனை முன் நகர்த்துகிறான்.

இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கிற அநேகமான சினிமாக்களில் இதை அவதானிக்கலாம். பெண் ஆளுமையைப் புலப்படுத்துகிற பார்வை இது. M குமரன், 7/G ரெயின்போகாலனி. அது, நியூ, செல்லமே, தினந்தோறும் என்று பலபடங்களை இந்தவகையிற் சொல்லலாம்.

ஆட்டோ கிராப்பில் சாதாரணமானவர்களிடம் கேள்விக்கிடமான சில மையங்களுண்டு. தன்னுடைய தாய் இறந்து போயிருக்கும்போது அதை மறைத்துக்கொண்டு, எப்படி, அந்த இளைஞனுடைய புதிய தொழிலின் வெற்றிக்காக ஒரு பெண்ணால் சேர்ந்துழைக்கமுடியும் என்பது. வாழ்வில் எப்போதும் எடுக்கப்படும் தெரிவுகள் முக்கியமானவை. ஒருவர் செய்யும் தெரிவுதான் அவரை உயர்ந்த தளத்துக்குக்கொண்டு போகிறது. ஒரு சமூகம் மேற்கொள்கிற தெரிவுதான் அந்தச் சமூகத்தின் வாழ்வைத் தீர்மானிக்கிறது. இங்கே அந்தப்பெண்ணின் தெரிவு அவனுக்கு வரும் அரிய சந்தர்ப்பத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்துவது. அதில் அவருடைய தியாகமும் தூர நோக்குமிருக்கிறது. செய்யப்படும் தியாகம் எப்போதும் தூரநோக்குடையதாக இருந்தால் அது பெறுமதியாகும். இங்கே அவள் செய்வதும் இதைத்தான். அவளுடைய தாயின் மரணத்தை -அதன் கனதியை அவள் புரியாமலில்லை.

(32ஆம் பக்கம் பார்க்க)

# அனுசரணையாளரை குறை கூறி...?

சமாதான முயற்சிகளில் அனுசரணை யாளராகச் செயற்பட்டுவரும் நோர்வே மீது சிங்களப் பேரினவாதிகள் பெரும் காழ்ப்புணர்வு கொண்டிருப்பது வெளிப்படையான விடயம்தான். நோர்வேயை அனுசரணையாளராக அழைத்த சனாதிபதி சந்திரிகா அவருடன் இப்பொழுது கூட்டுச்சேர்ந்துள்ள ஜே.வி.பியினர் மற்றும் பேரினவாதிகள்அனைவரும் இவ்வாறான வெறுப் புணர்வைக்கொண்டிருப்பதுடன் அதனை அவர்கள் வெளிப்படுத்தியும்வருகின்றனர்.

நோர்வேயின் அனுசரணையைக் கோரி அதன் உதவியுடன் பேச்சுவார்த்தை முயற்சிகளைத்தொடக்கிவைத்த பெருமை தனக்கே உரியதென சனாதிபதி சந்திரிகா கூறி வருகின்றபோதிலும் பொதுசன ஐக்கிய முன்னணியின் முன்னைய ஆட்சிக்காலத்தின்



போது அனுசரணையாளராகச் செயற்பட்ட எரிக் சூல்கெய்மை அரங்கிலிருந்து அகற்ற முயன்றவர் சந்திரிகா.

பின்னர் ஐக்கிய தேசியமுன்னணி பதவியேற்றதும் நோர்வேயை மட்டுமல்ல சமாதான முயற்சிகளுக்கும் பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. ஆயினும் சமாதான முயற்சிகள் ஓரளவு தொடரவேசெய்தன.

இதேபோல ஜே.வி.பியானது நோர்வே அனுசரணையாளர் நிலையிலிருந்து மத்தியஸ்தர் நிலைக்குச்சென்றுவிட்டதாகக் குற்றம் சாட்டியது இப்பொழுதும்கூட ஐக்கியதேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் நோர்வே மத்தியஸ்தராகச் செயற்பட்டதாகவும் இப் பொழுதுதான் அனுசரணையாளராகச் செயற்படுவதாகவும் கூறுகிறது. இதன் அர்த்தம் ஆட்சியாளர்மீது நோர்வே அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக அது கருதியதாகும்.அதேபோல பேரினவாத அமைப்புகள் நோர்வே தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்தும் நோர்வேக் கொடியை எரித்தும் சமாதான முயற்சிகளில் நோர்வே ஈடுபட்டுவருகின்றமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தனர். இப்பொழுதும்கூட ஆட்சியிலிருக்கின்றபடியால் ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் வெளிப்படையாக நோர்வேக்கு எதிர்ப்புத்தெரிவிக்காத நிலையில் சிங்கள அமைப்புகள் அப்பணியைத் தொடரவே செய்கின்றன.

நோர்வே தனது சொந்த இலாபத் திற்காக-குறிப்பாக மன்னாரிலிருக்கும் பெற் றோலிய வளத்துக்காக இந்தச் சமாதான முயற்சிகளில் அக்கறைகாட்டுவதாக அவை குற்றம் சாட்டுகின்றன.

இவ்வாரம் நோர்வேயை அனுசரணை யாளர் நிலையிலிருந்து நீக்கவேண்டுமென நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமய ஒரு பிரேரணையைக் கொண்டு வந்ததும் இதன் அடிப்படையிலேயாகும்.

எனவே சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி, சிங்களப் பேரினவாத அமைப்புக் கள் என்பவற்றை எடுத்துக்கொண்டால் அவை நோர்வேக்கு எதிரான போக்கையே கொண்டிருப் பதைக் காணலாம். ஆனால் அதனை வெளிப் படுத்தும் விதத்தில்தான் மாறுபாடு உள்ளது.

ஆட்சியிலிருக்கும் சனாதிபதி சந்திரிகா நோர்வே அனுசரணையாளர்களை சந்திக்காது விடுதல் மூலம் தனது அதிருப்தியை வெளியிட்டால் ஏனையதரப்புகள் வெளிப்படை யாகவே தம் உள்ளக்கிடக்கையை வெளியிட்டுவருகின்றன. ஆனால் நோர்வேயின் அனுசரணையை பெறாது விடுதல் என்பது சமாதான முயற்சிகளுடன் பிணைந்துள்ள வெளிநாட்டு நிதி உதவிக்குக் கேடாகிவிடும் என்பதே அர சாங்கத்தை அந்த நிலைக் குச்செல்லவிடாது தடுத்துவைத்திருக் கிறது. அண்மையில் கூட நோர்வே புலிகள் மீது எவ்வித அழுத் தத்தையும் பிரயோ



கிக்காது தனது அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிப்பதாக பதவிவிலகும் அமெரிக்காவின் பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜிடம் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க குறைப் பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஆனால், இப்பொழுது இந்தியாவின் மத்தியஸ்தத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவும் சரி ஜே.வி.பியினரும் சரி, சிங்கள இன வாதிகளும் சரி விரும்புவதாகவே தெரிகிறது. இதுவும் கூட புலிகளுக்கும்- இந்தியாவிற்கும் இடையில் முரண்பாடுகளை வளர்த்து இந்தியா மூலம் புலிகளை அழித்துவிடலாம் என்ற கபடநோக்கம் கொண்ட ஒரு நடவடிக்கையே என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

அதாவது நோர்வேயென்றாலென்ன இந்தியாவென்றாலென்ன அமெரிக்காவாக விருந்தாலென்ன தமது நலனுக்காக அவற் றைப்பயன்படுத்த முடியுமாயின் அவற்றைப் போற்றுவதும் அல்லாவிடின் தூற்றுவதுமே சிங்கள இனவாதிகள் கடைப்பிடித்துவரும் கொள்கையாகும்.

உண்மையிலேயே இலங்கையில் நிலவும் உண்மையான சிக்கலை/ பிரச்சினையைப் புரிந்துகொண்டு அதனைத் தீர்க்க நேர்மையான வழியில் முனையும் எவரையும் பேரினவாதிகள் எதிர்க்கவே செய்வர் என்பது நோர்வேக்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் ஏற்கனவே கிடைத்த அனுபவமாகும்.

உண்மையில் இனப்பிரச்சினையை நேர்மையான வழியில் சிங்கள ஆட்சியாளர்கள் தீர்க்க முன்வருவார்களாயின் அனுசரணையாளர் கள் தேவைப்படாது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டதாகத்தெரியவில்லை. அனுசரணையாளராக வருவோர் மீது ஆத்திரம் கொள்வதைவிட பிரச்சினையைத்தீர்க்க உளமார விரும்புவார்களாயின் தீர்வு ஏற்படுவது சிரமமாக இராது.

இன்று இலங்கையில் குறிப்பாக தென்பகுதியில் காணப்படும் இன்றைய நெருக்கடியான சூழ்நிலைக்கு சமாதானம் நிலவாமையே காரணம் என பலதரப்பாலும் எடுத்துக்கூறப்பட்டுவருகிறது. ஆனால் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சி ஆட்சியாளரிடம் காணப்படவில்லை என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

**வேலவன**

## நேர்நோக்கு

# படையினரின் சதி முயற்சிகளை முறியடிக்கும் மக்கள்

யாழ்- வல்வெட்டித் துறை சிதம்பராக் கல்லூரிக்கு முன்பாக உள்ள விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் மீது தம்மை உரு மறைப்பு செய்து வந்தவர்கள் தாக்குதல் நடத்தி சென்றதையடுத்து மக்கள் பெருமளவு கொதிப் படைந்துள்ளனர்.



தமது கடும் எதிர்ப்பைக் காட்டும்முகமாக யாழ் குடாநாடு தழுவிய ரீதியில் ஹர்த்தால் போராட் டம் நடத்தியவர்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தினர் இதில் ஒருவர் காயமடைந்தார்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் ஐம்பதாவது பிறந்த தினமும் மாவீரர் நாளும் நெருங்கி வருகின்ற நிலையில் தமிழீழ மக்கள் இந்த நிகழ்வுகளில் பெருமளவு எழுச்சி கொண்டிருக்கும் நிலையிலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் படையினர் பெரும் பயப்பீதியுடன் தமது முகாம்களிற்குள் முடங்கிக்கிடக்கும் ஒரு அவல நிலையையே படையினர் அனுபவித்தனர்.

ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் சமாதான வழியில் பற்றுறுதி கொண்ட புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி மக்கள் மத்தியில் பெருமளவு செல்வாக்கை அதிகரித்து வருகின்ற நிலைமையில் படையினர் தமது கூலிப்படைகள் மூலமாக இச் சதி நடவடிக்கையை ஆரம்பித் துள்ளனர்.

இத்தகைய சதி நடவடிக்கைகளை கிழக்குமாகாணத்திலேயே பெருமளவு அரங் கேற்றி வந்த படையினர், தற்போது யாழ்ப்பாணத்தின் பக்கம் தமது கவனத்தை திருப்பி யுள்ளனர் போலத்தோன்றுகிறது.

அத்தோடு இச் சதி நடவடிக்கையை படைத்தரப்பு முழு ஆசீர்வாதத்தோடு அரங்கேற்றி விட்டு இப்பழியை புலிகள் இயக்கம் மீது திருப்பிவிட மேற்கொண்ட சதி நடவடிக்கையில் தோற்றுப்போய்விட்டது.

படையினர் இச்சதிநடவடிக்கை மூலம் புலிகள் மீது திருப்பிவிட முயன்ற மக்களின் கோபம் இறுதியில் படையினர் மீதே திரும்பி யதை யாழ்ப்பாணத்தில் மக்கள் மேற்கொண்ட போராட்டம் உணர்த்தியது.

புலிகள் இயக்கத்தையும் தமிழ்மக் களையும் பிரித்து இந்தப்போராட்டத்தை அந் நியப்படுத்துவதற்காக அரச தரப்பின் ஆலோ சனையோடு படையினரின் பல்வேறு படைப் பிரிவுகளும் காலாதிகாலமாக மேற்கொள்ளும் எல்லாச் சதி நடவடிக்கைகளையும் மக்களின் ஆதரவோடு புலிகள் இயக்கம் வெற்றிகரமாக முறியடித்துக்கொண்டே வருகிறது.

ஆயினும் படைத்தரப்பு தனது உத்தி களை மாற்றி மாற்றி இச் சதி நடவடிக்கையை அரங்கேற்றிவிடத்துடிப்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதற்காக இச்சமாதான காலத்தில் பொதுவாகக் கடைப்பிடிக்கவேண்டிய பொறுப் புணர்வுகளையும் மீறி அரசு தனது ஊடக வளங்கள் முதல் அனைத்து வளங்களையும் பிரயோகித்துவருகிறது.

இந்த நிலையில் யாழ் குடாநாட்டு மக்கள் மட்டுமன்றி,எல்லா தமிழ்மக்களும் இந்த விடயத்தில் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டி யது மிகவும் அவசியம்.

அதிலும் குறிப்பாகப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் பிரச் சினையை இன்று சர்வதேசத்தின் மத்தியில் கொண்டுவந்து காலாதி காலமாக சிங்கள தேசத்தால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதையும் இப்பொழுதும் ஏமாற்ற முயல்வதையும் பகிரப்படுத்திவருகின்ற மிக முக்கிய வரலாற்றுக்காலமாகும்.

புலிகள் இய்க்கம் சமாதான முயற்சி யில் அடுத்த கட்டமாக அரசிடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என் பதில் உறுதியாக இருப்பதால் அரசு இந்த திட்டவரைவின்அடிப்படையில் பேச முன்வராத அதேவேளை, எப்படியாவது இந்த சர்வதேச மட்டத்தில் முக்கிய கவனத்தையீர்த்திருக்கும் இவ் விவகாரத்தை குழப்பியடிக்கும் ஒரு முயற்சியாகவும் இத்தகைய சதி நடவடிக்கை களை மேற்கொள்ள முயலுகின்றன.

ஆயினும் படையினரின் இச் சதி நடவடிக்கைகளை மக்கள் புரிந்து கொண்டதோடு,தேசியத்தலைவரின் ஐம்பதாவது பிறந்ததினத்தையும், மாவீரர் நாளையும் மிகச் சிறப்பாக முன்னெடுக்க திடசங் கற்பம் பூண்டு நிற்பதை அவ தானிக்கமுடிகிறது.



படையினரின் இச்சதி நடவடிக்கை யானது அரசு இன்று எதிர்கொள்ளும் நெருக் கடியையும் சவாலையும் வெளிக்காட்டுகிறது.

அத்தோடு தமிழ்மக்கள் இனியும் மிக விழிப்பாக இருக்கவேண்டியது அவசியமாகிறது.

படையினரும் படையினரின் கைக் கூலிகளாகவும் செயற்படும் தமிழர் விரோத சக்திகளின் எல்லா முயற்சிகளையும் முறி யடிக்க வேண்டியது அவசியமாகிறது.

**வேழினி**

புங்குடுதீவு சிறிலங்கா படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டபின் அகப்பட்ட மக்கள் பட்டதுயர் என்ன என்பதை அகப்பட்டு துயரனுபவித்த கவிஞர் மு.பொன்னம்பலம் கூறுகிறார். யாழ்ப்பாணத்தோடு தம்மைப் பிணைத்திருந்ததொப்புள் கொடி அறுபட்டதான நிலையில் தீவுப்பகுதி கிடந்தது.

விடுதலைப்புலிகள் தீவுப்பகுதியிலிருந்து தமது நிர்வாகத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு சென்ற பின்னர், மாற்றான் கைக்குள் சிக்கிய அநாதைகளின் நிலையில் தீவுப்பகுதி மக்கள்!

யாழ்ப்பாணத்திற்கு இனிமேல் அவர்களால் செல்லமுடியாதா? அவர்களது உற்றார் உறவினரைக் காணமுடியாதா?

இனி எப்போது அவர்களைக் காண்பது?

தீவுக்குள் அடைபட்டுக் கிடந்த சனங்களின் மனங்களில் இக் கேள்விகள் அடிக்கடி எழுந்தன. அதேநேரத்தில் இராணுவம் வரப்போவது பற்றித்தெரியாது, ஏற்கனவே யாழ்ப்பாணம் சென்றிருந்த சிலர் தமது மனைவி மக்கள் புங்குடுதீவிலும், தாம் யாழ்ப்பாணத்திலுமாக பிரிந்துபோன நிலை இன்னும் பரிதாபகரமானது. யாழ்ப்பாணத்திலிருந்து 20மைல்கள் தொலைவிலிருந்த புங்குடுதீவிற்குப் போய் தமது மனைவி மக்களை காணமுடியாதநிலையில் வெறிபிடித்தவர்களாய் அவர்கள் திரிந்திருக்கலாம். அந்நிலையில் அவர்கள் போன்றவர்களுக்கு யாழ்ப்பாணம் ஒரு சிறையாகவே மாறியிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் சிக்கிக்கொண்டவர்கள், புங்குடுதீவில் தம்மை விட்டுப் பிரிந்துபோய் இருக்கும் மனைவி, மக்கள் மேல் இருந்த பற்றின் காரணமாக சிறைக்குள் அகப்பட்டவராய்த் தவித்தனர். அவ்வாறே யாழ்ப்பாணத்தில் தமது உற்றார் உறவினர்களை பிள்ளை குட்டிகளை விட்டுவிட்டு புங்குடுதீவில் சிக்கிக்கொண்டவர்கள் தாம் கொடிய சிறைக்குள் தள்ளப்பட்டவர்களாகவே தவித்தனர்.

எல்லாம் பற்றின் காரணமாக ஏற்பட்ட துன்பமும் துக்கமும்! எந்தவித பற்றும் பந்தமுமில்லாமல் கிடந்த 'கிழடுகட்டைகள்' தான் கைதுசெய்யப்பட்ட தீவுப்பகுதியில் சந்தோச சித்தர்களாக இருந்திருக்க வேண்டும். 'தம்பி நான் செத்தா என்னைக்கொண்டுபோய் எரிச்சுப்போடு' என்று அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு சொன்ன ஒரு வயோதிபரின் முகம் அவன் முன் நிழலாடிற்று.



# 24 ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

பற்றோ, பற்றின்மையோ கைதுசெய்யப்பட்ட கிராமத்தில் மக்கள் நெருஞ்சிமுள் காட்டில் நடப்பது போலவே நடமாடினர். இராணுவத்தின் தலையீடே இதற்குக் காரணம் என்பது சிறுபிள்ளைகளும் அறிந்தவிடயம். நள்ளிரவில் ஊரதீவில் நடந்த அசம்பாவிதத்தின் பின்னர் மக்கள் சுதந்திரமாக நடமாட அஞ்சினர். ஆனால் இதைச் சாட்டாக வைத்து தமிழ் இயக்கமொன்று இராணுவத்தை புங்குடுதீவில் இருந்து அகற்றி நிர்வாகத்தை தமது கைக்குள் எடுப்பதற்கு முயன்றனர். அதில் பின்னர் வெற்றியும் பெற்றனர்.

இராணுவம் புங்குடுதீவில் இருந்து அகன்றதில் மக்களுக்கு ஒரு வகையில் நிம்மதியே.

இப்பொழுது இராணுவம் வேலணைப் பகுதியிலும், ஊர்காவற்றுறையிலுமே நடமாடியது. நேவிக்காரர்கள் நயினாதீவுக்குப் போகும் புங்குடுதீவிலுள்ள குறிகாட்டுவான் துறையிலும் நயினாதீவிலும் இருந்தனர். காரைநகர் நேவிக்காரரின் மத்திய இயங்கு தளமாக இருந்தது.

புங்குடுதீவுக்குள் இராணுவம் புகுந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. ஆயினும் இன்னும் மக்கள் தமது பசியிலிருந்தும் தேவைகளிலிருந்தும் விடுவிக்கப்படவில்லை என்பது அவர்கள் முகங்களிலும் வீடுகளில் இருந்து கொட்டாவி விட்டதிலும் தெரிந்தது.

'விடுவிக்கப்பட்ட' தீவுப்பகுதி மக்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றைக் களைவதற்காக மந்திரிமார்களும் அவர்களோடு சேர்ந்து உயர் அதிகாரிகளும் வரப்போவதாக கதைகள் அடிபட்டன. அப்படி ஒரு சிலர் கெலிகள் வட்டமிட, பாதுகாப்புகள் உயர்த்தப்பட்டு இராணுவக்காரர்கள் விறைத்து நிற்க வந்துபோயினர்.

கெலிகள் வட்டமிடுவது, எஞ்சியிருந்த சிறுவர்களின் கண்களுக்கு விருந்தளிப்பதாய் இருந்தது. வேலணை மகாவித்தியாலயத்தில் மந்திரிமார்களின் வருகையும் கூட்டங்களும் நிகழ்ந்தன.

இவ்வேளைகளில் தீவுப்பகுதியில் இருந்த அனைத்துச் மக்களும் ஏற்றி இறக்கப்பட்டனர். ஆட்களைத் திரட்டும் பொறுப்பு ஒவ்வொரு தீவிலும் உள்ள பிரஜைகள் குழுத்தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அவர்களின் தலைமையில் ஆடு, மாடுகள் போல் அனைத்து தீவுச் மக்களும் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். தீவுப்பகுதி மக்களின பற்றாக்குறைகளை மந்திரிமாருக்கு எடுத்துச்சொல்லும் சந்தர்ப்பங்கள் அவனுக்கும் கொடுக்கப்பட்டது.

மந்திரிமார்கள் ஏதேதோவெல்லாம் செய்து தருவதாக கயிறுகள் திரித்தனர்.

ஆயினும் என்ன, நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மருந்துகள் எதுவும் இல்லாதிருந்த மக்களுக்கு வைத்தியம் செய்யக்கூடிய ஒழுங்கான வைத்தியர் ஒருவரையே அவர்களால் நியமிக்கமுடியவில்லை.

மந்திரிமார் வந்து போயினர். ஆனால் நிலைமைகள் சீர்பெறவில்லை. இயக்கத்தினரால் நடத்தப்பட்ட மக்கள் கடையோ, தனிநபர் கடைகளோ இன்னும் முளைக்கவில்லை.

ஒரு நாள் அவன் குளிக்கும்போது மேலுக்குப்போட சோப் இல்லாமல் இருந்தான். ஒரு மைல் தூரத்திற்கப்பால் இருந்த அவன் நண்பர் ஒருவரிடம் சோப் இருப்பதாக கேள்விப்பட்டு அவரிடம் சென்றான். அவரோ மிகுந்த மனவருத்தத்திற்கு மத்தியில் அவர் தேய்த்து எஞ்சியிருந்த மீன் செதிள் போன்ற சோப் துண்டைக் கொடுத்தார். திருப்பித் தருமாறு வேண்டுதலுடன்.

அவன் அந்த சோப்பைக் கொண்டு வந்து கிணற்றுக் கட்டில் வைத்துவிட்டு, தண்ணீரை அள்ளக் குனிந்தபோது, எங்கிருந்தோ பறந்து வந்தகாகம் அவனது சோப் துண்டைக் காவிச் சென்றது. அவன் சூய்.....சூய் என்று கத்தியவாறே அதன் பின்னால் ஓடினான். காகமோ சோப்பைக் காலால் மிதித்தபடி தென்னை மர ஓலையில் இருந்து ஊஞ்சலாடியவாறு அதைக் கொத்தியபடி அவனைப் பார்த்து நகைப்பது போல்பட்டது.

காகத்திடமிருந்து வடையை வீழ்த்திய முற்கால நரியின் உபாயம் எதுவும் அவனுக்குக் கைகொடுப்பதாய் இல்லை.

அன்றைய நாளும் வழமைபோல் சோப்பில்லாத குளிப்பாக முடிந்தது.

தருவன்




# மனித இனக் குழு

தமிழர்களின் மனித இனக் குழு அவுஸ்திரலொயிட் திராவிடர்களின் மனித இனக்குழு அவுஸ்திரலொயிட் இலங்கைத்தீவின் முது மனிதனின் இனக்குழு அவுஸ்திரலொயிட்.

இலங்கைத்தீவின் முது மனிதன் யார் என்பது தொடர்பாக அறிவியல் ரீதியான ஆய்வு விபரங்களை தருவதற்காக நாம் உலக மனிதர் மற்றும் திராவிடர்கள் எந்த மனித இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதை இன்று தருகிறோம்.

இன்று உலகம் முழுவதும் வாழ்கின்ற முழுமனிதர்களும் உடலமைப்பு - வன்கூட்டுத் தொகுதி அமைப்பு, இரத்தப்பிரிவு, பாரம்பரிய பழக்க வழக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மானுடவியலில் மனிதர்கள் இனக்குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனர், இந்த பாகு பாட்டில் - நாம் பொதுவாக அறியும் மொழியோ, இனமோ அடங்குவதில்லை.

இந்தவகையில் உடலியல் கூறாய்,

தோல், தலைமயிர், கண்களின் நிறம்,

தலைமயிர், மேல் இமை, மூக்கு, உதடுகள் ஆகியவற்றின் வடிவமைப்பு.

முகம் - தலை ஆகியவற்றின் அமைப்பு.

உடல் நீளம், தகவல் பொருத்தம்.

இரத்தப் பிரிவுக் குணங்கள் - வழியாக உடல் கூற்றியல் மனிதக்குழுக்கள் வகுக்கப்பட்டுள்ளன, இன்று உலகில் நீக்ரொயிட் இனக்குழு காக்கேசிய இனக்குழு அல்லது காக்கஸொயிட் இனக்குழு மொங்கொலொஸ்யிட் இனக்குழு என்பவை அவை.

இவற்றில் காக்கேசியர்கள் எனப்படுவோர் வெள்ளையர்கள், ஆரியர்கள், ஐரோப்பியர்கள்.

மொங்கொலொஸ்ட்கள் - சீனர், ஜப்பானியர் மற்றும் தென் கிழக்கு - கிழக்கு ஆசியாவில் இன்று பெரும் பான்மையாக வாழ்பவர்கள்.

நமக்குத் தேவையான இனக்குழு - நீக்ரொயிட் இந்த இனக்குழுவின் பொது உடலமைப்பைப் பார்ப்போம்,

தோல் - மயிர் - கண்கள் - கறுப்பானவை,

தலைமுடி சுருண்டு அல்லது அலையலையாக இருக்கும்.

முகம் மற்றும் உடலில் அடர்த்தியான அல்லது அடர்த்தியற்றதாக மயிர் இருக்கும்.

முகம் தாடைப்பகுதியில் அகலமாக இருக்கும். மூக்கு கூரானதாக, நீண்ட தாக இல்லாமல் சப்பையாக இருக்கும். மூக்கு மடல்கள் அகலமானதாக இருக்கும்.

மேல் தாடை தூக்கலாக இருக்கும்.

உதடுகள் தடிப்பாக - மேல் உதடு முன் தள்ளி இருக்கும்.

வாய்பிளவு பெருத்து அகலமாக இருக்கும்.

உடலைவிட கால்களின் நீளம் அதிகமானதாக இருக்கும். இதுவே நீக்ரொயிட் இனக்குழு உடலமைப்பு.

ஆபிரிக்காவில் வாழும் - கறுப்பின மக்கள், இந்திய உபகணடத்திராவிடர்கள் ஓசினியா நாடுகளான பாப்புவா நியூசின், அவுஸ்திரேலியா.

இந்தோனிசியத்தீவுகளில் வாழும் பழங்குடிகள் என்போர் நீக்ரொயிட் இனக்குழுவினர், ஆவர்.

கண்டப் பிரிவில் ஆபிரிக்கா - அவுஸ்ரேலியா - இந்தியா எல்லாம் ஒன்றாக இருந்து பிரிந்ததால் இந்தத் தொடர்பு வந்ததாகவும் கூறப்படுகின்றது. தேசப்படத்தை பாருங்கள் ஓரளவு இக்கருத்து சரியானதாகத் தோன்றும். ஆயினும் இதுதான் சரி என்பது உறுதிப்படவில்லை. ஆனால் இனக்குழு ரீதியாக அவுஸ்திரேலிய, பாப்புவா நியூசினி தென் பிலிப்பைன்ஸ், சுதேச குடியினருக்கும் - திராவிடர்களுக்கும் இடையே மிக நெருங்கிய இனக்குழு தொடர்பு உள்ளது. அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்பட்டது, இதனால் திராவிடர் அவுஸ்திரேலியர் சுதேச குடிகள் - பாப்புவா சுதேச குடிகள் எல்லாவற்றையும் சேர்த்து அவுஸ்திரலொயிட் என்ற உப இனக்குழுப் பெயர் உருவானது, நீக்ரொயிட் இனக்குழுமத்தின் ஒரு பகுதியாக அவுஸ்திரலொயிட் இனக்குழு உருவானது. ஆகவே திராவிடர்கள் அவுஸ்திரலொயிட் மனித இனக்குழுவாக பகுக்கப்பட்டுள்ளனர்.

பெருங்கற்கால பண்பாடு நிலவிய - தமிழகத்தின் திருநெல்வேலி ஆதிச்ச நல்லூரில் தாழிகளில் எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள், அவுஸ்திரலொயிட் இனக்குழுவினது என உறுதிசெய்யப்பட்டுவிட்டது. முதல் நகரை நாகரிகம் நிலவிய சிந்து வெளியில் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் அவுஸ்திரலொயிட் இனக்குழுவினது என நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இன்று உலகம் முழுவதும் வாழும் தூய திராவிடர்கள் - அவுஸ்திரலொயிட் இனக்குழுவினர் - ஆவர்.

☻ ☻ ☻ ☻

திராவிடர்களின் மூதாதையர்கள் அவுஸ்திரலொயிட்கள் - இந்திய உபகண்டத்தின் வடமுனை முதல் இலங்கைத்தீவின் தென் முனைவரை பூர்வமாக தொன்று தொட்டு வாழ்ந்த அவுஸ்திரலொயிட் இனக்குழுக்களே மொழியும் - பண்பாடும் உருப்பெற்றபோது திராவிடர் என வகுக்கப்பட்டனர். தொல்லியல் மூலமும் - அறிவியல் மூலமும் திராவிடரின் மூதாதையர்கள் அவுஸ்திரலொயிட் என்ற இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. தென் ஆசியாவில் எடுக்கப்பட்ட முது மனித எலும்புக்கூடுகள் இலங்கைத் தீவின் தெற்கு சிங்கள மயமான இரத்தினபுரியில் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட இரு எலும்புக்கூடுகளில் ஒன்று ஆணினுடையது - அதற்கு இடப்பட்ட பெயர் பலாங்கொடை மனிதன், இது 37 ஆயிரம் ஆண்டுகள் வரை தொன்மையானதாகக் காலக்கணிப்பீடு செய்யப்பட்ட இந்த எலும்புக்கூடுகள் அவுஸ்திரலொயிட் இனக்குழுவுடையது. ஆகவே திரா விடர்களின் முது மனிதர்கள் இலங்கைத்தீவின் முழுமையிலும் வாழ்ந்திருக்கிறார்கள்.

அவுஸ்திரேலியா - தென் ஆசியா இலங்கைத்தீவின் தெற்கே தென்துருவம்வரை பரந்துள்ள இந்து சமுத்திரத்தின் கிழக்கே அவுஸ்திரேலியா என்ற பெருந்தீவு கண்டம் என்ற பெயரில் 5ஆவது கண்டமாக உள்ளது. அவுஸ்திரேலியாவுக்கும் - நமக்கும் என்ன தொடர்பு உள்ளது. அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமானவர்கள் அதன் சுதேச மக்கள். 500இற்கு சுதேச மக்கள் குழு அவுஸ்திரேலியாவில் இருந்துள்ளது. இந்த சுதேச மக்கள் அவுஸ்திரலொயிட் இனக்குழுவினர் ஆவர். ஆபிரிக்கா முதல் அவுஸ்திரேலியாவரை புவி மத்திய கோட்டின் தெற்கே 45 பாகை வரையிலான அகலக் கோட்டுப் பகுதிகளில் இவர்கள் வாழ்ந்தனர். இப்போது அவுஸ்திரேலியா வெள்ளை இன மக்களின் நாடாக உள்ளது. கி.பி.1606 முதல் ஐரோப்பியர்களின் கடலோடிப் பயணங்களின் வழியாக அவுஸ்திரேலியா அவர்களின் கண்ணுக்கு சிக்கியது. வளம்மிகு அவுஸ்திரேலியா, நியூசிலாந்துத்தீவுகள் - ஐரோப்பியர்களின் ஆக்கிரமிப்புக்குட்பட்டு அவர் [illegible]ரின் குடியேற்றங்களாக மாறின. பி[illegible]டனின் ஊர்ப்பெயர்களில் அவுஸ்திரேலியாவில் வெள்ளையின குடியேற்றங்கள் நடந்தன. கடலோடியான பிரிட்டனின் கப்டன் ஜேம்ஸ் குக் அவுஸ்திரேலியப் பழங்குடி மக்களை அடிமைகொண்டு வெள்ளையர் குடியேற்றங்கள் அமைக்க முக்கிய காரணமாக இருந்தவர். அவுஸ்திரேலியாவின் சனத்தொகையில் ஒரு வீதமாக இன்று அந்த மண்ணின் சுதேசிகள் எதுவித அரசியல் உரிமைகளுமில்லாமல் வாழ்கின்றனர். கடைசி ஒலிம்பிக்கில் விளையாடி அவுஸ்திரேலியாவுக்கு பதக்கங்களை இவர்கள் வென்று வழங்கியுள்ளனர். ஆயினும் அவர்களுக்கு தமது தாயக மண்ணில் உரிமை இல்லை.

உரிமை இழந்த இந்த அவுஸ்திரேலிய சுதேசிகள் அருந்தா முருகின் ஆகிய குழுக்கள் முக்கியமானவை, சரி இந்த அவுஸ்திரேலிய சுதேசிகளுக்கும் திராவிடர்களுக்கும் இடையேயான தொடர்பு என்ன. அறிவியல் ரீதியான தொடர்பு என்ன. தொல்லியல் ஆராய்வுகளின் படி திராவிடர்களின் தாய் நிலமான தென் ஆசியாவிலிருந்து 40 ஆயிரம் ஆண்டுகளின் முன் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து சென்றவர்களே இந்த சுதேசிகள்.

இலங்கையில் எடுக்கப்பட்ட தென்னாசியாவின் முது மனித எலும்புக்கூடுகளான அவுஸ்திரலொயிட்கள் 37ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானவை அவுஸ்திரேலியாவிலிருந்து தென்கிழக்காசியா வழியாக இந்தியா ஊடாக இலங்கை வரை பரவியவர்கள் அவுஸ்திரலொயிட் எனக் கூறினாலும், பெரும்பாலான தொல்லியலாளர்கள் - தென்னாசியாவிலிருந்து சென்றவர்களே அவுஸ்திரேலிய சுதேசிகள் எனக் கூறப்படுகின்றது. அவர்களின் பழக்கங்கள், வழிபாட்டு முறைகள், சொற்கள் என்பவை திராவிடரை ஒத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. முது நிலையில் வரலாற்றுக் காலம் தொடங்கமுன் வேட்டையில் சுதேசிகள் அடுத்த கட்டம் நோக்கி முன்னேறாமல் போனதால் இன்று உரிமைகளிழந்து ஒதுக்கப்பட்டவர்களாக வாழ்கின்றார்கள்.

அவுஸ்திரேலிய சுதேசிகள் எமது தாயகப் பகுதியிலிருந்து சென்ற முது மனிதர்கள் என்பதனூடாக இந்த தாயகத்தில் எந்த அளவில் ஆழ உள்ளது என்பதை உறுதிசெய்ய முடியும்.

குரலோன்


தங்கத்தலைவா வாழி! வாழி!
முடியுமென நினைத்ததையே
முடித்து வைக்கப் புறப்பட்டு
புலிப்படையின் தலைமைதனைப்
புனிதமுடன் வழிநடத்தி
புவி முழுதும் புகழ் பரப்ப
புத்தியினைப் பலப்படுத்தி
பாருலகில் புகழ் பதித்த
பாயும் புலியே வாழிய நீ !
முல்லை மாவட்ட கூட்டுறவாளர்கள்
(சி-10778)

# பொன் அகவை காணும் தேசியத்தலைவரே வாழி! வாழி!

### மண்விதி மாற்றி நாளை மணிமுடி தரிப்பாய் வாழி!

அழகினிற்கு ஓவிய நிலவு,
வையகம் முற்றாள வல்லான்!
உளத்தினிற் பரிவு, வான
உச்சியை உரசும் நெடியோன்
பழகிடத் தோன்றும், தலைவன்
தாயகம் நோக்கும் எழுவான்!
நிழலினில் நிற்கும் தமிழர்
நினைத்தவா றடைவான் வெற்றி!

விழிகள் இரண்டிலும் மாயிரம்
ஆற்றல்கள் குவியும், அண்ணன்
மொழியும் போதினில் உள்ளம்
காதலால் உருகும், எம்மைப்
புலிகளாய் ஆக்கிய தலைவனால்
பூமியே விடியும், அடடா,
எலிகளாய் எம்மில் ஏறிட
இங்கினி எவரால் முடியும்?

அமைதியை ஆக்கி உலகின்
ஆசிகள் பெற்றாய் கோடி
சமாதானக் காற்றெம் மேனி
தழுவிடச் செய்தாய் வாழி.
இமையுள் ஒளியே, தமிழர்
இருள்களைத் திட்டாய் சோதி
அமைகதாய் நாடே, தர்மம்
ஆசையோ டளிக்கும் நீதி!

வெண்புறா காலம் தன்னை
விரும்பியே அழைத்தான், யாரும்
புண்படா வாறே களத்திலும்
பொறுமைகள் காத்தான்; இன்றோ
எண்டிசை உலகும் மெச்சும்
பண்பாளன் தலைவன் ஈழ
மண்விதி மாற்றி நாளை
மணிமுடி தரிப்பான் வாழி

- வேலணையூர் சுரேஸ்.

### தலைவா நீ என்றும் வாழ்வாய்

ஆயிரம் மகிழ்வென காற்று வீசிடும்
தென்றல் நின்று செய்தி தந்திடும்
புயலாய் அடிக்கும் சுவாசம் நெஞ்சில்
தலைவன் சிறப்பை எடுத்து விளக்கிடும்!
தாயாய் இருந்திடும் வலிமை கொண்டிடும்
அகிலமே எண்ணி தலைவனை வாழ்த்திடும்
புதுமை புதிராய் பிறப்பாய் வந்த
அண்ணா உனக்கு வாழ்த்து நிறையும்!
பாய்ந்திடும் வெறிப்படை மனதில்
தீயென வானவன் எங்கள்
உயிரதை காத்திடும் காப்பரண் எங்கும்
இன்று பிறந்த நாள் செய்தி துலங்கிடும்!
வாழ்வு பொங்கிடும் வரலாற்றின் சிறப்பு
உலக வயதை ஒட்டி இருந்திடும் - தீர
உழைப்பு கண்டு உனை உலகு நோக்கிடும்
அழியா நிலவாய் என்றும் வாழ்க பல்லாண்டு!

ம.அருள் யோண்சன்

### கடந்து பல ஐம்பதுகள் களித்தே வாழி!

பிரபாகரன் வாழுங் காலந்தன்னில்
பிறந்தமையும் வாழ்வதுமே பெரும்பே றென்போர்
உரியவர்நாம் ஆதியிருந் தீழத் துக்காம்
உண்மைஅறிந்தோம் பிரபா தன்னால்என்போர்,
ஒருகுடைக்கீழ்த் தமிழரினைத் திரட்டி வைத்த
உத்தமன் நம் பிரபாதான் என்போர் கூடி
வரும் ஐம்ப துங்கடந்து வேங்கைத் 'தம்பி'
வாழி பல யுகம் என்று வாழ்த்து கின்றோம்!

வளமிழந்து வனப்பிழந்து வருந்தும் ஈழ
மக்களெல்லாம் "யாவும்நாம் பெற்றோம்" என்று
புளகமுறும் நாள்கண்டும்புலிகள் ஆட்சி
பூத்தொளிரத் தமிழன்னை அரச கட்டில்
ஒளிவீசி வீற்றிருந்திங் காளல் கண்டும்.
உலகெங்கும் இருந்துறவோர் மீளல் கண்டும்
தொழுந்த[illegible]கயன் நம்பிரபா வலிமை பொங்கச்
சுடர் நூ[illegible]ண்டுங்கடந்து வாழி வாழி!

உலக அகராதியிலே தமிழன் ஈழ
உரிமைப்போர் பொறிப்புண்ண வைத்த தீரன்
பலமாதம் போரிட்டுப் பறித்த மண்ணைப்
பகைவனிட மிருந்துசில நாளில் மீட்டோன்.
உலகறியாப் பேர்விரகு பல படைத்தோன்
உளிகொண்டே பல இமயம் பொடிசெய்திட்டோன்.

கலையாத தவமுனிவன் ஈழம் மீட்டுக்
கடந்துபல ஐம்பதுகள் களித்தே வாழி!

ச.வே.பஞ்சாட்சரம்

### வாழிய நீடு!

பேச்சிலும் மூச்சிலும்
விடுதலை கொண்டென்றும்
பேச்சிலும் போரிலும்
சிகரத்தில் நின்றவா வாழி!

உலகில் தமிழருக்கொரு
முகவரி தந்தெம்
இன்னல் துடை தலைவா
பன்னெடுங் காலம் வாழி! வாழி!!

தருமை வதனன்

### வாழிய பெருமகனே!

சதங்கை இயைந்து
கடுதியில் புணர்ந்து
எழுந்தது எங்கள்
தலைவனின் நாமம்

சுடுவிரல் காட்டி
எங்கள் பெருமகன் - காட்டும்
இலட்சியத்திசை ஒன்றே!

சிறி.இ



### அகவை ஐம்பதைக் கண்ட தலைவனே பா கவிகை கொண்டுமே வாழ்த்துவோம்.

கத்துகடல் முத்தெனவே
புத்திரனாய் வந்தாய் - தமிழர்
தத்து அதுசெத்தொழிய
சக்தியென நின்றாய்
பத்து விரல் அத்தனையும்
புத்தியெனக் கொண்டு - பகை
செத்து விழ நித்திலத்தில்
நித்தம் பணிசெய்தாய்

காத்திருந்த மண்மகிழக்
கார்த்திகையில் வந்தாய் - நீர்
கோர்த்திருந்த விழி துடைக்கும்
பார்த்திபனாய் நின்றாய் - எதிர்
பார்த்திராத பகை தொடுத்த
கணையுடைத்து நீயும் - தமிழ்
காத்தவனே வாழ்த்துகின்றோம்
புத்தகவை தன்னில்

சொலமன்.சூ.சிறில்,


பல்லாண்டு புகழ் சிறக்க வாழி! வாழி!
பொங்குதமிழ்ப் புலி மறவர் சேனையாலே
போரென்று வந்தவராம் சிங்களத்து
வெங்கொடியர் செருக்கடக்கி வெற்றிகாட்டி
வீரமது தமிழர்க்கு விளையாட்டென்னும்
நங்களுடை நாயகமே நாட்டி லுற்ற
நலிவெல்லாம் நீங்கனவம்ப தகவையுற்று
பங்கமிலாப் பொன்விழவு கண்டாய் இன்னும்
பல்லாண்டு புகழ்சிறக்க வாழி வாழி!
தமிழீழப் போக்குவரவுக்கழகம்
நடுவப்பணிமனை
விசுவமடு.

# அபிவிருத்தி செய்ய வேண்டிய காக்கதீவு கிராமம்

கடந்த 25 வருட கால யுத்தத்தின் விளைவாக வடக்கு- கிழக்கு மக்கள் பல இழப்புக்களை சந்தித்து இன்னல்களின் மத்தியில் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சிலர் தமது உறவினர் நண்பர்களது வீடுகளில் வசித்து வந்தனர். பலர்



நலன்புரிநிலையங்களை தமது வாழ்விடமாகக்கொண்டுள்ளனர். இவ்வாறு இடம் பெயர்ந்த மக்களிற்கு சில நிவாரண உதவிகளை செய்துள்ளபோதும் அவர்கள் துன்பத்தை அனுபவித்தபடிதான் உள்ளனர்.

மாதிரிக் கிராமங்களில் முழுமை பெறாத வீடுகளில் வதியும் மக்கள் ஏதோ ஒரு வகையில் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். மாதிரிக்கிராம வீட்டுத் திட்டங்களில் குடிநீர் பிரச்சினையே பொதுவான அதே நேரம் நிவர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ளது. தண்ணீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பிரச்சினையாகவேயுள்ளது. கோடை காலங்களில் வரட்சி, மழை காலங்களில் மழைநீர் வீடுகளிற்குள் புகுந்து விடுகின்றது.

தண்ணீர்ப்பிரச்சினைகளினால் தவிக்கும் கிராமங்களில் காக்கதீவு மாதிரிக்குடியேற்றக் கிராமமும் ஒன்றாகும். சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஜே-



133 கிராமசேவையாளர் பிரிவிலுள்ள காக்கதீவு கிராமம் 1983 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. 63 குடும்பங்களைச் சேர்ந்த 300 பேர் உள்ளனர். இவர்களில் 6 வயது முதல் 18 வயது வரை 65 பேர் இருந்தபோதிலும் கல்வி கற்போர் தொகை மிகக் குறைவாகவேயுள்ளது.

அடிப்படை வசதிகளின்றி நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர் இக்கிராம மக்கள். கடந்த சில வாரங்களாகப் பெய்த கடும் மழையினால் இப்பகுதி மக்களில் சிலர் இடம் பெயர்ந்துள்ளனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு தமிழர்புனர்வாழ்வுக் கழகம் அத்தியாவசியப் பொருட்களை வழங்கி இவர்களது துயரில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கடற்கரையோரமாகவுள்ள இக்குடியேற்றத்திட்டத்தில் மழைநீர் வழிந்தோடுவதற்கான கழிவு நீர் வாய்க்கால்கள் உரிய முறையில் புனரமைக்கப்படாமையாலேயே இப்பகுதியில் மழைநீர் தேங்குகிறது இவ்வாறு கடந்த காலங்களிலும் இடம் பெற்றுள்ளது. அயல் கிராமங்களில் இருந்து வரும் மழைநீர் இக்கிராமத்தின் ஊடாகவே கடலுடன் கலக்கின்றமையும் இப்பகுதியில் நீர் தேங்குவதற்கான காரணமாக அமைகிறது. கிராமத்திற்கான பாதைகள் திட்டமிட்டு உரியமுறையில் வடிகால்கள் அமைத்து அமைக்கப்பட்டால் இக்கிராமத்தை வெள்ள அழிவில் இருந்து காப்பாற்ற முடியும். காக்கதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் இரட்ணசிங்கம் - சிறி தமது கிராமம் தொடர்பாக எம்முடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள். 1983 ஆம் ஆண்டு 50 வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குடியேற்றத்திட்ட கிராமத்திற்கான அடிப்படை வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்த போதிலும் 1985 ஆம் ஆண்டு வரை இவ் வீட்டுத்திட்டம் முழுமை பெறவில்லை. 31 வீடுகள் மட்டுமே ஓரளவு பூர்த்தியான நிலையில் இருந்தமையால் சாவல்காட்டுக் கிராம மக்கள் இதில் குடியேறினர். மிகுதி 19 வீடுகளும் பள்ளக்காணிக்குள் வந்தமையால் இதுவரை அப்பணி மேற் கொள்ளப்படவில்லை.

31 வீடுகளில் 50 குடும்பங்கள் வசிக்கின்ற போதிலும் 15 குடும்பங்கள் தங்களால் இயலுமானவற்றைக் கொண்டு குடிசை அமைத்து அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையிலுள்ளனர். இவர்களே மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்துமுள்ளனர். இப்பகுதிக்கான மின்சார இணைப்புக்கள் 2003 ஆம் ஆண்டே மானிப்பாய் பிரதேசசபையின் முழு முயற்சியினால் ஏற்படுத்தப் பட்டது. மூவிமண்டோ நிறுவனத்தினர் 31 மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இரண்டு தசாப்த காலமாகியும் சிறு தொகைப் பணம் கட்ட வேண்டும் என்ற ஒரே காரணத்தால் எங்களிற்கான காணி உறுதிப் பத்திரம் இதுவரை வழங்கப்படவில்லை. எமது சங்கத்தின் உதவியுடன் பக்கத்திலுள்ள வயல் காணியை வீடற்றவர்களிற்கு வேண்டி விட்டுள்ளோம். எமது குடியிருப்புகளிற்கிடையேயான பாதைகள்

**இரா-வின்**

ஒழுங்காக அமைக்கப்படவில்லை. சிறிய நீர்ப்போக்குகள் அமைத்து மழைநீர் ஓடுவதற்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

கிராமத்திற்கு அருகிலுள்ள கழிவுநீர்வாய்க்கால் புனரமைக்கப்படாமையினால் இதற்குள் தேங்கும்நீர் குடியிருப்புக்களிற்குள் புகுந்துவிடுகிறது. இங்குள்ள பிள்ளைகள் 10 ஆம் ஆண்டுடன் கல்வியை நிறுத்திவிட்டு சிறுவயதிலேயே தொழிலை நாடிச் செல்கின்றனர். இதற்கு குடும்ப வறுமையே காரணமாக அமைகிறது. சர்வோதய அமைப்பினரால் மாலைநேரக் கல்விக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. என தமது கருத்துக்களை நிறைவு செய்தார் இரட்ணசிங்கம்-சிறி.

இக்கிராமத்திற்கென முத்தமிழ் பாலர் பாடசாலை இயங்கிவருகிறது. 29 மாணவர்களிற்கு இரண்டு ஆசிரியர்கள் கற்பித்து வருகிறார்கள். இதுவரை இக் கிராமத்திற்கென சனசமூக நிலையம் அமைக்கப்படவில்லை. கிராம அபிவிருத்திச்சங்கம் வேறு அமைப்புரீதியான கட்டமைப்பு இல்லை. எல்லாவற்றிக்கும் பொதுவாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமேயுள்ளது.

இக் கிராமத்திற்கென ஆரம்பப் பிரிவு பாடசாலை ஒன்று அமைக்கப்பட வேண்டும். காக்கதீவில் இருந்து ஆறுகால் மடம் அதனை அண்மித்த உயரப்புலம் பகுதி பாடசாலைகளிலேயே கல்வி கற்கிறார்கள். பாடசாலை தூரத்திலுள்ளமையால் ஆரம்பப் பிரிவு மணவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதில்லை. 65 குடும்பங்களைச்சேர்ந்த 300 பேரிற்கும் ஒரே ஒரு பொதுக் கிணறு மட்டுமே



யுள்ளது. கோடை காலங்களில் இப் பகுதி மக்கள் குளிப்பதற்கு அயல் கிராமங்களிற்கு செல்ல வேண்டிய பரிதாப நிலையிலுள்ளனர்.

ஐந்து பிள்ளைகளின் தாயான திருமதி விமலாதேவி - ஜெயச்சந்திரன் தமது கிராமம் தொடர்பாகக் கூறியவை. தண்ணீர் பிரச்சினையே பெரிய பிரச்சினையாகவுள்ளது. மழைநீர் தேங்கியுள்ளதால் நுளம்புப்பெருக்கம் அதிகமாகவுள்ளது. காய்ச்சல், வயிற்றோட்டம் மற்றும் தொற்று நோய்கள் அண்மைக் காலமாக ஏற்பட்டு வருகின்றன. எமது கிராமத்திற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கேட்டுக் கொண்டே இருக்கிறம் 15 வருடமாகியும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.



எமது கிராமத்திற்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அபிவிருத்தியடைந்த கிராமமாக எமது காலத்தில் காக்கதீவை பார்க்கமுடியாது. அடுத்த தலைமுறையாவது சகல வசதிகளுடனும் வாழும் என்றால் அதுவும் கேள்வியாகவேயுள்ளது. அண்மையில் குப்பி விளக்கு தட்டுப்பட்டு இருவர் படுகாயமடைந்துள்ளனர். 31 வீடுகளிற்கு மட்டுமே மின்சார வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

கடந்த வருடம் மழைநீர் நிரம்பியிருந்த கிடங்கில் தவறி வீழ்ந்த 2 1/2 வயதுக் குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இப்பொழுது பெய்துவருகின்ற கடும் மழையினால் அநேகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எமது கிராமத்தில் மழை நீர் தேங்காது கடலுடன் நீர் கலப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு பாதைகளை புனரமைத்து உரிய இடங்களில் மதகுகளை அமைக்க வேண்டுமென தனது கருத்துக்களை நிறைவு செய்தார் திருமதி விமலாதேவி - ஜெயச்சந்திரன்.

ஒரு கிராமத்திற்கென சில கட்டுமான கட்டமைப்புக்கள் உண்டு. கிராமத்தவர்களும் கிராமம் சார்பான அபிவிருத்தியில் பங்குகொள்ளும் அதிகாரிகளும் இவ் அமைப்புக்களில் பங்கெடுப்பர். காக்கதீவுக் கிராமத்தில் இவ்வாறானதொரு அமைப்புக்கள் இல்லை. குடும்பம் -தொழில்-குடும்பம் என்ற குறுகிய வட்டத்திற்குள் சிக்கியுள்ள மக்களை கிராமம் சார்பாக சிந்திக்க உரிய அமைப்புக்கள் முன்வர வேண்டும். மானிப்பாய் பிரதேச சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஆளுகைக்குட்பட்ட இக்கிராமம் தொடர்பாக என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள்? எடுக்கப் போகிறார்கள். இவர்கள் முன்வைக்கும் காரணங்கள் தான் என்ன?

கடந்தவாரம் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு கூட இவர்கள் எதுவித உதவிகளையும் வழங்கவில்லை. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரே இவர்களிற்கான வெள்ள நிவாரண உதவிகளை வழங்கியுள்ளனர். ஒரு கிராமத்தின் வளர்ச்சியிலேயே பிரதேசத்தின் அபிவிருத்தி தங்கியுள்ளது. எனவே இக்கிராம வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த அமைப்பு சார் அதிகாரிகள் முன்வரவேண்டும். கிராமத்திற்கான சிறு ஒழுங்கைகள் புனரமைத்து உரிய இடங்களில் சிறு பாலங்களை அமைபபதுடன் அருகிலுள்ள கழிவுநீர் வாய்க்காலையும் புனரமைக்க வேண்டும்.

மீனவக் கிராமமான காக்கதீவுக் கிராமத்தை அபிவிருத்தி செய்து கிராமம்க்களை ஏனைய கிராமத்தவர்களை போன்று வாழ வைக்க முன்வர வேண்டும் எப்பொழுது முன்வருவார்கள்.

# தேசத்தலைவனுக்கு நேச

50





தினகரனே! சூழவந்த
தீதழிக்கும் வல்லவனே!
உலகெல்லாம் உன்னருளால்
நாமுயர்ந்தோம் - நல்ல தமிழ்
ஈழமெனும் நாட்டிற்கு
நலமுடையோய்
பாருலகில் வந்துதித்த
நாள் தனையே வாழ்த்துகின்றோம்
பல்லாண்டு வாழ்ந்திட நீர்!



## 50வது பிறந்த
## எமது வாழ்த்து

- தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் (கைதடி)
- தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (கொடிகாமம்)
- சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்
- வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (மருதங்கேணி)
- பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்
- புலோலி ப.நோ.கூ.சங்கம்
- கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
- உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்
- வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்
- வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்
- நல்லூர் ப.நோ.கூ.சங்கம்
- யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்
- சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்
- சங்கானை ப.நோ.கூ.சங்கம்
- மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்

- பண்டத்தரிப்பு
- அளவெட்டி-ம
- தெல்லிப்பளை
- காரைநகர் ப.
- வேலணை ப.
- புங்குடுதீவு-ந
- ஊர்காவற்து
- நெடுந்தீவு ப.
- தீவுப்பகுதி (அ
- யாழ்மாவட்ட
- யாழ்மாவட்ட
- யாழ்மாவட்ட
- யாழ்மாவட்ட
- யாழ்மாவட்ட
- யாழ்மாவட்ட
- வடமாகாண
- வடமாகாண ப
- யாழ்மாவட்ட


நேசமுடன் வாழ்த்துக்கள்!
ந்தநாளில்
த்துக்கள்!
பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்
அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்
தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்
காரைநகர் ப.நோ.கூ.சங்கம்
வேலணை ப.நோ.கூ.சங்கம்
புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்
ஊர்காவற்துறை ப.நோ.கூ.சங்கம்
நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்
தீவுப்பகுதி(அனலைதீவு) ப.நோ.கூ.சங்கம்
யாழ்மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
யாழ்மாவட்ட கூட்டுறவு கிரமிய வங்கிகளின் சமாசம்
யாழ்மாவட்ட வெதுப்பக உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
யாழ்மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
யாழ்மாவட்ட பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
யாழ்மாவட்ட வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
வடமாகாண பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
(சி-10748)

# வீடு

# சீரற்ற முடிவுகளே உள பாதிப்பிற்குக் காரணம்

ஆண், பெண், இருபாலாருமே ஓர் அலுவலகத்தில் வேலை செய்தாலும்சரி, பிறவேலைகளில் ஈடுபட்டாலும் சரி, உளரீதியில் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் அதிகமானவர்கள் பெண்களே எனும் கருத்துக் கணிப்பு எல்லோரிடத்திலுமுள்ளது. எனவே இவ்வாறான மதிப்பீடுகளிலிருந்து பெண்கள் விடுதலைபெற வேண்டும்.

"காற்றை எதிர்த்துத்தானே காற்றாடி சுழல்கின்றது..." எனவே ஒவ்வொரு பெண்களிற்குள்ளேயும், (மறைமுகமாக) வெளியேயும் (வெளிப்படையாக) பல பிரச்சினைகள் பிறப்பெடுக்கும். இதையாராலும் தடுக்கமுடியாது. ஆனால் அப்பிரச்சினையை, பிரச்சினையாகப் பார்க்காது, சுமூகமானமுறையில் கையாள்பவனே அவ் உளப்பாதிப்பிலிருந்து விடுதலை பெறுகின்றான்.

ஒரு பிரச்சினை உங்களை நோக்கி வருகின்றதென்றால், எவ்வாறான சூழ்நிலையில் இப்பிரச்சினை உருப்பெற்றது எனப்பாருங்கள். அப்பிரச்சினையின் மூலகாரணத்தை பதற்றமோ, பயமோ இன்றி துணிந்து கையாளுங்கள் அதற்கான காரணத்தை கண்டுபிடித்துவிட்டீர்களெனின் சம்பந்தப்பட்டவர்களிடம் சென்று கதையுங்கள். உண்மையில் அப்பிரச்சினைக்கு காரணம் நீங்களெனில் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

சில பெண்கள் தாம் சிறிய தவறுவிட்டதற்காக சதா அதையே நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். தவறுகள் என்றுமே குற்றங்கள் அல்ல, ஆனால் அந்த தவறை, தவறு என உணராமல் இருப்பதே மாபெரும் தவறாகும். நீங்கள் அத்தவறை வாழ்வின் படிக்கல்லாக வைத்து அத்தவறை மீண்டும் விடாமல் செயற்படுவீர்களானால் வெற்றி உங்கள் கைகளில் தான்.



அதைவிடுத்து குறித்த பிரச்சினையையே நினைத்து வேதனைப்படுவதால் எந்தப் பலனையும் நீங்கள் அடைந்துவிடமுடியாது. இதன்மூலம் பிற விஷயத்தில் உங்களால் நிலைத்து நிற்க முடியாமல் போய்விடும். எனவே சிக்கல்களை எதிர்கொள்ளும் மனோநிலையை உருவாக்குங்கள். அலைபாயும் உங்கள் மனதினை ஒரு நிலைப்படுத்துங்கள். ஒரு செயலை செய்வதற்கு முடிவெடுத்துவிட்டீர்களானால், அதற்குப்பின் தயக்கமோ, அச்சமோ கொள்ளவேண்டாம். எனவேதான் பூப்ளியஸ் சைரஸ் கூறுகின்றார். "எத்தனை முறைவேண்டுமானாலும் சிந்தித்து முடிவெடு, தீர்மானித்துவிட்டாயானால் அது இறுதிமுடிவாகட்டும் என்று ஒரு செயலில் இறங்கிவிட்டு மறுகரையைப் பார்க்கக் கூடாது. சிந்தித்துத்தானே முடிவெடுத்தோம் எனவே திரும்பிப்பார்க்காது, நமது செயலில் நிலைத்து நின்று செயலாற்றவேண்டும். நமது செயல் பற்றி நேர்மையான முடிவுக்கு வந்தபின் செயலாற்றும்போது, பிறர் குறை கூறுவது பற்றி எள்ளளவும் கவலைப் படக்கூடாது.

நாம் பிறந்தோம் வாழ்ந்தோம், இறந்தோம் என்றிராமல், இறந்தும் வாழ்கின்றான் என்று கூறுமளவிற்கு ஒவ்வொருவரின் செயலும் இருக்கவேண்டும். இலைமறைகாயாக எமக்குள்ளே பல திறமைகள் முடங்கிக்கிடக்கின்றன. எம்முடைய திறமைகளை விரிவுபடுத்திக்கொண்டு செல்லவேண்டுமே தவிர, சுருக்கி விடக்கூடாது. நம்மை நாமே ஒரு வரையறைக்கு உட்படுத்தி சுருக்கிக்கொண்டு வாழ்வதனால்தான், நம்முடைய திறமைகளை வெளிக்கொண்டுவர முடியாமல் இருட்டறையினுள் மறைந்துகிடக்கின்றன. எனவே இந்த நிலையிலிருந்து நாம் விடுபடவேண்டும்.

நாம் பிறக்கும் போதே சாதனையாளனாகப் பிறப்பதில்லை. இம் மண்ணுலகில் பிறந்த பின்னரே, தனது அறிவு வளரத் தொடங்கிய பின்பே, சாதனைக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்கின்றோம். சாதிப்பதற்கு சாதகமான காரணிகள் பல இருந்தும் சிலர் அதிலிருந்து தவறிவிடுவதற்கான காரணம் ஐந்து உள்ளன.

1.பரவச நிலை.
2.கவலையான நிலை.
3.விரக்தியான நிலை.
4.மகிழ்ச்சியான நிலை.
5.இயல்பான நிலை.

இதில் மகிழ்ச்சியான நிலையும், இயல்பான நிலையுமே உண்மையானது. மீதிமூன்றும் போலியானதாகும். இதுவே எம்மை நிலைகுலையச்செய்து, தோல்விகளைக் கொடுப்பதாகும். இதனால்தான் அனைவரும் மகிழ்ச்சியான நிலையில், அல்லது, இயல்பான நிலையில் இருக்கப்பழகிக் கொண்டால், பிரச்சினைகளைச் சமாளிக்க முடிவதுடன், உளப்பாதிப்பிலிருந்தும் விடுதலைபெறமுடியும்.

**த.யாழ்வேங்கை**

# இப்படிச் செய்யலாம்...

*காய்கறிகளையும் கீரைகளையும் வேகவைக்கும் போது கொஞ்சம் பலகார சோடா மாவை அதில் போட்டால், கீரைகளும் காய்கறிகளும் நிறம் மாறாமல் பார்க்க அழகாக இருக்கும். சுவையாக இருக்கும்.*

* * *

*வீட்டில் மீன் வளர்ப்பவர்கள் மீன் தொட்டி நிறையத் தண்ணீர் ஊற்றி வைத்தால் மீன்கள் வெளியே குதித்து இறந்து போகும். ஆகையால், தொட்டியில் கொஞ்சம் குறைவாகவே தண்ணீர் ஊற்ற வேண்டும். மீன் தொட்டிகளின் மேல் ஒரு நைலோன் வலையைப் போட்டுக் கட்டிவிடுவது நல்லது. மீன்கள் அப்போது வெளியே வந்து விழாது!*

* * *

*ஒருவர் உபயோகிக்கும் சீப்பை, இன்னொருவர் உபயோகிக்கக் கூடாது. உபயோகித்தால் தலையில் உள்ள பொட்டு, பொடுகு, பேன் மற்றவர் தலைக்கு வரும் சலூனுக்குப் போகிறவர்களின் தலைகளிலெல்லாம் பொடுகு கண்டிப்பாக இருக்கும்!*

* * *

*போத்தல்களில் அடைக்கப்பட்டுச் சீல் வைக்கப்பட்ட எண்ணெய் வகைகளைச் சமையலுக்குப்பயன்படுத்துவது நல்லது. போத்தல்களில் சீல் வைக்கப்பட்ட எண்ணெய் வகைகள் பெரும்பாலும் கலப்படம் இல்லாமல் இருக்கும். கலப்படம் செய்யப்பட்ட எண்ணெய் வகைகளைப் பயன்படுத்துவதால் பலருக்குக்கண்பார்வை கெட்டுப்போகிறது. புற்றுநோய் வருகிறது!*

* * *

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# நீங்களும் சிந்தியுங்கள்

நாம் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று சலித்துக்கொள்ளாதவர் யார் தான் உளர். இவ்வுலகத்தில் மனிதனாக தோன்றிய அனைவரும் ஏதோ ஒருவகை வெறுப்புடன்தான் உள்ளனர். என்ன செய்வதுகாலன் அமைத்துவிட்டதை மாற்றவா முடியும் என்ற மனத்திருப்தியின்மையுடன் தான் வாழ்கின்றார்கள்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ இம்மானிலத்தில்" என்ற உண்மையை யார்தான் மறுத்துவிட முடியும். எத்தனை வடிவில் எந்த இடத்தில் துன்பம் இல்லை வாழ்க்கை என்ற வட்டத்தில் எல்லாமே சுமை தான். உண்மை எப்பொழுதும் உண்மையாகத்தான் இருக்கும். ஆயிரம் பேர் சேர்ந்து உண்மை அல்ல என்று சொல்வதற்காக உண்மை பொய்யாகாது. அப்படித்தான் ஆக்க வழி அல்லது ஆதலைச் சார்கின்ற வழியானது என்றைக்கும் நன்மையைத்தான் பயக்கும். அதனைச் சொல்கின்றவர்கள் சிலராக இருக்கலாம், ஆனாலும் ஆக்கம்தான் அதைச் சார்வதற்குரிய வழி. நன்மையைப் பயப்பது தான் சொல்கிறவர்கள் சிலர் என்று அதைக் குறைவாக நாம் நினைக்க கூடாது.

நாம் மனிதர்கள் எம்மிடம் ஆசை நிறையவே உள்ளது. வாழ்க்கையை நம்பிக்கையுடன் எதிர்நோக்கவும் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் முட்டுக்கட்டையான பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளவும் நாம் எவ்வகையில் சிந்தித்து செயலாற்றுகின்றோம். யாவும் எம் எண்ணத்திற்கு மாறாகவே நடைபெறும் எனும் எம் எண்ணத்தில் மாற்றம் இல்லை.

மனத்தில் ஒருமைப்பாடு இருந்தால் ஏனையவற்றிலும் ஒருமைப்பாடு இருக்கும். மனமோ ஒரு கணத்தில் பல சிந்தனைகளைச் செய்துகொண்டே இருக்கும். காற்று எப்பொழுதும் சலித்துக்கொண்டே இருக்கும். ஓரிடத்தில் நில்லாது மனம் என்பது சலனத்தின் உருவம் என்று சொல்லிவிடலாம்.

மனதை ஒருமைப்படுத்தி அதனிடம் தோன்றுகின்ற எண்ணங்களை ஒருமைப்படுத்தி அவற்றின் விளைவாகத் தோன்றுகின்ற சிந்தனை, சொல், செயல், முதலியவற்றை ஒருமைப்படுத்திவிட்டால் அப்பொழுது நாம் செய்கின்ற செயல்களுக்கெல்லாம் பன்மடங்கு பயன் உண்டாகும்.

**சு.சிவாஜினி**

## வெங்காய வற்றல்




**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| பெரிய வெங்காயம் | - 1/2 கிலோ |
| சிறிய வெங்காயம் | - 1/2 கிலோ |
| கறிவேப்பிலை | - ஒரு கைப்பிடி அளவு |
| மஞ்சள் தூள் | - 1 சிட்டிகை |
| மிளகாய்த் தூள் | - 1 கரண்டி |
| நல்லெண்ணெய் | - 1 டம்ளர் |
| உப்பு | - தேவையான அளவு |

**செய்முறை:-**

வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி மற்றப் பொருள்களோடு சேர்த்து மூன்று நாள் ஊறவைக்கவும்.

பின்னர் கலவையை எடுத்து அரைத்துக் கொள்ளவும். அதில் சிறிதளவு கடுகு, சீரகம், நல்லெண்ணெய் ஒரு டம்ளர் சேர்த்து பெரிய உருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும்.

வெய்யிலில் நன்றாகக் காய வைத்து எடுத்துக் கொள்ளவும்.

தேவையான பொழுது தேவையான அளவு எடுத்து எண்ணெயில் பொரித்து புளி விட்டுச் செய்யும் கூட்டு அல்லது வற்றல் குழம்பு ஆகியவற்றுடன் சேர்த்தால் குழம்பின் சுவை கூடும்.

## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்



வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—24**

பெயர்:............................................

முகவரி:............................................

............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.


சூரியப்புதல்வனுக்கு எம் வாழ்த்துக்கள்!
50
அரசியலில் மதிநுட்பமிக்கவரே - உலக
அரங்கத்தில் எமை உயர்த்தி வைத்தவரே!
தரணி தனில் உன் தலைமை கிடைத்ததாலே
தமிழர் எம் குனிந்த தலை நிமிர்ந்ததைய்யா!
பிள்ளையார்
பல்பொருள் வாணிபம்
மல்லாவி -கிளிநொச்சி.
மருதடிப்பிள்ளையார்
களஞ்சியம்
மல்லாவி.
முத்துப்பிள்ளையார்
வண்ணச்சோலை
மல்லாவி-கிளிநொச்சி.
(சி-10909)


எம் தலைவருக்கு ஐம்பதாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!
50
பைந்தமிழின் துயர் துடைக்க எழுந்தான்
பாலகனாய் வல்வையிலே பிறந்தான்
வெஞ்சமரில் வென்று புலி நிமிர்ந்தான்
வேங்கையவன் புது அகவை கண்டான்!
யமஹா பிளாஸா
YAMAHA PLAZA
298, K.K.S. ROAD, JAFFNA
TEL: 0777 198000

# 50ஆவது அகவையில் எங்கள் தலைவன்



ஆழ் கடல் அலைகள் தினம் ஆரத்தழுவும்
ஊரதாம் வல்வையில்
கார்முகில் கவிந்து கடுங் குளிர் பரப்பும்
கார்த்திகை மாதத்தில்
சீரொடு பிறந்த பார்புகழ் தலைவா
நலமுடன் வளமும் துணிவுடன் பலமும் சேர
தமிழ் நிலமதை மீட்டுக்காக்க
நீடூழி வாழ்க! வாழ்க!

கூட்டுறவுணர்வுடன்
அங்கத்தவர்கள்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

மடு ப.நோ.கூ. சங்கம் - பெரியபண்டிவிரிச்சான்
மாந்தை மேற்கு ப.நோ.கூ.சங்கம் - திருக்கேதீஸ்வரம்
மாந்தை வடக்கு ப.நோ.கூ. சங்கம் - அடம்பன்
அடம்பன் வ.தெ.வ.அ. சங்கம் - ஆட்காட்டிவெளி

(சி-10629)

## பல்லாண்டு வாழ்க! வாழ்க!



ஒளியினில் பரிதி போல
உண்மையில் நிறைவுபோல
வழி தரும் வாழ்வு காட்டும்
வள்ளலே தலைவா வாழி!
பழிதரும் பகைமை போக்கி
பண்பினில் நல்லுறவுகொண்டு
விழியினில் வீரம் பூக்கும்
வெற்றிகொள் தலைவா
நீடூழி வாழ்க! வாழ்க!

**பொன்னம்பலம் அரிசி ஆலை**

யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.

(சி-10912)

## சூரியப்புதல்வனே வாழி!

கருவினிலே
போரின் கலை
பயின்று
கார்த்திகையில்
வந்துதித்த
காவலனே... நின்
வரவினிலே -தேச
விடியலென்று
பார்த்திருக்கப்
படைநடத்தும்
நாயகனே
வாழி! வாழி!





**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்**

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10911)

# பொன் அகவை காணும் தங்கத்தலைவனுக்கு எமது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!



பொன்னாண்டு காணும்
நம் தாய் நாட்டின் தலைவா!
நம் வாழ்வு சுருங்கலாம்;
இல்லை அமிழ்ந்தும் போகலாம்
நீ நீடூழி வாழ வேண்டுமையா!
ஏனெனில் இங்குள்ள அனைத்தும் வாழ
உம் ஒளி தேவை ஐயா!
உம் கதிர் பட்டுத்தான்
இங்குள்ள இருள் அகன்றது
உம் ஒளிக்கீற்று வெப்பத்தின்
எம் பகைக்கிருமிகள் அழிந்தன
விடுதலை வேண்டும் தேசங்கள்
உம் கதிர் தெறிப்பிலாவது
தமக்கு ஒளி கிடையாதா என ஏங்குகின்றன
பெருநெருப்பே!
நீடூழி வாழ வேண்டுமையா!

**பாண்டியன் வாணிபம்**

நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-10913)

# 50ஆவது அகவை நிறைவில் தேசியத் தலைவருக்கு

## எங்கள் வாழ்த்துக்கள்!



தலைவா உங்கள் வழியில் நாங்களும்...

## வெண்புறா நிறுவனம் – வன்னி

(சி-10921)

# ஐம்பதாவது அகவை காணும் ஆற்றல் மிகு எம் தலைவன்



எங்கள் தலைவனுக் கைபத்து ஆண்டுகள்
அகவை பிறக்கின்றது. அவர் ஆற்றல் சிறக்கின்றது
வல்வையின் மைந்தனின் வல்லமையிங்கு
எல்லைகள் விரிகின்றது. தமிழர் தொல்லைகள் அகல்கின்றது.
வான்கலம் கூடக் கொள்வன வென்று – பல
வாய்கள் உரைக்கின்றது எங்கள் வளங்கள் பெருக்கின்றது.

எங்கள் தலைவன் இன்னும் பல்லாண்டுகள்
மங்காப் புகழுடன் மாண்புறவே வாழ்க வென்றும்
சீரோடும் சிறப்போடும் சிந்தை தமிழ் நலத்தோடும்
வேரோடு விழுதெறிந்து எங்கள் விழுமியங்கள் காக்க வென்றும்
போராடும் ஆற்றலிங்கு பொங்கு தமிழ் உறவோடு
யாரோடும் போராடும் வல்லமைகள் பெருக வென்றும்
பொன் விழாக் காணும் எங்கள் பொன்மனத் தலைவனை
பொங்கு தமிழ் உறவினை அந்தப் போரியல் நிபுணனை
போற்றுகின்றோம் நாங்கள் வாழ்த்துகின்றோம்:

**என்றும் எதையும், எதிர் கொள்ளும் திடமின்னும்,**
**நன்று பெருகி நலம் பெற்று வாழவென வாழ்த்தும்**

## மருதம் வாணிபம்

போராளிகள், பணியாளர்கள்.

(சி-10637)

# 26 – நவம்பர் – 2004

50

ஈழவானில் சுடர் விடும்
சூரிய தேவனே – உன்
உதய நாளிற்கு – எம் இதயம்
திறந்தோர் இன்பமான வாழ்த்து



"தமிழ் கூறும் நல்லுலகத்
தானைத் தலைவா – நீ
தரணி போற்றும் தமிழினத்தின் விடிவெள்ளி
முத்தமிழ் பெற்றெடுத்த – முதல் மகனே!
அகவை ஐம்பது காணும் ஈழத்தின் அரசனே
பண்டார வன்னியன் வழிவந்த மறவனே", தமிழர்
தலை நிமிர்த்திய நாயகனே – உன்
அகவை ஐம்பது ஐந்தாக மாறி
உன் ஆயுள் நீடிக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்களுடன்
பணிப்பாளர் சபை,
பணியாளர்கள்.
வடபிராந்திய பாரவூர்தி
உரிமையாளர் கூ.சங்கம்.
பரந்தன் – கிளிநொச்சி.

(சி-10639)

# ஐம்பதாவது அகவை காணும் எம் தலைவனை
# வாழ்த்தி நிற்கின்றோம்.



"புறநானூறு படைத்த எம் தலைவா
உலகம் போற்றும் தமிழ்த் தலைவா
வாழ்க பல்லாண்டு பார் போற்றும்
உன் புகழ்"

26. 11. 2004 அன்று முழங்காவில் கலையரங்கில் ஐம்பது பெரிய பானைகள் வைக்கப்பட்டு அதில் பொங்கல் நிகழ்வு இடம் பெறும்.

மற்றும் பூனகரி பகுதியில் ஐம்பது அடி உயரத்தில் பொங்கல் பானை வைத்து பொங்கல் செய்யப்படும்.

இந் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

–நன்றி–

பூனகரி பிரதேச க.தொ.கூ.சங்கமும் சமாசமும்
முழங்காவில், பூனகரி வர்த்தக சங்கம்.
பூனகரி, முழங்காவில் பிரதேச வாழ்மக்கள்.

(சி-10804)



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 04

### பகுதி -24

நான் அவனுக்கு பிரியாவிடை கூறிக் கொண்டு, அடுத்த வாரம் அவனைச் சந்திப்பேன் என்று அவனது தாயாரிடம் கூறிக்கொண்டு அவர்களை விட்டு நடந்தேன். அவனை அங்கிருந்து புறப்படச் செய்யும் அவனது தாயாரின் முயற்சியில் உள்ளே ஒரே அல்லோல கல்லோல மாய் இருந்தது. அவனது நடத்தையால் அவள் திக்குமுக்காடிப் போனாள். அவளுக்கு சினம் மூண்டிருந்தது.

இப்படி நிகழ்ந்தது எனக்கு பிடித்த மானதாக இருக்கவில்லை. எனினும் அவர்கள் பிரச்சினையை அவர்களே அவர்கள் வழியில் தீர்த்துக்கொள்ளவிட்டு, அவர்களை விட்டுச் செல்வதைத் தவிர வேறு எதுவும் செய்யத் தெரியவில்லை. நான் அங்கேயே நின்று அங்கு நிகழ்வதைப் பார்த்துக் கொண்டிருந்தால் அல்லது அதில் தலையிட முயன்றால். நான் நிலைமையை மேலும் குழப்பமானதாகவும், சிக்கலானதாகவும் ஆக்கிவிடக்கூடும் என்று தோன்றியது. நான் டிப்ஸ்சுக்கு அல்லது அவனது தாயாருக்கு ஆதரவாக அல்லது எதிராக செயற்படுவதாகத் தோன்றுவதை நான் விரும்பவில்லை. அவர்கள் நடத்தைகளை விமர்சிப்பதுபோல் தோன்றக் கூடிய எதையும் செய்ய நான் விரும்பவில்லை. அந்தத் தாயை அல்லது அவளது மகனை ஆதரிப்பதாக அல்லது நிராகரிப்பதாக தோன்றும் எதையும் செய்யவும் நான் விரும்பவில்லை. எனவே எதிலும் நேரடியாக தொடர்பு படாமல் அந்த இடத்தை விட்டுச் செல்வதே பொருத்தமான செயலாகத் தோன்றியது.

## அத்தியாயம்- 05

அடுத்தவாரம் டிப்ஸ் மையத்துக்குத் திரும்ப வந்தான். தனது சந்திப்புக்கு மிக மிக சரியான நேரத்துக்கு வந்திருந்தான். டிப்ஸ் வந்திருப்பதை எனக்கு உணர்த்தும் சமிக்ஞையை வரவேற்பாளர் ஒலிக்கச் செய்த பொழுது நான் எனது அலுவலகத்தில் இருந்தேன். நான் வரவேற்பறைக்கு உடனடியாகவே நடந்து சென்றேன். கதவுக்கு இந்தப்புறம் டிப்ஸ் நின்று கொண்டிருந்தான். அவனுடைய தாயார் அவனை வரவேற்பறைக்கு அழைத்து வந்தபின், வரவேற்பாளருடன் சுருக்கமாக கதைத்துவிட்டுப் போய்யிருந்தார்.

நான் அவனை நோக்கி நடந்து கொண்டிருந்தபோதே "மதிய வணக்கம் டிப்ஸ்" என்றேன். அவன் பதில் சொல்லவில்லை. கண்கள் கீழ் நோக்கியபடியிருக்க அப்படியே நின்று கொண்டிருந்தான்.

அவனை நோக்கி எனது கையை நீட்டியபடி, "விளையாட்டு அறைக்கு போவோம், வாங்கோ" என்றேன். அவன் எனது கையைப் பிடித்துக் கொண்டு மண்டபத்தினூடாக விளையாட்டு அறைக்கு நடந்து வந்தான். டிப்ஸை உள்ளே செல்லவிட்டு நான் விலகிநின்றேன்.




உள்ளே செல்வதற்காக காலை எடுத்து வைத்த டிப்ஸ், திடீரென காலை பின்னால் எடுத்து வைத்து கதவின் விளிம்பை பிடித்துக்கொண்டான். கதவில் இரு வளமும் போடக்கூடிய ஒரு அறிவிப்பு அட்டை இருந்தது. அந்த அட்டையை எட்டி எடுத்தான்.

"தொந்தரவு செய்ய வேண்டாம்" என்று அதன் முன் புறத்தில் இருந்ததை வாசித்தான். இப்போது அதை மறுபுறம் திருப்பி அந்தப் பக்கம் இருந்த சொற்களைப் பார்த்தான். "விளையாட்டு...." என்று வாசிக்கத் தொடங்கியவன் இரண்டாவது வார்த்தையை தனது விரலால் பல முறை தட்டினான். அது அவனுக்கு ஒரு புதிய சொல்லாக இருந்தது. சிகிச்சை என்பதுதான் இரண்டாவது சொல். அதை அவன் கவனமாக ஆராய்ந்தான். பின் "சி...கிச்சை" என்று வாசித்தான். "சிகிச்சை என்று சொல்ல வேண்டும்" என்று சரியான உச்சரிப்பு முறையைச் சொல்லிக் கொடுத்தேன்.

"விளையாட்டு சிகிச்சை அறையா?" என்று கேட்டான்.

"ஓம்" என்றேன் நான்.

"விளையாட்டு சிகிச்சை அறை" என்று மீண்டும் சொன்னான்.



பின்பு விளையாட்டு அறைக்குள் நுழைந்த அவன் கதவைப் பூட்டி விட்டான்.

"நீங்கள் இப்போது உங்களுடைய கோட்டையும் தொப்பியையும் கழற்ற வேண்டும்" என்றான் அவன். நான் அவனைப் பார்த்தேன். அவன் தன்னைத்தான் குறிப்பிடுகிறான், ஆனால் முன்னிலை விளிப்பை பயன்படுத்துகிறான் என்பது எனக்குப் புரிந்தது. டிப்ஸ் தன்னை 'நான்' என்று குறிப்பிடுவது மிக அரிதாகவே நிகழ்ந்து வந்திருந்தது.

"நான் என்ர கோட்டையும் தொப்பியையும் கழற்ற வேண்டும் என்கிறீர்களா?" என்றேன்.

"ஓமோம்" என்றான் அவன்.

"ஆனா நான் தொப்பியும் போடயில்ல கோட்டும் போடயில்ல" என்றேன். டிப்ஸ் என்னைப் பார்த்தான்.

அவன் தன் கோட்டை இழுத்துக் காட்டியபடி "நீங்கள் உங்களுடைய கோட்டையும் தொப்பியையும் கழட்டுங்கோ" என்றான்.

"உங்கட கோட்டையும் தொப்பியையும் கழட்ட நான் உதவி செய்யோணும் எண்டு நீங்கள் விரும்புறீங்களா? அப்படியா?" நான் அவனைக் கேட்டேன். அதன்மூலம் 'நான்' என்ற பெயர்ச் சொல்லின் மீது அவனது கவனத்தை ஈர்க்க முயன்றேன். ஆனால் அது குழப்பமூட்டுவதும் சிக்கலானதுமான ஒரு விடயமாக இருந்தது.

"ஓமோம்" என்றான் டிப்ஸ்.

"நான் உங்களுக்கு உதவுகிறேன்" என்று நான் கூறினேன். அதுபோலவே அவனுக்கு உதவவும் செய்தேன். ஆனால் இந்த முறை அவனிடமிருந்து அதிக ஒத்தாசை கிடைத்தது. அவனுடைய தொப்பியையும் கோட்டையும் கழற்றியபின் அவற்றை அவனை நோக்கி நீட்டினேன்.

அவன் என்னை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பின் அவற்றை எடுத்துக்கொண்டு கதவை நோக்கி நடந்தான். "நீங்கள் இங்கே அவற்றை தொங்கவிடுங்கள்" என்று கூறிக்கொண்டே கதவுக் குமிழில் அவற்றை தொங்க விட்டான்.

"போன கிழமை நான் அவற்றை தொங்க விட்டேன். இன்றைக்கு நீங்கள் தொங்க விடுங்கோ" என்றேன்.

"ஓமோம்" என்று அவனிடமிருந்து பதில் வந்தது.

மணல் நிறைத்திருந்த பெட்டியின் விளிம்பில் அமர்ந்து கொண்ட அவன், போர்வீரர் பொம்மைகளை சோடி சோடியாக எடுத்து வரிசையாக நிறுத்தினான். பின்பு பொம்மை வீட்டின் அருகில் சென்ற அவன் அதனுள் இருந்த தளபாடங்களை மீள ஒழுங்கு செய்தான். திறந்த படி இருந்த வீட்டின் முன்பகுதியைச் சுட்டிக் காட்டிக் கொண்டே "கதவு எங்கே? கதவு எங்கே?" என்றான்.

(தொடரும்....)

---

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல இன்னொரு மையம் கேரளத்தில் அவன் படிக்கும் போது அங்கே சந்திக்கிற மலையாளப்பெண். அங்கேயேற்படுகிற ஈர்ப்பு-காதல். காதலை நிராகரிக்கிற உயர்குடும்பம். அதற்கவர்கள் வர்க்க ரீதியாகப் பிரயோகிக்கிற வன்முறை. வன்முறைக்கு உபயோகிக்கிற தமிழ்ன்-மலையாளி என்ற வேறுபாட்டடையாளம்.

இது மிக இலகுவில் பிரச்சினையை உருவாக்கவும் பிரச்சினையைத் தீர்க்கவும் கையாளப்படுகிற அரசியல். எந்த அடையாளத்தைத் தூக்கி இடையில் போடலாம் என்பதையிட்டு மிகத் தெளிவாக இருக்கிறது. உயர்வர்க்கம். ஒரு சந்தர்ப்பத்தில் மதம். இன்னொன்றில் மொழி, இன்னொன்றில் சாதி, வேறொன்றில் இனம், மற்றொன்றில் நிறம், பிறிதொன்றில் பிரதேசம். இங்கேயும் சேரன் தன்பார்வையை சரியாக நிறுத்துகிறார்.

தமிழ்ச்சினிமா சில சந்தர்ப்பங்களில் நல்ல ஆளுமையுடைய நெறியாளர்களைக் கண்டிருக்கிறது. ஆனால் பிறகவர்கள் எப்படியோ காணாமற் போய்விடுவார்கள். சேரன் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ள நெறியாளர்களில் முக்கியமான ஒருவர். இப்போது அவருடைய காட்டில் மழை. இந்த மழை வெள்ளத்தில் அவர் அடித்துச் செல்லப்பட்டு விடக்கூடாது. மழையில் கரைந்துவிடவும் கூடாது.

ஆட்டோகிராப்பில் நடித்துள்ள மூன்று பெண்களும் முக்கியமானவர்கள். லட்சரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள் என்ற பெரும் கவர்ச்சி விளம்பரங்களுக்குப் பின்னாலும் நல்ல நடிகர்- நடிகைகள் இருக்கிறார்கள் என்பதை இது நிரூபிக்கிறது. இளைஞனாக வரும் சேரனின் பள்ளிச் சிறுவனும் இடைநிலைப் பருவப் பையனின் முகமும் மிகச் சிறப்பு. அதுதான் சேரனையும்விட மனதில் அழியாதிருக்கிறது.

அழகியிலும் இதனைத் தங்கர் பச்சான் நிகழ்த்தியிருந்தார்.

எப்படித்தான் ஆட்டோகிராப்பைக் குறிப்பிட்டாலும் அது ஒரு வகையில் அழகியை ஞாபகப்படுத்தியே தீர்கிறது. அதுபோல பொற்காலத்தையும். ஆனால் இரண்டையும் கடந்தது என்பதையும் ஏற்கவேணும்.

மூன்று மனம் நிரம்பப் பிடித்த பெண்களை தன் வாழ்வின் முக்கிய நிலைகளிற் சந்தித்த இளைஞனொருவன் திருமணத்தில் எந்த உப்புச்சப்புமற்றிருக்கும் நிலையில் துணையாக வேறொருவரை ஏற்பதுதான் இன்று பலருக்கும் வாய்த்துள்ள வாழ்க்கை.

இந்த வாழ்க்கை பற்றிய கேள்வியே பெரிது- பதிலுக்கானதும் கூட.

---

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே நாம் எமது நிலையை தக்க வைக்க ஒரு வளைவான பகுதியை பிடிக்கவேண்டியிருந்தது. எங்களில் எஞ்சியிருந்த 04 ஆண் போராளிகளும், 03பெண் போராளிகளும் எதிரியின் 05 காவலரணை பிடிக்கவேண்டியிருந்தது. அனைவருமே எதிரியின் இயந்திர துப்பாக்கிகளுடன் செல்ல, ஈழச் செழியனும் ஒரு பெண்போராளியும் உந்துகணை செலுத்தியுடன் வர மூர்க்கமாக தாக்குதலை தொடுத்து எதிரியை ஓடச்செய்து 05 காவலரண்களையும் பிடித்துவிட்டோம்.

சண்டை தொடங்கிய நேரத்திலிருந்து எமது பெரும்பாலான வெற்றிக்கு ஈழச்செழியனே காரணமாக இருந்தான். எதிரியோடு களமாடுவதிலும், நிதானமாக சண்டை செய்வதிலும் எப்போதும் அவன் மிகக்கவனமாகவே இருந்தான்.

இதே களத்தில் பக்கத்திலிருந்து சண்டைசெய்துகொண்டிருந்த போராளி ஒருவரை திடீரென இழுத்தெறிந்துவிட்டுத் தானும் நகர்வரணில் காப்பெடுத்தான். கண் சிமிட்டும் நேரத்தில் அந்த இடத்தில் 40மி.மீ எறிகணை வீழ்ந்துவெடித்தது.

சம நேரத்தில் சண்டை செய்துகொண்டிருந்துவிட்டு என்னவென்று எறிகணை ஏவுகின்ற சத்தத்தை கேட்டான் என்று எமக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் பலகளங்களில் அவனது செயற்பாடே அப்படியாகவே இருந்தது.

சிறு வயதிலிருந்தே போராளியாகிட வேண்டுமெனத் துடித்தவன், போராட்ட வாழ்வில் குறுகிய காலத்தில் சாதனைகள் படைத்து பரந்தன் களத்திலேயே மாவீரனாகி எம் தாய் மண்ணில் என்றும் வாழ்கிறான்.

---

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகளோடு மேற்கொள்ளப்பட்ட சிங்களப்பெரும் படையெடுப்புக்கள் புலிகளால் முறியடிக்கப்பட்டது பற்றியும், பாரிய சிங்கள முகாம்கள் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டது பற்றியும் அந்த ஆய்வுகள் அமைகின்றன.

அவர் தமிழர்கள் பலத்துடன் இருப்பது மட்டுமே வருங்காலத்துக்கு உத்தரவாதமாக அமையும் என்றும், அதுவே எதிர்காலத்திலும் சர்வதேச அங்கீகாரம் பெற்று உலகில் கௌரவமான தமிழர்களாக வாழ வழிவகுக்கும் எனவும் கருதி, அவர் தமிழர் படையை கட்டியெழுப்புவதில் மட்டுமல்லாது ஆரோக்கியமான மக்களைக் கொண்ட வலிமையான தாயகமாக நிறுவுவதிலும் கவனம் கொண்டுள்ளார்.

அவர் தமிழரின் சமூக, பொருளாதார நலன்பேணும் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தும் புதிய அடுக்குகளை அமைத்தார். திலீபன் மருத்துவச்சேவை, காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை, பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் என பல கட்டமைப்புகள் அவரால் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றுடன் காடுகள் அழிக்கப்படுவதால் மனித வாழ்க்கையின் ஆரோக்கியம் கெட்டுவிடும் என்று உணர்ந்து காடுகளை பெரியளவில் வளர்ப்பதற்கு ஊக்கமளித்து வருகின்றார். மொத்தத்தில் ஆரோக்கிய மக்கள் உள்ள நாடே மேலும் பலம் வாய்ந்த நாடாக இருக்கமுடியும் என எண்ணி மக்களுக்கு சமூக சேவையாற்றுபவராகவும் உள்ளார்.

இப்படியாக தமிழர் இராணுவ, பொருளாதார, அரசியல், நவீன தொழில் நுட்பம் மற்றும் சகல வளங்களிலும் பலம்பெற்ற இனமாக உலகில் திகழவேண்டும் என்பதே அவரின் இலட்சியம்.

இந்த இலட்சிய நோக்கங்களை எய்தாவண்ணம் இருக்க சிங்கள மூளைகள் அனைத்தும் சூழ்ச்சிகரமான இராஜதந்திரங்களையே கையாண்டு வருகின்றன.

அந்த சிங்கள இனவாதம் பற்றி தலைவர் 1997ஆம் ஆண்டின் மாவீரர் நாளில் ஆற்றிய உரையில், தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியால் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.

இறந்து போனவர்களின் அமைதியை கெடுப்பவர்கள், இறவாதோருக்கு நிம்மதியைக்கொடுப்பார்கள் என நான் கருதவில்லை என்றார்.

தேசியத்தலைவரின் மனப்பலமும், மாவீரர்களின் ஆன்ம பலமும், தமிழரின் தேசியப்பலமும் ஒன்றிணைந்து குவிந்து இருக்கும்வரை எந்தவொரு சக்தியாலும் தமிழரின் பலத்தை பலவீனப்படுத்தமுடியாது.

தமிழர் பகைவர்களின் சூழ்ச்சிகரமான அரசியல், இராணுவ, இராஜதந்திரங்களை வெற்றிகொண்டு தம்மை பலமாக்கிக்கொள்ள தேசியத் தலைவரின் மனப்பலத்தை, தமிழ்த் தேசியப்பலத்தால் மேலும் பலமாக்க அவரின் ஐம்பதாவது அகவையில் உறுதிபூணுவோம்.

# 50 ஆவது அகவை காணும் தங்கத்தலைவனுக்கு



கார்த்திகைப் பூ கண் சிமிட்ட
கம்பீரமாய் கடல் அலையடிக்க
கார்த்திகை இருளதுவோ
கலைந்து நின்று ஒளி வீசி

விடியலின் ஒளியொன்று
ஈழத்தில் உதித்ததுவே
தமிழினத்தின் விடியலுக்காய்
வல்வையிலே வந்துதித்த

தங்கத் தலைவனவன் (அண்ணன்) பிரபாகரன்
பகையை ஒழித்திடவும் தேசத்தை மீட்டிடவும்
பகலிரவாய் பாடுபட்ட எம் தலைவன்
என்றென்றும் நீடூழி வாழ்கவென
இப்பொன் நாளில் வாழ்த்துகிறோம்

மலரும் தமிழீழம்
வாழும் தமிழினம்

**வாடகைக்கார் உரிமையாளர் கழகம்**
**வன்னி**

(4935)

# எங்கள் பெருந்தலைவருக்கு

## 50ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!



உலகம் வியக்கும் தலைவர் வாழ்க!
ஈழத் தமிழர் உயர் உடைக்கும் தங்கத் தலைவர் வாழ்க!!
தேச விடுதலையின் வரலாற்றின் தலைவர் வாழ்க!
துன்பப்படும் ஈழத்தமிழர் உயர் உடைக்கும் புலித்தலைவர் வாழ்க!
வீறு நடைபோடும் வீரத் தலைவர் வாழ்க! வாழ்க!!
உம்மை நெஞ்சார வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

**காரைநகர் பிரதேச**
**தேசிய எழுச்சிப் பேரவையினரும்,**
**காரைநகர் மக்களும்.**



(சி-10749)

## தேசியத் தலைவருக்கு 50ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!



உலகுபோற்றும் உன்னை தலைவா
நிலவும் வானும்
நிலைத்திடும் நாள் வரை
நீடுழி நீ வாழ்க!
எம் நிலம் வாழ நீ வாழ்க!

**RG இரத்தினகோபால்ஸ்**

இல: 63,65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**சுசுக்கி ரேடர்ஸ்**

இல:59, கன்னாதிட்டி வீதி , யாழ்ப்பாணம்.

(சி-10905)

## தமிழர் தலைவனுக்கு வாழ்த்துக்கள்!



எதிர்ப்படை செருக்கறுக்க
எழுந்து வந்த புலித்தலைவா!
எங்களுக்கோர் நிலம்வகுக்க
உறுதிகொண்ட மறக்குலவா!
வல்வைநகர் பெற்றெடுத்த
வள்ளல்உமை வாழ்த்துகின்றோம்!

**ராசி சில்க்ஸ்**

இல:70,71A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

**நல்லி சில்க்ஸ்**

இல:121/1மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10906)

## தமிழினத்தின் காவலனே நீடுவாழி!



தாயகத்தை அமைத்திடவே நீடுவாழி
தாய்மொழியை காத்திடவே நீடு வாழி
தன்மானம் மிக்கவரே நீடுவாழி
தமிழினத்தின் காவலனே நீடுவாழி

**மகாசில்க்ஸ்**

இல:32,40A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

**பியூட்டி சில்க்ஸ்**

இல:69, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

(சி-10907)

## எம்தவப்புதல்வனுக்கு உளம் நிறைத்து வாழ்த்துக்கள்!



தமிழன் தலைநிமிர தமிழளித்த தவப்புதல்வா!
உலகின் புறமெல்லாம்
உயர்வு பெற்ற தனித்தலைவா!
பிறப்பெடுத்த பொன்னாளில்
பெருமையெலாம் சேர்த்திடவே
உளம்நிறைத்து வாழ்த்துகிறோம்!

**திருமுருகன் கொம் நெற்**

இல: 259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

இல: 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(சி-10908)

# எங்கள் தேசப்புதல்வனுக்கு

## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

செந்தமிழன் மைந்தனே நீ வாழ்க

தேச விடுதலையின் வேங்கையே நீ வாழ்க

பொங்குதமிழ் கொண்டபுலி நீ வாழ்க

கரிகாலன் என்ற புயல் நீ வாழ்க

கருவேங்கையின் தோழனே நீ வாழ்க

தமிழ் வீரத்தின் தலைவனே நீ வாழ்க

பகைச்சேனையின் மாயனே நீ வாழ்க

பார்போற்றிடும் வீரனே நீ வாழ்க!



**சொகுசு வாகனம் (ஹையேஸ்)**

கிளை

வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம்(750)



(சி-10779)

# மாவீரர் நாள்

## நவம்பர் 27

### இதோ எனது குருதி சுடராய் எரிகிறது

இதோ எனது குருதி
எரிகிறது சுடராய்
மரங்களின் மேலே முகில்
தூறும் மழையில்
கார்த்திகைப் பூக்களை வைக்கிறேன்

புன்னகைக்கிறாயா மகனே!
என்னுடைய கைகளைப் பற்றிக்கொள்ளத்
துடிக்கின்றாயா மகளே!

எங்கே உமது முகம்?
எங்கே உமது கனவு?
எங்கே உமது குரல்?

நீள்துயிற் படுக்கையா
நினைவுச் சுவடுகளா
இந்த விதைகுழிகள்: இல்லை
நிரையாய்க் கூடி நினைவூட்டும் அணிமுகமா
இது?

குமுறும் எனது குரலை எப்படியடக்குவேன்
நடுங்குகிறது இதயம்.
ஆன்மாவுந்தான்.

மழை பொழிகிறது
தகிக்கிறது அனல்.

ஈரத்தோடு வரும் மணியொலியில்
உங்களின்குரல்
சுடரொளியில் உங்களின் முகம்
அதிலே உமது கனவு
அதிலே உமது சிரிப்பு
அதிலே உமது குருதி
அதிலே உமது நம்பிக்கை

இங்கே திசைகளை நானறியவா சுடராகினீர்
எனது முகத்தை நான் பார்க்கவா ஒளியாகினீர்
இதோ கூடல்:
சுடர்களின் கூடல்:
ஒளிச்சூரியன்களின் ஆட்சி.

கதறும் குரல்கள் இருளைத் தகர்க்கின்றன
அழுகையல்ல இது
பேரொலிப் பிரவாகம்: விடுதலைக் கூவல்.

உமது கனவுகளின் பிரகடனமாய்
இந்த ஒளியேற்றல்
ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு கனவாய்
ஒவ்வொரு கனவும் ஒவ்வொரு முகமாய்

ஒவ்வொரு முகத்தைத் தேடியும்
ஒளிப்பந்தத்துடன் நாங்கள்
ஒளியாய் நீங்கள்...

### மாவீரர் குழந்தைகள்

அன்னை தமிழின்னல் அகல...
அண்ணன் வழியில்... தம்மை
அர்ப்பணித்த... வீரர்கள்.

ஆண்ட தமிழினம்...
ஆளப்படும் நிலை கண்டு - தம்மை
ஆகுதியாக்கிச் சென்றவர்கள்.

இனியில்லை இங்கே...
இன்னல்கள் என்றுரைத்து
இடியாய்... பகை வீடு இடித்தவர்கள்.

ஈகம் செய்வது... உயிராயினும் - தீரன்
ஈழவேந்தன்...சுட்டெரிப்பான் பகை.
ஈழம் வெல்லுமென.. உயிர்
ஈகம் செய்தவர்கள்.

உதிரத்தால்... விடுதலைக்கு
உரம் சேர்த்து உதிர்ந்தவர்கள் - தமிழ்வாழ
உயிர் தந்த உன்னதங்கள்.

ஊர் உறங்கிடும் போதினிலும்
ஊமைகளாய்... தானுறங்கா
உளவுப்புலியாய்... கரும்புலியாய்
ஊற்றெடுத்துச் சென்றவர்கள்.

எங்கள்... நாடும்... மொழியும்
எம்மிரு கண்மணியென...
எதிரிக்கு... எமனாய் வீசியவர்கள்.

ஏர் பிடித்து... வாழ்ந்த இனம் - சூழ்
ஏளனம் கண்டு
எரிமலையாய் பகை எரித்தவர்கள்.

ஐயம் ஏதுமில்லை
ஒருவனே - தலைவன்.
ஒன்றே தாயகம்.

ஒரு தடவையே...சா...வரும்
ஒளிரும் தமிழீழம் - என்றுரைத்து
ஓவியமானவர்கள் - எங்கள்
மாவீரக் குழந்தைகள்.

ஆர்.துளசன்

### மாவீரர் தெய்வங்கள்

நீங்காத் துயில் கொள்ளும்
எம் மகத்தான மாவீரரே:
மானத்தமிழனாய் நீ
மண்ணில் வித்தாகி
மங்காத தீபச் சுடராய் ஒளிரும்
எங்கள் மாவீரரே!
தமிழ் மக்களின்
நிம்மதியான வாழ்விற்காக.
இரவோ. பகலோ
வெயிலோ மழையோ
எதுவும் பாராது நீ
ஓயாது போர் தொடுத்தாயே
இப்படி நீங்காத் துயில் கொள்ளத்தானா?
நீ சுமந்த கனவுகள் இலட்சியங்கள்
அனைத்தும் நிச்சயமாய் நிறைவேறும்
நிம்மதியாய் துயில் கொள்ளுங்கள்
எம் மாவீரத் தெய்வங்களே

நா.பாவேந்தன்.

### புனிதச் சுடர் முகத்தில்

கார் கால மழைத் துளிகள்
காற்றுடன் கலந்து
பூ மிப் பந்தின் மேல்
ஊசியென- விழுந்து
குளிராடை போர்த்தி
காணாமல் போனது.
என் இதயக்கீற்றி
டையே - நினைவுக்
குயிலின் தேய்ந்து
போன-ஓசை
ஒரு முறை
நிமிர்ந்தேன்
வான் தவழும்
நிலாமகளும்-தன்னை
மறைக்கின்றாள்
மேகத்திரைக்குள்
இதயத்தால் புதைந்து
போன- துன்பச் சுமைகள்
நினைவு வெள்ளத்தில்
அந்த மாவீரர்
கல்லறை மேல் பட்டுத்
தெறிக்கும்
புனிதச் சுடர்......முகத்தில்
புன்னகை பூ த்து நிற்கும்
அவளின் அன்பு முகம்
அந்த அமைதியின்
வடிவம் என்னுள்
ஒருமுறை வந்து போனது.

ரமணன்.

### கண்ணீர்த்துளிக்குள் ஓர் நகல்

பிரபஞ்சங்கள் அனைத்தும்
உறங்கிக்கிடந்தபோது
காரிருழில் கந்தகக்கருவியை
சுமந்தெம் தேசம் காத்த
வீரரே..........................

கண்ணீர்த்துளிக்குள் ஓர்
நகலை நாளை வரை
உமக்காக வரைந்துள்ளோம்
வீரரே..............................

அன்று செங்களத்தில் உங்கள்
விழிகளில் நீங்கள் வரைந்து
பார்த்த தேசம். இன்று உங்கள்
கல்லறை முன் ஆயிரமாயிரம்
விழிகளெதிரே அஸ்தமமாகிறது
வீரரே நீங்கள் நிஷப்த்தமாய்
துயில்க.

யோகா.

### இன்நாள் அழும் நாளல்ல!

வான் மகிழ்ந்து
முகிழ் அழுது நீரோடும் தேசமெங்கும்
வாரியடித்து வெள்ளம்
வழிநழுவி கடல் சேரும்
கார்த்திகையாம் அம்மாதம்
கார்த்திகைப்பூப்போல
கதிரவன் உதிர்க்கிறான்.
தமிழீழ மண்ணெங்கும்
பேரன்பை அள்ளிக்கொண்டு
தாயம்மா மகிழ்வுற்று
வரவழைத்தாள்.
தமிழ்த்தாய் மடிமீது.

கண்ணுற்றோம் வருகிறதாம்- எம்
துயிலுமில்லச்செல்வங்களின்
சந்தனத்திருநாளது- அது
தமிழினத்தின் உயிர்தியானநாள்
வந்தடையும் புனிதர்களின் புகழ் நாள்.

உறவுகள் கூடி
உலகறியப்பேசும்
மகிழ்ந்து உள்ளம்
குதூகலத்தில் - ஆனந்தம்
மனமெங்கும் பொங்க
விழிநீர் பெருக்கெடுத்தோடும்.
பூவெல்லாம் மாலையாகி
புனிதர் நன்நாளில்
அப்பூக்கள் ஆங்காங்கே
பலபூமரங்களாகும்.
பொன்நாளாம் அந்நாள்.
எம்மின விடியலின் திருநாள்.

முல்லவன்.

### அற்புதரின் நினைவாக

இற்றறையின் விடுதலைக்கு
இன்னுயிரை அர்ப்பணித்து
கற்பனையில் அடங்காத
காவியங்கள் படைத்திட்ட
அற்புதரின் நினைவாக
அஞ்சலிகள் செலுத்திடுவோம்.
சொற்பகனம் மௌனித்தே
சுடரேற்றி வைத்திடுவோம்.

இ.கண்ணதாசன்.

### மரணத்தை வென்றவர்கள்!

ஓ...மாவீரர்களே!
மரணத்தை வென்றவர்களே!
மண்ணின் விடுதலைக்காய்
மாண்டவர்களே!
நாட்டிற்காய் உழைத்தவர்களே!
மலரும் ஈழத்துக்காய்
உயிர் துறந்தவர்களே!
உம் ஈழக்கனவு நனவாகும்.




பிறந்த நாள் வாழ்த்துக்கள்
சாதனைகள் பல புரிந்த சரித்திர நாயகனாம்
எங்கள் தலைவனின் ஐம்பதாம் அகவை தனில்
அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
26-11-2004 மாலை 4.30 மணிக்கு சமாசத்தின் தலைமைக்
காரியாலயத்தில் எம் தலைவன் அவர்களின் பிறந்த நாள்
கொண்டாட்ட நிகழ்வாக 50 கிலோ கேக் வெட்டும் நிகழ்வு
இடம் பெறும் இதற்கு அனைத்து அன்புள்ளங்களையும்
கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி.
முல்லை மாவட்ட க.தொ.கூ.ச.சமாசமும்
அதன் அங்கத்துவ சங்கங்களும்
முல்லைமாவட்டம்.
Kilinochchi
Mullaitivu
Mannar
திருகோணமலை
Trincomalee
மட்டக்களப்பு
Batticaloa

(4937)


பொன்விழா காணும் பொற்பிரம்பே!
வாழ்க பல்லாண்டு!
கண்ணின் மணியாக மண்ணைப் பாதுகாத்து
எண்ணிலடங்காத வண்ணச் சாதனையுடன்
விண்வரை வளர்த்திட்ட விடுதலையின் முத்தே
அண்ணனாய் பல்லாண்டு மண்ணிலே வாழ்வீர்கள்...
அடிமையை நீக்கப் போராடிய ~ உங்கள்
வீரத்தை ஒருபோதும் மறவோம்!
மடியில் பிள்ளைகளாய் விடிவுவரை வாழ்வோம்
குடியின் தலைவனே! நீடூழி வாழ்க.
வணிகர் கழகம்
புதுக்குடியிருப்பு பிரதேசம்

(10517)

# விடிகிறது தமிழ்ப்புலம் விடிவெள்ளியே வாழ்க!



எம் தலைவா வாழி!
நீ வாழி! நீ வாழி!
அன்று வல்வையில்
வந்துதித்த செயல்வீரா!
இன்று அவனியெல்லாம்
போற்றி நிற்கும் பண்பாளன்
எமக்கு தமிழீழம்
அதை தரவந்த பேராளன்
தலைவா! நீ வாழி! வாழி!!

**மருந்துப்பால்மா வகைகள்(தனியார்)**
**வரைவுள்ளது நடுவப்பணிமனை.**
**ஆனந்தபுரம்,புதுக்குடியிருப்பு.**

(சி-10747)

# தமிழீழத்தேசியத்தலைவருக்கு 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!



இலட்சியக்கோட்டையின்
இரும்புக்கதவே!
ஈழத்தமிழரின்
இதயக்குரலே!
நீடூழி வாழ நெஞ்சம் மகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

**மிலேனியம்**
**உல்லாசப்பயணிகள்**
**விடுதி.**

**76/60, இராமநாதன் வீதி,**
**கலட்டி,யாழ்ப்பாணம்.**

(சி-10747)


50 ஆவது அகவையில் தமிழீழத்தேசியத்தலைவரை
யாழ்ப்பாண வணிகர்கள் சார்பில் யாழ் .வணிகர் கழகம்
வாழ்த்துகின்றது.
உரம் மிகுந்த
உங்கள் கரங்களோடு
எங்கள் கரங்களும்
உயர்கின்றன.
இலட்சியக்கனவு
நிறைவேற
நெஞ்சம் நிறைந்து
வாழ்த்துகின்றோம்.
யாழ்ப்பாணம்
வணிகர் கழகம்
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10743)

## அன்பின் திரு உருவுக்கு அகமகிழ்ந்து வாழ்த்துக்கள்...



கலைக்குத் தலைமகனாய்
தமிழர் வாழ்வின்
கலங்கரை விளக்காய்
என்றும் ஒளிரும் எமதுயிர் அண்ணாவே
சிந்தனையில் செயலிலென்றும்
செந்தமிழ் ஈழமென வாழும்
அன்பின் திருஉருவே
நிந்தனுக்கு எங்கள்
ஐம்பதாவது அகவை வாழ்த்துக்கள்!

**தமிழீழ நுண்கலைக் கல்லூரி**
பணிப்பாளர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள், மாணவர்கள்.

(சி-10636)

## எங்கள் வீரத்தலைவனுக்கு 50 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!



பொன்னொளிர் கதிரோனே
போயின இருளிடரே
கண்களில் வீரம் பொங்கும்
கனியுளம் காவல் தெய்வம்
எண்களில் ஆண்டு கூடும்:
தமிழோ என்றுமே இளமை பொய்கும்
எங்களின் தலைவா:
தமிழ் போல்
என்றுமே நீடூழி வாழ்க! வாழ்க!!

பணிப்பாளரும், பணியாளர்களும்
**இரத்தினம் ஊர்திச் சேவைத்தளம்**
இல:30,32 சிறாம்பையடி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10924)




(சி-10805)

## சரித்திர நாயகனாய் வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்!



தங்கத் தலைமகன் இத்தரணியிலே வந்துதித்த
இன்றைய நாள் போலவே இன்னும் பல நூறாண்டு
இன்பமுடனே வாழ்ந்திங்கு சாதனைகள் பலபுரிந்து
சரித்திர நாயகனாய் வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.
தலைவா! வாழிய... வாழியவே!

**மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்**

இல:10, மின்சாரநிலைய வீதி, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-10925)

## 50ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்!



நீதியின் கரங்கள் வாழ்க – என்றும்
நிமலனே நிமிர்ந்து வாழ்க; பகை
வாதிக்கும் துன்பம் போக்க – எமக்கு
வழிகாட்டும் தலைவா வாழ்க!

**யசோ ஆட்கிறபிக்ஸ்**

இல: 35A, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10926)

## 50ஆவது அகவை காணும் இன்நன்நாளில் எம் தேசியத் தலைவனை வாழ்த்துகின்றோம்.



இந்துமா கடலின் முத்தே
ஈழமகள் கொடுத்த சொத்தே
அண்ணலே வாழி! வாழி!!
ஆண்டுகள் நூறு வாழி!!

**SINGER**
**சீர்மை**

ம. இக்னேசியஸ்
வருவாய்ப் பகுதி செயலகம் முன்பாக,
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10928)

## வேங்கைகளின் தலைவா பல்லாண்டு வாழ்க!



வேங்கைகளின் தலைவா வாழி – நல்
வீரத்தின் விளைநிலமே வாழி; இருளில்
தூங்கிய தமிழர் கண்கள் – உடன்
துலங்கிட வழி செய்தாய் வாழி!

**சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்.**

நாயகி கட்டடம், யாழ்சாலை,
பரந்தன், கிளிநொச்சி.

(சி-10927)

## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!



தங்கத்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த
தவப்புதல்வன் எம்தலைவருக்கு
பொங்குதமிழ் உணர்வுடனே
பொழிகின்றோம் வாழ்த்துக்கள்!

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**

இல:108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10901)

## அகவை 50இல் வாழ்த்துகின்றோம்



உண்மையும் அறமும்
உயிர் என்று வாழும்
உள்ளம் எம் தலைவனுள்ளம்
உரிமைப் போர் வெல்லும்
வரை எங்கள் மண்ணில்
ஓயாத நெருப்பு வெள்ளம்!

**டாட்என்ரபிறைஸ்**

இல:11,12 நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
இல:02, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(சி-10902)

## ஈழ மண்ணில் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்க! வாழ்க!



புதிய காற்று
ஈழமண்ணில் எழுந்தது
தமிழன் வீரன் என்று
உலகமறிந்த கொண்டது
கார்த்திகை திங்கள்
மழைபொழிகின்ற வேளையிலே
எம் தலைவன் பிறந்தான்
பிரபாகரனாய் வல்வையிலே!
வாழ்க! வாழ்க! வாழ்க!
எம் பிரபாகரன் வாழ்க!
ஈழ மண்ணில் பல்லாயிரம்
ஆண்டுகள் வாழ்க! வாழ்க!

**மைதிலி நகைமாடம்**

இல:89, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10903)

## அகவை 50இல் வாழ்த்துகின்றோம் வாழ்கவென்று!



50 50

*தரணியெல்லாம் தமிழினத்தை
தலை நிமிர வைத்தவனே!
பரணி என்ற இன்னுமொரு
பா பாடவைத்தவனே!
மரணித்த மாவீரர் புகழ் காத்தவனே
அரண் நீ எமக்கு !
வாழ்த்துகின்றோம் வாழ்கவென்று!*

**சுந்தர்சன்**

பிரதான வீதி,
மானிப்பாய்.

50 50

(சி-10904)


எங்கள் தேசப் புதல்வனுக்கு
50ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!
தமிழன் வாழ்விற்கு தமிழீழம்
பெற்றெடுத்த தவப்புதல்வனே!
தேசத்தின் தென்றலாய்
கால் பதித்த வரிப்புலியே!
கலங்காத விழிகொண்டு
பூகம்பப்புயலான புதல்வனே!
தென்றலென நாமும்
வீறு கொண்ட சூரியப்புதல்வனை
வாழ்த்தி நிற்கின்றோம்.
அரச திணைக்கள
உத்தியோகத்தர்கள்.
கிளிநொச்சி மாவட்டம்

## எங்கள் அண்ணனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்!



ஆழமான அற்புத மனிதரின்
பிறப்பால் எம்மினம்
பெருமைகள் அடைந்தது
இன்றைய இன்நாள்
பல்லாண்டு வளர
பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

**சிவனருட் செல்வன் அரிசி ஆலை**
உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

**சம்பந்தன் அரிசி ஆலை**
இல: 93, கந்தபுரம்.

(சி-10916)

## 50ஆவது அகவையில் நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகின்றோம்



தலைமைக்கு நீங்களே தகுந்தவர் – ஈழ
மண்ணுக்கு நீங்களே உகந்தவர்
தமிழர்க்கு வீரத்தைத் தந்தவர் – என்றும்
தலைகுனியாமலே நின்றவர்

**லலிதா புடைவை மாளிகை**
இல: 5,6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
இல:B3, சந்தை வீதி, வவுனியா.

(சி-10917)

## தேசப்புதல்வனுக்கு எங்கள் வாழ்த்துக்கள்!



தரணியில் தமிழரின்
தாயகம் அமைத்திட
தலைவனாய் வந்துதித்த
பெருமகனே!
வாழ்த்துகிறோம் வாழ்க! வாழ்க!!

TILKO Holidays
**Tilko Holidays (Pvt) Ltd**
***HOTELS AND GUEST HOUSES***

| Jaffna | Trinco | Colombo |
| --- | --- | --- |
| 021-2225969 | 026-2223900 | 0112-713803 |

(சி-10918)

## 50ஆவது பிறந்த நாள் வாழ்த்து!



வளமெலாம் நிறைந்த
தமிழீழ மண்ணில் – எமை
வாழவைக்க வந்துதித்த
தலைவா வாழி!
உளமதனில் துயர்மிகுந்த
தமிழர் வாழ்வில்
உறுதிதனை ஊட்டிவிட்ட
தலைவா வாழி!

**ஐசுபி தொழிலகம்**
உடுவில்.

(சி-10762)

## எம் தவப் புதல்வனுக்கு இனியவாழ்த்துக்கள்!



தமிழர் தலை நிமிர்ந்து வாழ வழிசமைத்த
தன்னிகர் இல்லாத் தலைவா நீ வாழி!
தனை ஈன்ற தமிழர் தாயகமும் வாழி!
தன் புகழ் நீடூழி வாழி!

**வேலும்மயிலும் களஞ்சியம்**
353, முதன்மைச்சாலை, கிளிநொச்சி.
(சி-10914)

## பைந்தமிழின் காவலனே! நீடூழிவாழி!



போர்க்கலைக்கு புது வடிவம் கொடுத்தவரே
போர்நடத்திப் புதுப் பரணி படைத்தவரே
பாரதனில் தமிழினத்தின் மானம் காத்த
பைந்தமிழின் காவலனே! நீடூழிவாழி!

**இளவேனில் வாணிபம்**
நடுவப்பணிமனை, கிளிநொச்சி.
(சி-10915)

## பிறந்த நாள் வாழ்த்து



பாரினிலே பலர் பிறந்தபோதும்
படுந்துயர் கொண்ட மக்களை
பாதுகாக்கவென — பாரினிலே
பாயும் புலியாய் புறப்பட்ட வரே!

ஊர் உலகம் வியந்திருக்க
வையகத்தில் ஐம்பதாவது முடிசூடி
மூவுலகில் உன்புகழ் தேன்பாட
முத்தமிழும் உன்பெயர் உச்சரிக்க
ஆனந்தத்தில் குதிக்கின்றோம் — அண்ணா
உன் கனவுகள் நனவாக வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**பணிப்பாளர், பணியாளர்கள்**
**சுடர் நிர்மாணி**
**வில்சன் வீதி, கிளிநொச்சி.**
(3297)


பொன் அகவை காணும் தானைத்தலைவனுக்கு
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
ஆழமான சிந்தனையின் அகல் விளக்கே!
இறுக்கமான முடிவுகளின் திருஉருவே!
கூர்மையான செயற்பாட்டின்
வெளிப்பாடே - எம் தலைவா
வளமான தமிழீழம் விரைவாக நாம் காண
நீ வாழவேண்டும் பல்லாண்டு! பல்லாண்டு!
அந்திவானம் பதிப்பகம்
(சி-10744)


பொன் அகவை காணும் பொற்கிரணமே வாழ்க!
தமிழ்த்தாயின்
தவப்புதல்வன்
தரணி புகழ்
தனித்தலைவன்
ஐம்பதாம் அகவை
காணும் எம் அண்ணா
வாழ்க! பல்லாண்டு
என வாழ்த்துகிறோம்.
பொன்னம்பலம் ஞாபகார்த்த
மருத்துவமனை.
கிளிநொச்சி,புதுக்குடியிருப்பு.
கண்ணன் மருத்துவமனை,
தேவிபுரம்.
(சி-10745)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*அன்பின் பாவலா!*
*எமது பகுதிகளில் படித்த இளைஞர்கள் சமூகப் பணிகளில் பங்கெடுப்பதில்லையே?*

*சுந்தரலிங்கம்,*
*அச்சுவேலி.*

அரசபணியில் அமர்வதே அவர்களின் இலக்காக இருக்கிறது.

*பாவலா!*
*இன்றைய வானொலிகள் பற்றித் தங்களின் கருத்து?*

*கலைச்செல்வி,*
*வட்டக்கச்சி.*

கதைத்தால், சிரித்தால், இரைச்சல் அவ்வளவுதான்.

*பாவலா!*
*தங்களைக் கவர்ந்த அண்மையில் வெளிவந்த நூல் எது?*

*திருச்செல்வம்,*
*வவுனியா.*

ஜெயமோகனின் 'காடு...' முரண்பாடுகள் விமர்சனங்களுக்கப்பால் ஆழமாக யோசிக்க வைத்தது.

*பாவலரே!*
*வரவு-செலவுத் திட்டம் பற்றிக் கூறுங்களேன்?*

*கதிரொளி,*
*மன்னார்.*

பிச்சைக் காரனின் வரவு செலவுப் பதிவேடு....

*அன்பின் பாவலா!*
*யாழ் வல்வெட்டித் துறையில் கொல்லப்பட்ட அப்பாவி இளைஞர்கள் சுட்டுக் கொன்றதன் பின்னணி?*

*குமாரிகா,*
*யாழ்ப்பாணம்.*

பின்னணியில் ஆளும் முன்னணியில் இருப்போரே உள்ளனர்.

*வணக்கம் பாவலா!*
*வரப்புயர நீர் உயிரும் நீர் உயர நெல் உயரும் என்பதுபோல் நாட்டில் படுகொலைகள் உயர என்ன உயரும்?*

*அகல்யா,*
*சுன்னாகம்.*

அச்சமும் பீதியும் உயரும்- ஆட்சியாளர் மீதான அவநம்பிக்கையும் உயரும்.

*பாவலரே!*
*கலாசாரம், பண்பாடு என்பவை எவையெனக் கூறுங்களேன்? (இன்றைய இளைஞர் யுவதிகளுக்காக)*

*சாந்தன்,*
*திருவையாறு.*

காலசாரமும் பண்பாடும் சொல்லித் தெரிவதில்லை அவை மனித பாரம்பரிய விழுமியங்களை ஆதாரமாக கொண்டவையே....

*அன்பின் பவலா!*
*இந்தியாவில் பிரேமானந்தா, ஜெயேந்திரர் என சாமியார்களின் குற்றச் செயல்கள் பட்டியல் நிற்பது பற்றி?*

*சுதா,*
*புதுக்குடியிருப்பு.*

சாமிகள் ஆசாமிகளாக மாறிக் கொண்டே இருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

*பாவலா!*
*பெண்களை இழிவு படுத்தும் சினிமாப் பாடல்களும் பல நாட்கள் திரையிடப்படுகின்றனவே?*

*கானகன்,*
*வவுனியா.*

இவற்றின் ரசிகர்கள் பெரும்பாலும் பெண்களாகவே இருப்பதே அதற்குக் காரணமாகும்.

*பாவலா!*
*உதவி கேட்காமல் நாம் வலிய சென்று உதவி செய்வது தவறா?*

*கோபிகா,*
*ஒட்டுசுட்டான்.*

உபத்திரவங்களுக்கு உதவி செய்யப் போவதுஅதேசமயம் சொல்லாமல் செய்பவோர் பெரியோர் என்ற பழ மொழியையும் நினைவில் கொள்ளுதலும் அவசியமே....

*பாவலா!*
*இராமாயணத்தில் இராமன், வாலியை கொன்றது சரியா?*

*தாட்சாயினி,*
*கிளிநொச்சி.*

இல்லாவிட்டால் இராமாயணத்தில் சுவை இருந்திருக்காதே...

*பாவலா!*
*ஜப்பானியர்களைப் பற்றிக் கூறுங்களேன்?*

*அருச்சுனா,*
*கல்வியங்காடு*

அண்ணாந்து பார்த்து பிரமிக்க வைக்கும் குள்ளர்கள்.




"இது அண்ணா ஜெர்மனியால அனுப்பினது"

"எங்கடா பாப்பம்...ம் என்ன எட்டுமுப்பதில நிக்குது"

"ஓ... அது இப்ப ஜெர்மனி நேரத்தில நிக்குது கொண்டா மாத்துவம்... ம்...ம்... சுக்...."

பெரிய கரைச்சல படுது.... பொறு இந்த ஊரின்ர பேர டயல் செய்ய அந்த ஊருக்குரிய நேரம் வரும்.... ம்...மல்....லா...வி இந்தா இந்தா வந்துட்டுது...'

"ம்... ஓ.... முதலொண்டு கட்டியிருந்தனியெல்லே... அது...."

"அதோ... அது சுவிஸ்ஸிலயிருந்து அன்ரி அனுப்பினது"

என்னடா அதைவிட முதல் ஒரு கோல்ட்செயின் போட்டது கட்டியிருந்தாய் அது வடிவு. அது சரி எல்லாத்தையும் என்ன செய்யிற நீ...

"அப்பப்ப ஆரும் பிரென்ஸ்சுக்குக் குடுத்திடுவன் பிறகென்ன."

"முகமாலை பஸ் வருது போல..."

ஓ... நீ புளியங்குளம் போறனெண்டாய் நான் புளியங்குளந்தான் அதிலிருக்கிற ரெண்டு பேரும் முகமாலையெண்டவை"

"ஆர் உனக்குத் தெரிஞ்ச பெட்டையளே"

"ச்சாய் கதைக்கேக்க கேட்டுக் கொண்டு நிண்டனான்"

"இந்தா பஸ்வந்துட்டுது பிடி மணிக்கூட்டை அதுகள் திரும்பியும் பாராமப் போகுதுகள்"

"ஏன்ரா... இது சரியில்லையே..."

"அண்ணை- கோட் வைச்சுக் கதைச்சாலும் எங்களோடதான் கதைக்கிறியள் எண்டு எனக்கு விளங்குது. சொந்தமா உழைச்சு ஒண்டை எடுத்துக் காட்டி விலாசமடியுங்கோ அப்ப திரும்பிப்பாப்பம். நீ நடவடி பஸ் வந்துட்டுது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-96



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-96

........................................................................
........................................................................
........................................................................
........................................................................

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -95



**சி.முகுந்தன்,**
**சிலையடி,**
**கற்சிலைமடு,**
**ஒட்டுசுட்டான்.**

## பரிசுக்குரிய வரிகள்

*வேதனையில் கதறியழும் இருவர்*
*வேடிக்கை பார்க்கும் பாதுகாப்புப் படை*
*வாடிக்கையானதோ இன்னிலை*
*எமது மக்களிற்கு.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*தமிழ் மகனை கொன்றுவிட்டு அந்த மகனின் தந்தையின்*
*அவலத்தை வேடிக்கை பார்க்கும் சிங்களப்படையே!*
*மிகவிரைவில் எங்கள் மண்ணை விட்டு*
*துரத்தப்படுவீர்கள் அல்லது அழிக்கப்படுவீர்கள் என்பது உறுதி.*

ஐ.வாமதேவா,
கிளிநொச்சி.

*உறவினரை இழந்த துயரத்தில் பரிதவிக்கின்றாய்*
*அவர்களோ அடாவடித்தனத்தில்*
*யாரிடம் நீதி கேட்பது*
*நீ தமிழன் அல்லவா!*

வே.ரதி,
வட்டக்கச்சி.

*உடன் பிறந்த உறவுதனை வழியனுப்பி*
*விட்டிடவே A9 வீதிதனில் என்பிள்ளை*
*வந்தானய்யா! வந்தவன் வீடு வந்து*
*சேர்வதற்குள் இப்படியொரு கொலை வெறியாட்டமா?*

ந.ஜெகதீஸ்வரி,
உருத்திரபுரம்

*அன்னியோன்னியமாய் வாழ்கிறோம்-என*
*அகிலத்திற்கு உணர்த்த முனைந்தாய் நீ*
*அந்நியனான்! நிரூபித்திட்டாயே- என்றுமே*
*அன்பான உறவுகளை அழிக்கும் சிங்கள(மே) னே!*

ந.நவலோகன்,
கிளிநொச்சி.

*மனித நேயம் பற்றித் தெரியாதவனுக்கு*
*எப்படி உயிரின் பெறுமதி புரியும்*
*மனிதா-இவனிடம் கைநீட்டி கெஞ்சாதே*
*காலம் நல்ல பதில் சொல்லும்.*

த.றமா,
வட்டக்கச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.

கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# தமிழாய் வாழ்க....



எங்கள் வானின் எழுச்சிக்கதிர் நீ
ஏங்கள் மண்ணின் புரட்சிப்புயல் நீ
தங்கத்தமிழ்த்தாய் தவமாய் பெற்ற
தானைத்தலைவா.. தமிழர் தலைவா..
இன்றைக்குனக்கு பொன்விழா வயதாம்
இனிதே வாழ்க.. தமிழாய் வாழ்க..

புற நானூற்று செய்திகட்கெல்லாம்
புத்திலக்கணமாய்த் திகழும் மறவன்
புறமுதுகிட்டு பகைவர் ஓட
புத்துயிர் பெற்று தமிழ்மண் சிலிர்க்க..
அறவழி நின்று களம் பல வென்றாய்
ஐயா உனக்கு அகவை ஐம்பதாம்..

எங்கள் மண்ணில் உயிராய் உறைந்தாய்
எங்கள் தமிழின் உணர்வில் நிறைந்தாய்
எங்கள் வாழ்வில் ஒளியாய் புகுந்தாய்
என்றும் வெல்வாய்
ஈழம் தருவாய்..

## தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-10919)

# வரலாறு, வல்லமை, வழிகாட்டி

அகவை 50 நிறைவில்





வீரம் விளைக்கும் வயலே
விடுதலைப் பயிரின் மழையே
கருணை பொழியும் கடலே
தமிழர் தேசப் பலமே
துன்பம் தாங்கும் துணையே
இன்பம் தந்த உறவே
ஈழம் செய்யும் உளியே
சொந்தம் என்று உனையே
சொல்லி..
ஆயிரம் கோடி ஆண்டுகள் ஈழம்
ஆண்டிட வேண்டி வாழ்த்துகிறோம்
வாழ்க! வாழ்க! வாழ்க!

## அருச்சுனா புகைப்படக் கலையகம்

கிளிநொச்சி—புதுக்குடியிருப்பு

(சி-10920)

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.